சுபானு-மாசி FEBRUARY 1944 விலை 6 அணா

15

# காவேரி

115

3-7




READ The Cauveri -
IDEAL MAGAZINE FOR THE HOME

# ரஸிகர்கள் நாடும்

## கிட்டப்பா புகையிலை




சங்கீத உலகில் அழியாப் புகழ் படைத்த கிட்டப்பாவின்
— இனிமையான கானத்தை ரஸிக்காதவர் யார்? —

அவ்வாறே அவருடைய பெயர் பெற்ற புகையிலையையும் சீவலையும் விரும்பாதவர் இல்லை எனலாம். ஒருதரம் உப
— யோகித்தால் அவைகளையே தேடியலைவார்கள். ஏன்? —

உயர்ந்த **சிவபுரிப் புகையிலையினால்** தயாரிக்கப்பட்டது **இயற்கையான சுவை, மணம், குணம்** இவை ஒருங்கே
— பொருந்தியது. இதுவே அதன் வசீகரசக்தி —

**கிட்டப்பா சீவலும்** இதே ரகம் தான். சங்கீத வித்வான்கள் யாவரும் இதையே உபயோகிக்கின்றனர். சங்கீதத்திற்கும் இவைகளுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது போலும்!

**ஒருதரம் உபயோகித்துப் பாருங்கள்**

தயாரிப்பவர்கள்

சென்னை பிராஞ்சு:-
16, ஹைரோட்
திருவல்லிக்கேணி, சென்னை.

**A. D. சுல்தான் & Co.,**
கும்பகோணம்

# இந்தியக் கைத்தொழிலை நீங்கள் ஆதரியுங்கள்




குழந்தைகள் இருக்கும் வீட்டிற்கு நீங்கள் வெறுங்கையுடன் போக மாட்டீர்கள். கைக்கு எளிதாய் உங்கள் பணப்பைக்கும் எளிதாய் **வி. எஸ். & ஸன்ஸ்** பெப்பர் மெண்ட் ஒரு டின் வாங்கிக் கொண்டு போங்கள். **வி. எஸ். & ஸன்ஸ்** பெப்பர்மெண்டையே குழந்தைகள் விரும்பித் தின்னும். அக்குழந்தைகளின் மென்மொழிகளில் இப்பெப்பர்மெண்டின் இனிமையை நீங்களே கண்டு ஆனந்தப்படுவீர்கள். உயர்ந்த முறையில் கை தேர்ந்த வேலைக்காரர்களால் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

**ஒரு தடவை வாங்கிப்பாருங்கள்.**

## தென் இந்தியா கன்பெக்ஷனரி தொழிற்சாலை

புரோப்ரைடர்கள்:— **வி. எஸ். & ஸன்ஸ்**

**கும்பகோணம்.**

## The Southern India Confectionery Factory

Proprietors:- **V. S. & Sons,**

**KUMBAKONAM.**

# இண்டோ கம்மர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபிஸ்:
**மாயவரம்**

★

ஸென்ட்ரல் ஆபிஸ்:
**மதராஸ்**

ஸிடி ஆபீஸ்கள் :

**சைனாபஜார் ரோட், மாம்பலம், மைலாப்பூர்**

வாக்களிக்கப்பட்ட மூலதனம் ரூ. 25,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 18,75,000
சேமிப்பு நிதிகள் ரூ. 1,27,500

●

கிளை ஆபீஸ்கள் :

| | | |
|---|---|---|
| ஆமதாலவலஸா | கும்பகோணம் | தஞ்சாவூர் |
| அனகாபள்ளி | மதுரை | திருநெல்வேலி |
| சிதம்பரம் | பாலக்காடு | திருவாரூர் |
| காஞ்சீவரம் | புதுக்கோட்டை | திருச்சினாப்பள்ளி |
| ஈரோடு | சீயாழி | வேலூர் |
| காரைக்குடி | தாடேபள்ளிக்கூடம் | விருதுநகர் |
| | | விஜயநகரம் |

எல்லாவித பாங்க் அலுவல்களும் ஏற்றுக்கொண்டு நடத்தப்படும்.

S. N. N. Sankaralinga Iyer,
Managing Director.

## ஜவுளி தினுசுகள்

:: **தேவைக்கு!**

நம்பிக்கைக்கு உகந்ததாய்த் தற்கால மோஸ்தரில்
உடைக்குத் தக்க போட்டி விலையில்

## புதுச் சரக்குக்கள் கிடைக்குமிடம்

# M. N. நாகேந்திரம் ஸன்ஸ்

**ஜரிகை பட்டு ஜவுளி வியாபாரம்.**

(மலைவாசல் உள்மண்டபம்)

**தெப்பக்குளம் போஸ்ட், திருச்சினாப்பள்ளி.**

N. B.-உயர்ந்த பனாரிஸ் தினுசுகள் 6, 8 கெஜம் சேலைகளும் ஏராளமாய் இருக்கின்றன.

MADRAS
18 APR 194




# T.V.S. முன்னிற்கிறது!



T.V.S. கியாஸ் பிளாண்டுகள் மூன்று வருஷ காலமாக விற்பனையாகி வருகின்றன. இந்தியாவில் இன்று 5,000 க்கு மேல் உபயோகத்திலிருக்கின்றன. இதன் சிறந்த உழைப்பையும், சிக்கனச் செலவையும் கண்டு, கார், டிரக் சொந்தக்காரர்கள் பூரண திருப்தி அடைந்திருக்கின்றனர். தமது வெகுநாளைய அனுபவத்தால்தான் T.V.S. இஞ்சினீயர்கள் தலைசிறந்த கியாஸ் பிளாண்டுகளைத் தயாரிப்பது சாத்தியமாகிறது.

இந்தப் பிளாண்டின் திறமையைப் பிரத்யக்ஷமாக காண்பிக்கும்படி டிஸ்ட்ரிப்யூட்டர்களிடம் கேளுங்கள்.

**பிரதான அம்சங்கள்**

- **ஸ்டார்டிங் அதிசுலபம்:**—சீக்கிரத்தில் ஸ்டார்ட் ஆகிவிடும்.
- **மும்முறை வடிகட்டும் வசதி:**—சுத்தமான கியாஸ். மேற்பார்வை செலவு குறைவு.
- **சம கனம்:**—டயர் தேய்வு குறைவு. பிரேக்கிற்கு பந்தோபஸ்து அதிகம்.
- **மிகவும் நம்பிக்கையானது:**—ஆரம்பத்திலிருந்து முடிவுவரை நம்பிக்கையான உழைப்பு.
- **நேர்த்தியான தோற்றம்:**—மற்றெல்லா பிளாண்டுகளையும்விட சிறந்ததோற்றம்.

வாங்குமுன் T·V·S கியாஸ் பிளாண்ட் மாதிரிகளைப் பாருங்கள்.

(கார், லாரிகளுக்கு ஏற்றவை)

**T.V. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ், லிமிடெட்**

**மதுரை & சென்னை.**

TVSK - 7 TM

# ★ பொருளடக்கம் ★

சுபானு
மலர் 3

மாசி
இதழ் 7


| | | |
|---|---|---|
| சிறைக் கதவுகளைத் திறக்க வேண்டும் ... | ... | 5 |
| கதம்பம் ... | ... | 8 |
| அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள் ... | 'ராமய்யா' | 10 |
| பிரசார யுத்தம் ... | க. சந்தானம் | 13 |
| மந்திரி சபை நினைவுகள் ... | தி. சே. சௌ. ராஜன் | 18 |
| ஆண்மையும் பெண்மையும் ... | வே. நாராயணன் | 23 |
| மனமாற்றம் ... | 'ஹரிணி' | 25 |
| ஏழையின் பிரார்த்தனை ... | திரு.வே. சிவக்கொழுந்து | 31 |
| போங்கோன்னு ... | ரா. வீழிநாதன் | 33 |
| உபய களத்திரம் ... | கமலா பத்மநாபன் | 38 |
| அழைப்பு ... | ஸ்ரீ. ரா. தேசிகன் | 45 |
| புத்தக விமர்சனம் ... | | 49 |
| உடைந்த வீணை ... | கே. சுந்தரம்மாள் | 50 |


குறிப்பு:—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப்பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.


நெ. 111, நயினியப்ப நாயக்கன் தெரு, பி. டி. மதராஸ்.

FAMOUS SHOP

★ கியாதி பெற்ற

ஜவுளிக் கடை ★

S. R. B. MUTHUKRISHNA IYER

SRB

Mark of Quality

"கலியாண காலத்திற்கு"

பிரத்தியேகமாகத் தருவிக்கப்பட்டு தற்சமயம் கைவசமுள்ள ஏராளமான நூதன வர்ணமும் வனப்பும் வேலைப்பாடும் அமைந்த சேலைகள், தாவணிகள், அங்கவஸ்திரங்கள், துப்பட்டாக்கள் ரவிக்கைகள், பாவாடைகள் முதலியன.

ஜவுளி தினுசுகள்.

குணத்தில் உயர்ந்தவை; நியாயமான விலைக்குக் கிடைப்பவை; உழைப்பிற்கு உத்தரவாதம் பெற்றவை; அழகுக்கு அழகு செய்பவை; அறிஞர்களால் கொண்டாடப்பட்டவை. ஆகவே, உங்களுக்குத் தேவையானவற்றை தேர்ந்தெடுத்துக்கொள்ள 111, நெம்பர் கடைக்கு விஜயம் செய்யுங்கள்.

S. R. B. முத்துகிருஷ்ண அய்யர்

(Formerly S. R. பாலுசாமி அய்யர் & ஸன்ஸ்.)

மதுரை, காசி, கராச்சி பட்டு ஜவுளி வியாபாரம்,

நெ. 111, நயினியப்ப நாயக்கன் தெரு-பி. டி. மதருஸ்.

(Phone: 2314) Tel: BALMO

235, கீழ மாரட் வீதி, மதுரை. Tel: MUTHUCO

# காவேரி

| சுபானு<br>மலர் 3 | "சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச்<br>செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"—பாரதியார் | மாசி<br>இதழ் 7 |
|---|---|---|


# சிறைக் கதவுகளைத் திறக்கவேண்டும்

—x—

இந்திய அரசியல் அரங்கத்தில் ஏற்பட்டுள்ள இருளடைப்பை அகற்றப் பிரிட்டிஷ் கவர்மெண்டாருக்கு யாதொரு உத்தேசமுமில்லை என்பது சில தினங்களுக்கு முன்பு மத்திய சட்ட சபையில் நடந்த விவாதங்களிலிருந்து தெளிவாயிற்று. அதுமட்டுமன்று. தேசீயத் தலைவர்களைச் சீக்கிரத்தில் விடுவிக்கப் போகிறார்கள் என்ற வதந்தியும் ஆதரவற்றது என்பதும் வெளியாயிற்று. பிரிட்டிஷாரின் மனப்போக்கையும் ஒருவாறு வெட்டவெளிச்சமாக எடுத்துக்காட்டிவிட்டார் மத்திய கவர்மெண்டு ஹோம்மெம்பர், ஸர் ரெஜினால்ட் மாக்ஸ்வெல்.

இவை, இரண்டு விவாதங்களிலிருந்து வெளியாயின. ஸ்ரீமதி ஸரோஜினி நாயுடுவின்மீது பிறப்பித்த தடை உத்தரவைக் கண்டிக்க ஸ்ரீ அகில் சந்திர தத் என்ற அங்கத்தினர் ஓர் தீர்மானம் கொண்டுவந்தார். இத்தகைய உத்தரவுகள் நாட்டு மக்களின் மூல உரிமைகளைப்பறிமுதல் செய்வதாயிருக்கின்றனஎன்று கண்டித்தார். எல்லாக்கட்சியினரும் அவரைப் பின்பற்றிப் பேசினார்கள். கவர்மெண்டார் காங்கிரஸ்மீது செய்துவந்த துஷ்பிரசாரத்தைத் தகர்த்தெறிந்தார் ஸ்ரீமதி ஸரோஜினி என்பதற்காக இத்தடை உத்தரவா என்றார் ஒருவர். தலைவர்களை நீதிபதிகள் முன்பு கொண்டுவந்து விசாரியுங்கள் என்று சவால் விடுத்ததினால் மூண்ட ஆத்திரமா இத்தடையுத்தரவு என்றார் மற்றொரு அங்கத்தினர்.

ஸர் மாக்ஸ்வெல் கவர்மெண்டு தரப்பில் பதிலளிக்கையில் ஸ்ரீமதி ஸரோஜினியின் உடல்நிலை குன்றியதினால்தான் அவர் விடுவிக்கப்பட்டார் என்றும், அவர் ஆகஸ்ட் அறிக்கைக்குச்சாதகமாகப் பிரசாரம்செய்ய முற்பட்டார் என்றும், அதனால்தான் அவர்மீது தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும் கூறினார். அவர் விடுத்த அறிக்கைகள் காங்கிரஸ் திட்டத்தை ஆதரிப்பனவாக இருந்தனவே தவிர அதை நிராகரித்துச் சமாதானம் தேடுவதாக இல்லை என்றும் குறிப்பிட்டார் ஸர் மாக்ஸ்வெல்.

"எத்தகைய கஷ்டம் நேரிடினும் நாங்கள் காங்கிரஸின் மூலாதாரமான கொள்கைகளை விட்டுவிடோம்" என்று ஸ்ரீமதி ஸரோஜினி பத்திரிகைக்காரர்களுக்கு அளித்த பேட்டியில் சொன்னார். இதைச் சுட்டிக்காட்டி, ஸர் மாக்ஸ்வெல் காங்கிரஸ் சமாதானத்திற்குத் தயாராயில்லை என்ற முடிவு கட்டிவிட்டார். இதனோடு நில்லாது, ஸ்ரீமதி ஸரோஜினியின் சாதாரண நடவடிக்கைகளை நாங்கள் கட்டுப்படுத்தவில்லை, பொதுமக்களோடு பேசுவதைத் தானே கட்டுப்படுத்தி விட்டோம், இதனால் அவர்கள் உரிமை ஒன்றும் பாதிக்கப்படவில்லை என்றும் கூறினார். பொதுஜன சேவையே நமது தலைவர்களின் சுவாஸம். மக்களுடன் வைத்துக்கொள்ளும் தொடர்புதான் அவர்களின் அன்ன ஆகாரம். இதைத் தடுத்துவிட்டால் அவர்கள் வெறும்கட்டைகள் போன்றவர்களே! இதை ஸர் மாக்ஸ்வெல்லும் நன்குஉணர்வார். ஆனால் அவர் பேசுவது ஏளனப்பேச்சு, அடிமை மக்களை அவமதிக்கும் பேச்சு. ஸர் மாக்ஸ்வெல்மீது இத்தகைய தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டால் என்ன கோபாவேசம் வரும்? ஆளும் கோஷ்டியார் இதை நினைப்பதில்லை.

கவர்மெண்டாரின் யதேச்சாதிகாரத்தால் சிறைசெய்யப்பட்ட 17500 நபர்களில், 5600 நபர்கள்தாம் இன்னும் சிறையில் இருக்கிறார்களாம். இப்படிச் சிறையிலிருந்து வெளியேறின எவர்மீதும் இத்தகைய தடையுத்தரவு பிறப்பிக்கப்படவில்லையே, அதில் அனேகர் சட்டத்துக்கு முரணானது என்று கலைக்கப்பட்ட சபை அங்கத்தினர்களாயிற்றே எனக் கேட்கப்பட்டது. பதிலில்லை. காங்கிரஸ் ஜப்பானை வரவேற்கத் தயாராக இருந்தது என்றும், நாட்டில் ஏற்பட்ட கலகங்களுக்கும் ஹிம்ஸா முறைகளுக்கும் அதுதான் பொறுப்பாளி என்றும் இந்நாட்டிலும் வெளிநாட்டிலும் பிரசாரம் செய்துவந்ததை ஒரு நொடியில் ஸ்ரீமதி ஸரோஜினி தகர்த்தெறிந்துவிட்டார் என்பதினால்தானே அவர்மீது தடைஉத்தரவு என்று பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். விவாதத்திலிருந்தும் கவர்மெண்டுதரப்பில் பேசிய

மாக்ஸ்வெல் துரையின் பிதற்றலிலிருந்தும் இது தெளிவாகிறது. இல்லையேல் ஸ்ரீமதி நாயுடுவின் பத்திரிகைப் பேட்டிப் பேச்சை அயல் நாடுகளுக்குச் செல்லாமல் ஏன் தடை செய்யவேண்டும்? அவர்தான் ஆகஸ்டு தீர்மானத்தை ஆதரித்துப் பேசியிருக்கிறார் என்று கருதுகிறாரே ஸர் மாக்ஸ்வெல். அப்படியானால் வெளி நாடுகளிலுள்ளவர்கள் இதைத் தெரிந்துகொண்டால், தேசியத் தலைவர்களைச் சிறையிலடைத்தது சரி என்று பிரிட்டிஷாரைத் தட்டிக்கொடுப்பார்களே! ஏன் இதை வெளி நாடுகளுக்குச்செல்ல அனுமதிக்கக்கூடாது?

உண்மையில், ஸ்ரீமதி நாயுடு ஆகஸ்ட் தீர்மானத்தைப்பற்றி ஒன்றும் கூறவில்லை. நாட்டில் மூண்ட கலகங்களுக்கெல்லாம் காங்கிரஸ் பொறுப்பாளியல்ல என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார். பிரிட்டிஷ் கவர்மெண்டார் புத்தக ரூபமாயும், அறிக்கைகள் மூலமாயும் காங்கிரஸ்காரர்கள் ஜப்பானை வரவேற்கிறார்கள் என்று ஓர் பொய்க் கோட்டை கட்டி உலக மக்களை ஏமாற்றி வந்தார்கள். இதை ஸ்ரீமதி ஸரோஜினி ஒரு நொடியில் தகர்த்து எறிந்துவிட்டார், பத்திரிகைக்காரர்களுக்கு அளித்த பேட்டியில். இரண்டு வருடகாலமாகக் கஷ்டப்பட்டுக் கட்டிய கோட்டையெல்லாம் பொலு பொலு என்று உதிர்ந்து பாழாவதை யார்தான் காணச் சகிப்பார்கள்? எனவே இப்பேச்சு வெளிநாடுகளுக்கு எட்டாதவண்ணம் செய்ய எண்ணி, தடை உத்தரவு பிறப்பித்திருக்கவேண்டும். பிரிட்டிஷாரின் நிலை மிக்க பரிதாபகரமாய் இருக்கிறது.

இரண்டாவது விவாதம் இன்னும் விசேஷமானது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குக் கண்ணாடி காட்டுவது போன்றுள்ளது. ஸ்ரீ லால்சண்டு நவல்ராய் என்பவர் அரசியல் ஸ்தம்பனத்தை நிவர்த்தி செய்யவும் யுத்தமுயற்சியைத் துரிதப்படுத்தவும் அரசியல் கைதிகளை உடனே விடுவிக்கவேண்டும் என்று பிரேரேபித்தார். நாட்டில் நெருக்கடியான நிலைமை தீர்ந்துவிட்டது, இனியும் தலைவர்களைச் சிறையில் வைத்திருப்பது தவறு என்று பல அங்கத்தினர்கள் பேசினார்கள். இவர்கள் பேசியதில் விசேஷமான அம்சம் ஒன்றுமில்லை. ஆனால் இதற்குப் பதிலளித்த ஹோம் மெம்பர் பேச்சு பரிசிலனைக்குரியது.

"அரசியல் ஸ்தம்பனம் என்றால் என்ன? அகராதியில் 'எங்கும்போக முடியாத நிலை' என்று அவ்வார்த்தைக்கு அர்த்தம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. யார் இப்பொழுது இந்நிலையில் இருக்கிறார்கள்? சட்டசபைகள் பல மாகாணங்களில் வேலை செய்து வருகின்றன; ஆறு மாகாணங்களில் மந்திரி சபைகள் பதவியில்வீற்றிருந்து யுத்தமுயற்சிக்கு உதவியளித்து வருகின்றன. மத்திய கவர்மெண்டார் தங்கு தடையின்றி அரசு புரிந்து வருகிறார்கள். பதினொரு இந்தியர்கள் மத்திய அரசாங்க நிர்வாக சபையில் வீற்றிருக்கிறார்கள். ஆகையால் அரசியல் ஸ்தம்பனம் என்பது காங்கிரஸ் கட்சி தானே தேடிக்கொண்ட உபாதி; அது யுத்த நிர்வாகத்தையோ அல்லது மாகாணத்திலுள்ள மக்களின் நலனையோ பாதிக்கவில்லை." இவ்வாறு மொழிந்திருக்கிறார் ஸர் மாக்ஸ்வெல்.

அவர் கூறுவதில் கொஞ்சம் உண்மை இருக்கிறது என்பதை நாம் மறுக்கமுடியாது. "அரசியல் நெருக்கடியினாலோ அல்லது தேசத் தலைவர்கள் சிறைப்பட்டதினாலோ பிரிட்டிஷ் நிர்வாகம் தடைபடவில்லை." என்கிறார். ஆனால் மக்களின் உணர்ச்சி தடைபட்டுவிட்டது. அவர்களின் ஆன்மா சிறைப்படுத்தப்பட்டுவிட்டது. இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தினாலும், பலாத்கார பயத்தினாலும் நம் நாட்டில் நிர்வாகம் நடைபெற்றுவருகிறது. பல மாகாணங்களில் மந்திரி சபை நடப்பது வாஸ்தவம். ஆனால் அவை ஜீவனற்ற சபைகள், சுதந்திரமற்ற பொம்மைகள்; மக்களின் பிரதிநிதி சபைகள் அல்ல, ஜனநாயகத்தின் கன்றுகளல்ல, வைக்கோல் திணிக்கப்பட்ட போலிக்கன்றுகள். இவைகளைக் கொண்டு பிரிட்டிஷார் இந்திய அன்னையின் பாலைக் கறக்கப்பார்க்கிறார்கள். அன்னையின் கால்கள் கட்டப்பட்டுள்ளன. பூரண ஆதரவுடன் பசு பால் கொடுக்கவில்லை. தான் ஈன்றெடுத்த கன்றுகளுக்கென்று பசு பாலை எக்கிக்கொள்கிறது. ஆனால் பிரிட்டிஷார் விட்டபாடில்லை. ஜீவனற்ற வைக்கோல் கன்றுகளைச் சாக்கிட்டு மெஷினின் உதவியால் பாலைக் கறக்கிறார்கள். மாடு இளைத்துப்போகின்றது. ஜீவனற்று வலி குன்றி நிற்கிறது. ஆனால் அதைப்பற்றிக் கவலையில்லை. பால் கறக்கிறதா இல்லையா என்று மார்பு தட்டுகிறார் ஸர் மாக்ஸ்வெல். வாயில்லாப் பிராணியாக நிற்கிறது இந்தியத் தாயாகிய பசு. "அம்மா" என்று அலறக்கூட முடியாமல் வாய்ப்பூட்டு. இவ்வுண்மை யாருக்குத் தெரியப்போகிறது! யுத்தநிதிக்குப் பால் கறக்கிறது என்று மட்டும் இதரநாடுகளில் செய்தி வெளியாகிறது.

இவ்வளவோடு நில்லாது, மாகாணங்களிலுள்ள மக்களின்நிலை பாதிக்கப்படவில்லை என்றும் பறைசாற்றுகிறார். இது முற்றிலும் உண்மைக்கு மாறான வார்த்தை என்று துணிந்து கூறலாம். பஞ்சம் தலைவிரித்தாடுகிறது; மக்கள் கிலிபிடித்துப் பேசத் திறனற்றுக்கிடக்கிறார்கள். பல மாகாணங்களில் சட்டசபைகள் இல்லை. யதேச்சாதிகாரம் நடைபெறுகிறது. மக்களின் நலன் பாதிக்கப்படவில்லை என்றால் இதை யார் நம்பமுடியும்? இஷ்டப்படி வெளிநாடுகளிலிருந்து கவர்னர்களும்

அதிகாரிகளும் வருவிக்கப்பட்டுக் கொழுத்த சம்பளத்தில் புகுத்தப்படுகிறார்கள். வரிப்பளு தாங்கமுடியவில்லை. நன்மையோ கிடையாது.

"காங்கிரஸ் யுத்த முயற்சிக்கு உதவியளிப்பதாக ஸ்ரீமதி நாயுடுவின் பேச்சிலிருந்து தெரியவில்லை. காங்கிரஸ் தலைவர்களை விடுவித்தால் பாதகமே ஏற்படக்கூடும். கவர்மெண்டார் இவ்விஷயத்தில் விஷப்பரீக்ஷை செய்யத் தயாராக இல்லை. தலைவர்களைச் சிறையிலடைத்து வைத்திருப்பது அவர்களுடைய அரசியல் கொள்கைக்காக அன்று, அவர்களால் யுத்த ஸேவைக்குப் பாதகமேற்படாமலிருப்பதற்காகவே. யுத்த முயற்சிக்குப் பாதகம் விளைவிக்க மாட்டார்கள் என்ற உறுதிமொழி கிடைத்தாலொழிய, தேசியத்தலைவர்களை விடுவிக்க முடியாது" என்று தெளிவாகக் கூறிவிட்டார் ஸர் மாக்ஸ்வெல்.

இதைச் சற்று ஆராய்வோம். யுத்த முயற்சிக்கு உதவி அளிக்கவே காங்கிரஸ் முயன்றது. கிரிப்ஸ் திட்டத்தைப் பரிசீலனை செய்யும் போதும், அவ்வெண்ணமே அதற்கு. காங்கிரஸ் யுத்த முயற்சிக்கு விரோதி என்று நினைப்பது தவறு. இந்நாட்டு மக்களைத் தட்டி எழுப்பவேண்டுமென்றால் அவர்கள் உள்ளத்தில் பதிந்து கிடக்கும் உணர்ச்சிகளை எழுப்பவேண்டும். அவர்களுக்கு உற்சாக மூட்டவேண்டும். அதற்கு வேண்டிய மருந்து சுதந்திரம்தான். இதை அளிப்பதாக வாக்குறுதி கொடுத்தால் காரியம் கைகூடும் என்றது காங்கிரஸ். இப்பொழுதும் தலைவர்களை யாதொரு நிபந்தனையுமின்றி விடுவித்தால் நாட்டில் ஓர் உணர்ச்சி ஏற்படும். சமரஸத்திற்கு அடிப்படையான காரியம் இது. இந்நாட்டு மக்களின் மனப்பூர்ணமான உதவி என்ன என்பதை ஸர் மாக்ஸ்வெல் அறியார். அதை அவர் அறிந்திருந்தால் தலைவர்களை விடுதலை செய்வது திண்ணம். அசட்டுப்பிடிவாதமுள்ளவர்களல்ல நம் தலைவர்கள். இத்தருணத்தில் ஏன் பிரிட்டிஷார் பெருந்தன்மையாகச் சிறைக் கதவுகளைத் திறக்கக்கூடாது?

திறந்தால் யுத்த முயற்சிக்கு அபாயம் நேரிடலாம் என்று பூச்சாண்டி காட்டுவது பேடித்தனம். பிரிட்டிஷ் அரசாங்கம் அடக்குமுறையைக் கையாள்வதில் நிகரற்றது என்றுதான் பெயர் வாங்கிவிட்டதே!

உண்மையான வாதமல்ல இது. பிரிட்டிஷார் யுத்தம் முடியும் வரை இந்தியப் பிரச்னையைக் கடப்பில் போடத் தீர்மானித்து விட்டனர்போலும். இதை மறுப்பதற்காகத்தான் இத்தகைய வாதமெல்லாம்.

இறைவன்தான் அவர்களுக்குப் புத்திபுகட்ட வேண்டும்.


சங்கீத ரஸிகர்களுக்கு

"கான கலாதரரின்" செய்தி

Madura Mani Iyer
Sangeetha Vidwan



No. 22, Dubash Agraharam
MAYAVARAM
7-1-'44

கும்பகோணம் நேஷனல் ரேடியோ கம்பெனியாரால் செய்யப்படும் ஒலிபரப்பு ஏற்பாடுகள் மிகவும் நன்றாக இருக்கின்றன. எனது மனமார்ந்த ஆசிகளை அவர்களுக்கு நான் அளிக்கிறேன்.

(Sd) Madura Mani Iyer.

சிறந்த ஒலிபெருக்கி ஸ்தாபனம்:-

"நேஷனல் ரேடியோ"

பிரம்மன்கோவில் தெரு, கும்பகோணம்.

மின்சார வசதி இல்லாத இடங்களிலும் "நேஷனல் ரேடியோ" ஒலிபெருக்கிகள் பாட்டரியுடன் அமைக்க ஏற்பாடு செய்யப்படுகின்றன.

# கதம்பம்

## வாயில்லாப் பிராணிகள்!

'வாயில்லாப் பிராணிகள்' என்று வெகு அலக்ஷியமாய் மிருகங்களைப் பலர் கூறுவர். மிருகங்களுக்கு வாயும் உண்டு, வயிறும் உண்டு, மற்ற எல்லாம் மனிதனைப்போல் உண்டு, அறிவும் உண்டு' என்பதை அறிவற்ற பலர் சிந்திப்பதில்லை.

மக்கள் பஞ்சத்தால் வாடுகின்றனர், மடிகின்றனர் என்றெல்லாம் பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றன. உணவின்றி உயிர்விட்ட பிராணிகளைப்பற்றி நமக்குச் செய்திகள் கிடைப்பதில்லை.

மக்களுக்கு உணவளிக்க 'ரேஷன்' திட்டம் உள்ளது. பிராணிகளின் உணவு விஷயமாய் எவ்வித திட்டமும் கிடையாது. இப்படிச் சுயநலங்கொண்டு மனிதர்கள் செய்வது அழகல்ல என்பதை விளக்கிக்காட்ட ஒரு யானை சங்கல்பம் செய்துகொண்டது ஆச்சரியமல்லவா?

ஆமதாபாத் நகரிலுள்ள 'ஸ்வாமி நாராயண் கோவில்' யானை அந்த ஊர் கலெக்டர் ஜே. ஜி. ஸிம்ஸ்துரை முன்பாகத் தோன்றி தன் துதிக்கையில் கொண்டுள்ள ஒரு மனுவை நீட்டிற்று. அந்த மனுவில்கண்ட விஷயமாவது :—

"மனிதர்கள்போல் மிருகங்களும் யுத்த முயற்சியில் ஈடுபட்டுள்ளன என்பதைத் துரை அவர்கள் அறிவீர்கள். ஆகையால் மிருகங்களின் உணவு விஷயமாகச் சர்க்கார் சிரத்தை எடுத்துக்கொள்ளவேண்டும். நான் கோவிலில் கைங்கரியம் செய்தாலும், அரசாங்கத்துக்கும் என்னாலான சேவை செய்துள்ளேன். யுத்த ப்ரசார சபையார் பல தடவைகளில் என் உதவியைக்கொண்டே கூட்டம் கூட்டியுள்ளார்கள். எங்களுக்கு மனிதர்களைப்போல் பேசத்தெரியாத காரணத்தாலேயே ரேஷன் கொடுபடவில்லை. அது ஞாயமன்று. எனக்கு ஆகார ரேஷன் அரிசி அல்லது கோதுமை கிடைக்க உத்தரவு செய்யப் பிரார்த்திக்கிறேன்."

"கலெக்டருக்கு மூளை பிரகாசமாயிற்று. யானையின் மனுவில்கண்ட காரணங்கள் அவருக்குச் சரியெனத் தோன்றி அந்த யானைக்குக் கோதுமை ரேஷன் கொடுக்கச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்" என்று பத்திரிகைச் செய்தி கூறுகின்றது.

ஆனால் ஒரு எச்சரிக்கை. அதிக அரிசி கிடைக்கவேண்டி ஒரு யானையை வைத்துக்கொண்டு அதன் நிமித்தம் அதிக ரேஷன் வாங்கித் தின்றுவிடலாமென்ற அசட்டு யோசனையைக் கைக்கொள்ளாதீர்கள்!

## வள்ளலாரின் பெருமை அறியாமை!

அரண்மனை போன்ற அழகிய மாளிகை. சுகமான அறைகள். ஜில்லென்று வீசும் காற்று. சொகுசான கட்டில். 'படுத்துக்கொள், படுத்துக்கொள்' என்று கெஞ்சி அழைக்கும் மெத்தை, தலையணைகள். பக்கத்தில் தேவைகளைப் பூர்த்திசெய்யக் கட்டழகு வாய்ந்த கொஞ்சுமொழி பேசும் இளம் கன்னியர்கள். இப்படிப்பட்ட இன்பம்வேண்டுமா அல்லது படைபடைக்கும் வெய்யிலில் 'டிரில்' பழகும் துன்பம்வேண்டுமா என்று கேட்டால் எப்படிப்பட்ட வீராதி வீரனும் 'அந்த இன்பத்தையே நாடுவான்!

அப்படிப்பட்ட இன்பத்தை அனுபவிக்க உதவிய ஒரு வள்ளலாருடைய அருமை தெரியாமல் லாகூர் கோர்ட்டார் 5வருஷம் கடுங்காவல் தண்டனை அளித்தது நீதியாகுமா? விஷயத்தை விளக்குவோம்.

சில சோல்ஜர்களுக்கு ராணுவ ஒத்திகைகள் துன்பகரமாகத்தோன்றின. வியாதியென்று டாக்டர்களிடம் 'சர்டிபிகேட்' கேட்டார்கள். முயற்சிபலிக்கவில்லை. அப்பொழுதுதான் நமது வள்ளலார் தோன்றினார். வள்ளலார் ஆஸ்பத்திரியில் வேலைபார்க்கும் மூளையுள்ள ஒரு கம்பவுண்டர். சோல்ஜர்கள் அவரது உதவியை நாடினார்கள். வள்ளலார் நபர் ஒன்றுக்குப் பத்து ரூபாய் வீதம் வாங்கிக்கொண்டு சுரம் வரக்கூடிய மருந்தை ஊசி வழியாகப் பிரயோகித்தார். சோல்ஜர்களுக்குச் சுரம்கண்டது. டாக்டர்கள் அவர்களைப் படுக்கையில் கிடத்தினார்கள், சோல்ஜர்கள் இப்படியாக இன்பத்தைச் சுலபமாக அடைந்தார்கள். மற்ற சோல்ஜர்களும் இன்பமடையவேண்டிக் கம்பவுண்டர் அருளை அடைந்து கட்டில் சுகத்தை அனுபவிக்க எத்தனிக்கவே உண்மை எப்படியோ வெளிப்பட்டுவிட்டது.

"மாக்ஷிமைதங்கிய மன்னர்பிரானின் சேனைகளின் ஆரோக்யத்தைக் கெடுத்ததாக" கம்பவுண்டர் கைது செய்யப்பட்டார். ஐந்து வருஷம் கடுங்காவல் தண்டனை அடைந்தார்.

வள்ளலார் ஹைகோர்ட்டில் அப்பீல் தாகல் செய்தார். வள்ளலாரின் அருமையைக் கொஞ்சம் உணர்ந்திட்ட நீதிபதி தண்டனையை மூன்று வருஷகாலமாக்கினார். நன்றிகெட்ட உலகமெனச்சபித்தாரோ வள்ளலார்என்பதை நம்மால் திட்டமாய்க் கூறமுடியவில்லை.

## அநீதி

கேந்திர ஸ்தானங்களில் வெள்ளைக்காரர்களை நியமித்தல் பிரிட்டிஷ் சர்க்காரின் பிரசித்திபெற்ற ராஜதந்திர முறை. யுத்தத்தின் பெயரால் பல வெள்ளையர்கள் நமது நாட்டில் புகுத்தப்பட்டு அவர்கள் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். இந்தச் சூழ்ச்சியை வெளிப்படுத்திய தென்னிந்திய வியாபாரச் சங்கத்துக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். வியாபார இலாகாமெம்பருக்குச் சங்கத்தார்அடித்துள்ள தந்தியின் சாராம்சமாவது:—

"அன்னியர்களை எல்லாக் கேந்திர ஸ்தானங்களுக்கும் நியமிக்கும் முறையை நாங்கள் அழுத்தமாய்க் கண்டனம் செய்கிறோம். இந்த முறை வரவர அதிகமாய் அனுஷ்டிக்கப்படுவது அநீதி. கடைசியாகப் பிரான்க் பார், எங் என்ற இரு வெள்ளையர்களைச் சீமையிலிருந்து வரவழைத்து இரும்பு நிலக்கரி இவைகள் சம்பந்தப்பட்ட தொழில்களை இங்கு மேற்பார்வை செய்ய நியமனம் செய்தது அக்ரமம். மிக்க திறமைசாலிகளும் அனுபவஸ்தர்களும் இந்தியர்களுள் பலர் உளர். தவிர இந்த வெள்ளையர்கள் சீமைக் கம்பெனிகளில் தொடர்புள்ளவர்கள். அவர்கள் இந்தியத்தொழில்கள் அபிவிருத்தி அடைவதை விரும்புவார்களென எதிர்பார்ப்பது கடினம். இந்தியத் தொழில்களுக்கு ஆபத்தும் நேரலாம். மேலேகண்ட இரு நியமனங்களையும் உடனே ரத்துசெய்யக் கோருகிறோம்"

நடக்கப்போவது ஒன்றுமில்லை. இருந்தாலும் பிரிட்டிஷாரின் போக்கை நமக்குத் தெளிவாக விளங்கச்செய்கிறதல்லவா இந்நிகழ்ச்சி!

## வாங்கும் காசு போதாதா!

ரயில்வே பிரயாணக்கட்டணத்தை உயர்த்தப் போவதாக வந்துள்ள செய்தி நாட்டில் விசேஷமான பரபரப்பை உண்டாக்கியுள்ளது. லாகூர் வர்த்தக சங்கத்தார், "யுத்தகாலத்தில் ரெயில்வேக்களுக்கு ஏராள இலாபம். அப்படியிருக்க, கட்டணத்தை உயர்த்துவது முறையன்று. வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்காதிருக்கப் பலகட்டுப்பாடுகள் விதித்துள்ள சர்க்கார் தங்கள் சொந்த லாப விருத்தியில் கவனம் செலுத்துவது நேர்மையன்று. கட்டணம் உயர்த்துவதனால் எளிய மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்" என்று எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

கல்கத்தா மார்வாரிகளின் வியாபார சங்கம் எடுத்துக் காட்டியுள்ள விஷயம் ருசிகரமாயும் ஆணித்தரமாயுமுள்ளது. "மூன்றும் வகுப்புப் பிரயாணிகள் நின்றுகொண்டுதான் பிரயாணம் செய்கின்றனர். ஆகையால் கட்டணத்தை உயர்த்துவது நீதியன்று."

மார்வாரிகள் சங்கத்தார் உண்மையைச் சற்று மறைத்துள்ள குற்றத்துக்குள்ளாகிறார்கள். உண்மையில் மூன்றும் வகுப்புப் பிரயாணிகள் நின்றுகொண்டு பிரயாணம் செய்கிறார்களா? நிற்பதற்கு இடமேது? அப்படிநிற்கப் பாக்யம் பெற்றவர்களாக இருந்தபோதிலும் ஒற்றைக் காலால் தவம் அல்லவோ புரிகிறார்கள்?

நடப்பதை விவரிப்போம். ஸ்டேஷனில் வண்டி வந்துகொண்டிருக்கிறது. மக்கள் தலைவிரி கோலமாக அங்குமிங்கும் விழுந்தடித்துக் கொண்டு ஓடுகின்றனர். வண்டிகளுக்குள் கழுத்தை நீட்டிப்பார்க்கிறார்கள். மூட்டைகள் போல் ஒருவர்மேல் ஒருவராகப் பலர் கிடக்கிறார்கள். சிலர் மூச்சுவிட, சற்றுநேரம் கிடைத்த பாக்யத்தை எண்ணி ஜன்னல்கள் வழியாகக் கழுத்தை வெளியே நீட்டுகின்றனர். திடீரென்று அவர்கள் தலைகளில் பல பெட்டிகள், படுக்கைகள் விழுகின்றன. வண்டிகளின் கதவைத் திறக்க மல்யுத்தம், முஷ்டியுத்தப் பயிற்சி எல்லாம் நடக்கின்றன. ஒரு வீரன் எப்படியோ முண்டியடித்துக்கொண்டு வண்டியில் ஏறமுயல்கிறான். கதவுப்பக்கத்தில் இருக்கும் கும்பல் அவனை இடித்துத் தள்ளுகிறது. மணியடிக்கப்படுகிறது. வண்டி ஊதுகிறது. வீராவேசத்துடன் பலர் கால்வைக்கும் பலகைகளில் குரங்குகள்போல் தொத்திக் கொள்ளுகின்றனர். பலர்அந்த அதிருஷ்டம்கூட கிடைக்காமல் வாயைப் பிளந்துகொண்டு நிற்கின்றனர்.

வண்டிக்குள் ஒருவனுக்கு அதிருஷ்டவசமாகச் சற்று இடம் கிடைத்துவிட்டால் மனிதர்கள் மோதும் இன்னல்களைத் தவிர மூட்டைப் பூச்சிகளின் இன்பகரமான நிமிட்டல்கள் வேறு. அழுகிய வாழைப்பழத்தோல், சிகரெட், குழந்தைகளின் மல ஜலங்கள், வியாதியஸ்தர்களின் வாந்தியெடுப்பு—இவைகளின் பரிமளகந்தம் ஆளை வாட்டுகின்றது. இதை ப்ரயாணம் என்று சொல்லுவதைவிட நரக தண்டனை என்று சொல்லுவது முற்றிலும் பொருந்தும். இப்படிப்பட்ட தண்டனை கொடுப்பதற்கு வாங்கும் காசு போதாதா? அந்தோ, கடவுளே!

# அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்

"ராமய்யா"

—x—

இந்தக் காவேரிப் பத்திரிகை ஆரம்பித்தது முதல் அம்மாஞ்சியின் அபிப்பிராயங்களைக் குறிப்பிட்டுநான் எழுதிக்கொண்டுவருகிறேன். ஆசிரியரும் பொறுமையுடன் எழுதியதைப் பிரசுரப்படுத்திக்கொண்டிருக்கிறார். நேயர்கள் அவைகளைப்பற்றி என்ன அபிப்பிராயப்படுகிறார்கள் என்று அவரைக்கேட்டாலோ, பூட்டகமான புன்னகையுடன் "அதைப்பற்றி உமக்கென்ன கவலை? நீரோ சுயமாகக் கவனம் செய்வதில்லை. அம்மாஞ்சியின் வசனங்களை நீட்டாமலும் குறுக்காமலும் எழுதிவிடுகிறீர். அவ்வளவுதான் நாங்கள் கேட்பது. நீர் உம் வேலையைச் சரிவரச்செய்யும். அந்த அபிப்பிராயங்களைப்பற்றிப் பொதுஜனங்கள் என்ன அபிப்பிராயப்படுகிறார்கள் என்பதை மட்டும் கேட்காதீர்" என்று விடைகூறிவிட்டார்! இதைக்கேட்டு நான்சிறிது கலக்கமுற்று, இனி நாமே இதைக்குறித்து ஆராய்ச்சிசெய்வோம் என்றெண்ணி, ஒரு தினம் மாலை அம்மாஞ்சியையும் அழைத்துக்கொண்டு எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனுக்குச்சென்று, அங்குள்ள ஹிக்கின்பாதம் புஸ்தக சாலைக்குப்போய், "காவேரி" ஒரு காபி வேண்டும் என்றுகேட்டேன். புஸ்தகசாலை மானேஜர் எடுத்துக் கொடுத்தார். பிறகு அதைப்பிரித்துப் பார்த்துக்கொண்டே ஒருசம்பாஷணை ஆரம்பித்தேன்.

நான்: ஏன் ஸார், இந்தப்பத்திரிகை நன்றாக விலையாகிறதோ?

மானேஜர்: ஆஹா! மேளதாளத்தோடே ஆகிறது. வருவதுதான் கணக்கு! ஓசைப்படாமல் விற்றுப்போய் விடுகிறது. ஒவ்வொரு சமயத்தில் காலையில் இருந்தது சாயந்திரத்துக்குள் போய்விடுகிறது!

அம்மாஞ்சி: வேதநாயகம்பிள்ளை கீர்த்தனையில் சொல்லியதுபோல் "இன்றைக்கிருப்பதுவோ சந்தேகம்" என்கிறீர்களே!

பக்கத்திலிருந்தவர் ஒருவர்: அடி, சக்கே! அம்மாஞ்சி அபிப்பிராயத்தில் போடுகிறமாதிரி போட்டீர்களே ஒரு போடு!

நான்: எந்த அம்மாஞ்சி!

ஒருவர்: அந்தக் காவேரியைத் திறந்துபாருங்கள். "அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்" என்று மாதம் ஒரு வியாசம் வெளிவருகிறது. அதில் சங்கீத சம்பந்தமாக இப்படித்தான் ஏதாவது சில அரைச்சாப்பாக்கள் விழும்—படித்துப் பாருங்கள், வேடிக்கையாயிருக்கும்.

அம்மாஞ்சி: சரிதான், ரொம்ப சரிதான். ஒவ்வொரு தமிழ்ப் பத்திரிகையிலும் தற்காலத்தில் கால் பைத்தியம், அரைப் பைத்தியம், முக்கால் பைத்தியம், இப்படிப் பலவகைப் பைத்தியங்கள் கன்னாபின்னாவென்று உளறிக்கொட்டி எழுதிக்கொண்டிருக்கின்றன. அதில் ஒரு பைத்தியம் ஒன்று எழுதியிருக்கும். போயும் போயும் அதைத்தானா படிக்க வேண்டும்?

ஒருவர்: அந்த அம்மாஞ்சி என்பவர் கால், அரை, முக்கால் பைத்தியம் இல்லை. முழுப் பைத்தியம்தான்! அதனால்தான் நன்றாய்ப் படியும் என்கிறேன். நீங்கள் குறிப்பிடும் கால், அரைப்பைத்தியங்கள் வெளியேஉலாவிக்கொண்டு அதிமேதாவிகளாகவும் அகம்பாவத்துடனும் காணப்படும் ரகம். இந்த அம்மாஞ்சி இருக்கிறாரே? அவர் சரியான ஆஸ்பத்திரி பைத்தியம். மலையாள பகவதி, குந்துமல்லாரி, நாகப்பூ சங்கரி, ருத்ராக்ஷ மாவிகாபரணி, முத்து ஹோங்காரி, மோஹினி ரூபி, ரேணுகா பரஞ்சோதி எல்லாவற்றையும் வசீகரப் படுத்தின கொழுத்த சங்கீதப்பைத்தியம்!

அம்மாஞ்சி: குலுக்கி விட்டீரே,. ஒரே குலுக்காக. பல்லவி கோபாலய்யர் ஸாஹித்தியம் மாதிரி இருக்கே இந்த நாமாவளி! ஓய், நீர் ஒரு பெரிய ஸாஹித்ய கர்த்தாவாக இருப்பீர் போலேயிருக்கே! எங்கே பிடித்தீர் இதெல்லாம்!

ஒருவர்: சிரமப்பட்டு ஒரு குடுகுடுப்புக்காரன் கிட்டே இதெல்லாம் எழுதிக்கொண்டேன். வேண்டியிருக்கிறது. எதற்காகவென்று கேட்பீர்களோ? சொல்லுகிறேன். தமிழ்நாட்டிலே பெண் குழந்தைகள் அநேகம் சங்கீதப் பயிற்சியும், நாட்டியப் பயிற்சியும்செய்து, பட்டங்கள் பெறவேண்டும்என்று வெகு அவாவுடன் காத்துக்கொண்டிருக்கின்றன. பட்டங்களுக்குரிய நாமகரணங்களைத்தேடிப்பிடித்துப்பிரசுரப்படுத்தும்படி எனது இசை நண்பர் ஒருவர் என்னிடம் சொன்னார். சுலபமான வழியில் குடுகுடுப்பாண்டி ஒருவனைக் கேட்டால் கிடைக்கும் என்று தோன்றிற்று. அம்மாதிரியே செய்தேன். எனது எண்ணம் நிறைவேறியது.

அம்மாஞ்சி : பேஷ்! பேஷ்! நல்ல மிடுக்கன் ஐயா நீர்!

ஒருவர் : இவ்வளவோடல்ல! அந்தக் குடுகுடுப்பாண்டியினிடம் பேஷான இசைஸாஹித்தியங்கள் பேஷான பிராசத்துடன் கிடைத்தன. கேட்பீரோ?

"எந்த முகம் பார்த்தாலும் தங்க முகமாகப் போவுது!
மத்தியான்ன கலகமாகப் போவுது!
மண்ணெடுத்த குழி பள்ளமாகப் போவுது!
மாடு முட்டி ஒரு பிள்ளை பிறக்கப்போவுது!
மாடு செத்தாலும் மாட்டுக் கொம்புக்கு அழிவில்லை!
குட்டி செத்தாலும் குட்டிச்சுவருக்கு அழிவில்லை!
காக்கை கூவப்போவுது, கரட்டோணனுக்குத்
தாகமெடுக்கப் போவுது!
கனிகளெல்லாம் பழுக்கப் போவுது!"

நான்: ஐயா! நீங்களும் அந்த பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குள்ளே போய் இருக்கக் கூடிய அசாமி மாதிரிதான் காணப்படுகிறீர்!

அம்மாஞ்சி: இவர் அங்கே சென்றால் அம்மாஞ்சியை வெளியே துரத்திவிடுவார்கள்! மிகவும் நமஸ்காரம் ஸ்வாமி! நாங்கள் போய் வருகிறோம்!

வெளியே வந்தபிறகு 'அம்மாஞ்சி சிறிது நேரம் ஆழ்ந்த யோசனையிலிருந்துவிட்டு, என்னிடம் சொன்னான்: "வாஸ்தவமாகவே, இனி இந்தக் குடுகுடுப்பாண்டி, புரும்புரும் மாட்டுக்காரன், பண்டாரப் பாட்டுக்காரன் இவர்களுடைய வசனங்களும் சங்கீத ஸாஹித்யத்தில் புகுந்துவிடும்போலத்தானிருக்கிறது. பிரசாரத்திலுள்ள நவீன ஸாஹித்யங்களையும் அவைகளையும் அடுத்துவைத்துப் பார்த்தால் இந்தச் சம்பவமும் சம்பவிக்கலாம் என்று நீயே ஏற்றுக்கொள்வாய். உதாரணமாக, ஒரு பண்டார ஸாஹித்தியத்தைக் கேள்.

பல்லவி:

ஓம், ஓம், ஓம், ஓம், ஓம், ஓம்.
பிரணவஸ்வரூபனே, ஓம், ஓம், ஓம், ஓம், ஓம்.

அனுபல்லவி:

நாதாந்த வேதாந்த சித்தாந்த ஸ்வரூபனே, (ஓம்)—

சரணம்:

ஆயிரத்தெட்டுஅண்டம் குடைக்குள் ஆண்ட சூரனை
வளைத்து வளைத்து வேலால் இருபிளவாகப்
பிளந்த புயனே (ஓம்)—

அல்லது, மிட்டாய் விற்கும் ஒருவனுடைய கவனத்தைக் கேள்!

1. புதுச்சேரி கத்திரிக்கோல், புதுமையான
கத்திரிக்கோல்
நின்று விற்றால் குஜிலியண்டே ரவிக்கைவெட்ற
கத்திரிக்கோல்
கோட்டு வெட்ற கத்திரிக்கோல், கமிசு வெட்ற
கத்திரிக்கோல்
ஐந்து ரூபாய் சிட்டெடுத்து பாவாடை வெட்ற
கத்திரிக்கோல்
திருட்டுப் பையன் கலியாணத்திலே குந்திவெட்ற
கத்திரிக்கோல்
மைலாப்பூர் திருணாலிலே முடிச்சு வெட்ற
கத்திரிக்கோல்!

2. தின்னாலக்கடி தேள் அடா இது, திணுக்கலக்கடி
தேள் அடா,
கிளுகிலம்மா தேள் அடா இது கீழே ஓடும்
தேள் அடா,
பனைமரத்து தேள் அடா இது பழங்கலத்து
தேள் அடா,
துடப்பக்கட்டை எடுத்தால் இது பதுங்கி நிற்கிற
தேள் அடா.

இத்தகைய வசனங்களையும் தேசியக் கலப்புள்ள ராகங்களில் ஸ்வரப்படுத்தி, தாளக்கட்டுடன் மத்திம ஸ்ருதியில் பாடிவிட்டால் கச்சேரிகளில்கூட செலாவணியாய் விடும் போல்தானிருக்கிறது! எது எப்படியிருந்தால் என்ன! பட்டங்களுக்கு நாமாவளி வேண்டும் என்று கருதி நமது நண்பர் வீசிய வீச்சுடன் நீயும் உன் "காவேரி"யில் இந்த ஸாஹித்தியங்களை வீசிவிட்டால் தேடி அலைந்துகொண்டிருப்பவர்கள் பிடித்துக்கொண்டு பிரயோஜனப்படுத்திக்கொள்ளட்டுமே, என்கிறான் அம்மாஞ்சி. அம்மாதிரியே நானும் செய்துவிட்டேன்.

ஃ ஃ ஃ ஃ

சென்ற மாதம் "காவேரி"யில் கர்னாடக சங்கீதத்தை க்ஷீண தசையிலிருந்து உன்னத ஸ்திதிக்குக் கொண்டுவர வேண்டுமாயின், ஆஸ்திகர்கள் என்னென்ன செய்யவேண்டுமென்பதைக் குறித்து எழுதினேன். இது சம்பந்தமாக அம்மாஞ்சி சொல்லுவதாவது: "மியூஸிக் அகாடமியைப் போன்ற ஒரு மூல வித்வக் கோஷ்டி இந்தக் காரியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் கிளர்ச்சி இயக்கங்கள் ஒன்றிலும் தலையிட்டுக் கொள்ளக்கூடாது. கர்னாடக சங்கீதம் என்பது தென்னிந்தியாவில் சுமார் 1700ஆம் வருஷத்திலிருந்து 1900ஆம் வருஷம் வரையில் பிரபலமாய் விளங்கிவந்த உத்தம புருஷர்கள் கையாண்டுவந்த சங்கீதமே. உதாரணமாக ஸ்ரீ தியாகய்யர், தீக்ஷிதர், சாமா சாஸ்திரியார் அருணாசல கவிராயர், கோபாலகிருஷ்ண பாரதி, பல்லவி கோபாலய்யர், கனம் கிருஷ்ணய்யர், ஸதாசிவப்ரும்மேந்திரர், மஹாராஜா ஸ்வாதித் திருநாள், க்ஷேத்திரக்ஞர், முத்துத்தாண்டவர், கவி குஞ்சர பாரதி, தர்மபுரி சுப்பராயர், பட்டணம் சுப்ரமணிய அய்யர், ராமநாதபுரம் சீனுவய்யங்கார், மஹா வைத்தியநாத சிவம் இவர்களெல்லோரும், இவர்களுடைய பத்திக்கு ஆதி ஆசிரியராயிருந்த புரந்தரதாஸரும் ஆகிய இந்த மகா புருஷர்களுடைய ஜீவிய சரித்திரங்களே பெரும்பாலாருக்குத் தெரி

யாது! இவர்களுடைய சங்கீதத் தொண்டு களைப்பற்றி விஷயம் அறிந்தவர் வெகு சிலர். ஆதலால் உடனே ஆரம்பிக்கவேண்டியது என்னவென்ருல்:

1. மேற்கூறிய சிரேஷ்டர்களுடைய ஜீவிய சரித்திரங்களைச் சிறிய புத்தகங்களாகப் பிரசுரிக்க உடனே முயற்சி செய்யவேண்டும். இதற்கு வேண்டிய காகிதங்கள் கிடைத்தால் அச்சாபீசுக்கு வெகுதூரம் போகவேண்டியதில்லை. "காவேரி" அச்சாபீசில் வேண்டிய அளவு வசதி உண்டென்று நான் எண்ணுகிறேன்.

2. பிறகு இவர்களுடைய பிறந்த தினங்களை எல்லாம் கொண்டாட்ட தினங்களாக ஸங்கீத அபிமானிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

3. அத்தகைய கொண்டாட்டங்களில், அந்தந்த மகான்களுடைய வழிகளை அனுஷ்டிக்கும் சங்கீத அபிமானிகள் பங்கெடுத்துக் கொண்டு கச்சேரிகள் ஏற்பாடு செய்து, உற்சவங்கள் கொண்டாடி அவர்களுடைய பத்ததியைப் (tradition) பெருக்கவேண்டும்.

4. இதற்காக ஸ்ரீ தியாகப்ரும்ம ஆராதனைச் சபை ஒன்றைப்போல் ஸ்ரீ தீக்ஷிதர், ஸ்ரீ சாமா சாஸ்திரியார், ஸ்ரீ க்ஷேத்ரக்ஞர் முதலியவர்களைச் சம்பந்தித்துச் சபைகள் ஸ்தாபிக்க வேண்டும். இச்சபைகள் எல்லாவற்றிற்கும் மூலசபை ஒன்று இருந்துகொண்டு இந்த வைபவங்களையெல்லாம் சரிவர நடத்தி, சிரத்தையுள்ள அபிமானிகளைச் சரிகட்டிச் சேர்த்துவைத்து, ஜனங்களுக்கு உத்ஸாகம், ஊக்கம் சரியான பத்ததி எல்லாவற்றையும் பெருக்கவேண்டும்.

இதற்கெல்லாம் ஏராளமான பணம் வேண்டுமேயென்று நான் அம்மாஞ்சியைக் கேட்க, அதற்கு அவன் சொன்ன பதில்: "சமீபமாகச் சென்னையில் மியூஸிக் அகாடமி ஸிரீஸ் வைத்துப் பணக்குவியலாகக் குவித்து விட்டார்கள். இதற்குத் தொண்டு செய்தவர் அகாடமி காரியதரிசியாகிய பாபு என்ற வெங்கடநரஸிம்மய்யராம். அதுபோலவே கும்பகோணத்தில் ஸிரீஸ் வைத்து 12000 ரூபாய் வசூல் செய்ததாக, "காவேரி"யில் படித்தோம். இதற்குக் காரண பூதர் சந்துரு எனப்படும் ஸி. எஸ். ராமச்சந்திரய்யராம். இவர்களிருவரையும் உத்ஸாகப்படுத்திஞல் வேணுமென்கிற அளவு வசூல் ஆகிவிடுமே" என்கிருன். இந்த யோசனை உசிதமாகத்தான் தெரிகிறது.



★

எழுதும்போதே காயும் • •
காயும்போதே கருப்பாகும் • •
காலம் மாறிஞலும் • •
கருப்பு நிறம் மாருது • •

அதுதான்

ஜப்கோ
பவுண்டிங்க்

★

JAYA BHARATHAM Co.
Malleswaram P. O.
(Bangalore)

★

# பிரசார யுத்தம்

க. சந்தானம்

இம் மகா யுத்தத்தில் பழைய சதுரங்க சேனையாகிய ரதகஜ துரகபதாதிகளுக்குப் பதிலாக ஆகாயவிமானம், யுத்தக் கப்பல், டாங்கி, பெரிய துப்பாக்கி, பதாதி, பிரசாரம் என்ற ஆறு அங்க சேனை முழங்கி வருகிறது. இந்த அங்கங்களில் பிரசாரம் முதன்மையானதென்றே கூறவேண்டும். வெறும் பிரசாரத்தாலேயே ஹிட்லர் ஆஸ்டிரியா, செக்கோஸ்லோவாகிய தேசங்களைக் கைப்பற்றிக்கொண்டார். பிரசாரத்தினால் எதிரி தேசத்து ஜனங்களின் மனத்தளர்ச்சியை உண்டு பண்ணினால், ஆயுத வெற்றி எளிதாகும். அதற்குக் கொடுக்கவேண்டிய நரபலிகளும் குறையும். சென்ற நவம்பர், டிசம்பர் மாதங்களில் நேச தேசத் தலைவர்கள் ஓர்பெரிய பிரசார யுத்தம் நடத்தினார்கள். அது நான்கு அங்க நாடகமாக நடந்தது. எல்லா அங்கங்களுக்கும் பொதுப் புருஷர்கள் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட்டும், பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சிலும். முதன்முதலில் நவம்பர் 20-இலிருந்து 25 ஆந் தேதி வரையில் கெய்ரோவில் இவ்விருவரும் சீனத்தலைவர் சியாங்கிசேக்குடன் ஆலோசனை செய்தார்கள். பிறகு நவம்பர் 27-ஆம் தேதியிலிருந்து டிசம்பர் முதல் தேதி முடிய இவ்விருவரும் ருஷிய ஏகாதிபதி மார்ஷல் ஸ்டாலினுடன் சம்வாதம் செய்தார்கள். மறுபடியும் கெய்ரோவில் டிசம்பர் முதல் வாரத்தில் மூன்று நாட்களுக்குத் துருக்கி பிரஸிடெண்ட் ஈனோனுவுடன் மந்திராலோசனை நடத்தினார்கள். முடிவில் இருவரும் தமக்குள் இந்த யோசனைகளையெல்லாம் ஆராய்ந்து முடிவு கட்டிவிட்டுப் பிரிந்தார்கள்.

இந்தச் சம்பாஷணைகளின் உண்மைப் போக்குகள் இத்தலைவர்களுக்கும் அவர்களுடைய பிரதான புருஷர்களுக்குமே தெரியும். அவ்வப்போது வெளியிட்ட அறிக்கைகள் ஆலோசனை முடிவுகளை மறைப்பதற்கே பயன்படத்தக்கனவாகவிருந்தன. கெய்ரோவிலிருந்து முதலில் வெளிவந்த அறிக்கையில் ஜப்பானிய சாம்ராஜ்யத்தின் எல்லாப் பாகங்களையும் பிடுங்கிவிட்டு ஜப்பானை மறுபடியும் 1853-ம் வருஷத்திய நிலைமைக்குக் கொண்டுபோய் வைக்கப்போவதாகக் கூறப்பட்டது. அந்த வருஷத்தில்தான் வெளியுலகிலிருந்து விலகி நின்ற ஜப்பானை ஒரு அமெரிக்கக் கப்பலதிகாரி பலாத்காரமாக வெளிநாட்டு வியாபாரத்தில் சேர்ந்துகொள்ளச் செய்வித்தான். அதன் பின் ஜப்பான் ஆயுத பலத்தால் ஜெயித்த எல்லாப் பிரதேசங்களையும் இப்பொழுது இழந்துவிட வேண்டியதென்று கெய்ரோவில் தீர்மானிக்கப்பட்டது. மஞ்சூரியா, பார்மோஸா முதலிய சீனப்பிரதேசங்களைச் சீனா மீண்டும் பெறும். கொரியா சுதந்திரநாடாகும். பிரிட்டிஷ், டச், சாம்ராஜ்யப் பிரதேசங்களைப்பற்றியும், பிலிப்பைன் தீவுகளைப் பற்றியும் அறிக்கையில் ஒன்றும் குறிப்பிடவில்லை. பிலிப்பைன் தீவுகளுக்கு 1946-ஆம் வருஷம் பூர்ண சுதந்திரமளிப்பதாக அமெரிக்கா ஐக்கிய தேசத்தார் சட்டம்செய்து அதை அமுல் செய்யப்போவதாகச் சமீபத்தில் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் உறுதியும் கொடுத்திருக்கிறார். பர்மா, மலேயே நாடுகளைப்பற்றிப் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரும், டச்சுத் தீவுகளைப்பற்றி டச்சு அரசாங்கத்தாரும் இது வரையில் மௌனமாகவே இருந்துவந்திருக்கிறார்கள். இதை வைத்துக்கொண்டு ஜப்பானியர் துஷ்பிரசாரம் செய்வார்களென்பது சர்ச்சில், ரூஸ்வெல்ட் முதலியோருக்குத் தெரியாமலிருக்க முடியாது. ஆனால் இந்திய விஷயம் தீராமலிருக்கும்வரையில் பர்மா முதலிய நாடுகளைப்பற்றிப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஒன்றும் முடிவாகக் கூறமுடியாது. பிரிட்டிஷார் வழியையே டச்சு அரசாங்கத்தார் பின்பற்றுவார்கள். ஆதலால் மௌனம் பரமார்த்த சாதனம் என்ற வசனத்தை அனுசரித்து ஒன்றும் சொல்லாமலிருந்துவிட்டார்கள்.

மந்திராலோசனையின் பலன்கள் எவ்விதமிருப்பினும் கூட்டத்தின் ஏற்பாடுகள் சினிமா தோரணையில் செய்யப்பட்டிருந்தன. சில மாதங்களுக்குப் பிறகு உலகெங்கும் இவை படங்களில் காட்டப்படுமென்பதில் சந்தேகமில்லை. இங்கே சில விபரங்கள் கூறப்படும்.

கெய்ரோ நகரத்திலிருந்து 12 மைல் தூரத்தில் மேனாவீடு ஹோட்டல் இருக்கிறது. ஆதியில் இது ஒரு தனி நபரின் பங்களாவாக இருந்து பிறகு சுற்றுப்பிரயாணிகளின் ஹோட்டலாக மாற்றப்பட்டது. அதைச் சுற்றிலும் 43 பங்களாக்கள் ஆலோசனை கோஷ்டிகளுக்கு ஒதுக்கி வைக்கப்பட்டன. இவைகளை ஏழு கோட்டைகளாக வகுத்துச் சுற்றிலும் துப்பாக்கிகளும், யுத்த விமானங்களும், துருப்புக்களும் வைக்கப்பட்டன. முதன் முதலில் சீனத்தலைவர் சியாங்கிஷேக்கும் அவர் பத்தினியும் விமானத்தில் வந்திறங்கினர். அவர்கள் கோஷ்டி பதின்மர்தான். சீன தம்பதிகள் இணைபிரிவதில்லை. மத்தியான வேளைகளில் இருவரும் கைகோத்துக் கொண்டு உலாவுவார்களாம். சியாங்கிஷேக் நன்றாக ஆங்கிலம் பேசமாட்டார். அவர் மனைவி இவர் சீனத்தை ஆங்கிலமாக்கியும் மற்றவர் பேசும் ஆங்கிலத்தைச் சீன பாஷையில் மொழிபெயர்த்தும் தொண்டுபுரிந்தாள்.

சர்ச்சிலும், ரூஸ்வெல்ட்டும் ஆப்ரிக்கா வரையில் ரயிலில் பிரயாணம் செய்து முடிவில் கொஞ்ச தூரம் விமானம் மூலம் கெய்ரோ சேர்ந்தார்கள். அமெரிக்கக்கோஷ்டியார் 40 பேர். பிரிட்டிஷாரோ 50-க்கு மேல். ஸ்ரீ சர்ச்சில் தம் வீட்டில் விருந்துபசாரம் செய்யத் தம் பெண் ஸ்ரீமதி சாரா ஆலிவரை அழைத்து வந்தார். ரூஸ்வெல்ட்டின் மாப்பிள்ளை அவருடன் வந்து சேர்ந்துகொண்டாராம். ஐந்து நாளும் பெரிய விருந்துகள் நடந்தன. ஒருநாள் பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் செய்த கடவுள் வந்தன விருந்து எல்லோரையும் பிரமிக்கச்செய்து விட்டது. கெய்ரோ கூட்டங்களுக்காகச் சேகரிக்கப்பட்ட சாமான்களின் ஜாப்தா பின்வருமாறு:

22,000 ராத்தல் மாமிசம், 1000 ராத்தல் காபித்தூள், 17,000 ரா. ரொட்டி, 78,000 ரா. முட்டை, 740 ரா. தேயிலை, 5000 டின் பால், 800 ரா. டர்கி (ஓர்விதக்கோழி: கிரிஸ்மஸ் விருந்துக்கு விசேஷமானது), 4600 ரா. சர்க்கரை, 19,000 ரா. உருளைக்கிழங்கு, 5000 டப்பா பழம், 1 லக்ஷம் சிகரெட், 3000 சுருட்டு. முதல் நாளே ஹோட்டலில் இருந்த விஸ்கி காலியாகிவிட்டது. நல்ல வேளையாகப் பிரிட்டிஷார் 35 பீபா கொண்டு வந்திருந்தார்கள். இந்த விவரங்களைக்கேட்டு ஹிட்லர் டோஜோ திணறுவிட்டால் மிகவும் கல்நெஞ்சர்களாக இருக்கவேண்டும்.

2

அடுத்த காட்சி டெகரானில். இதில் ஸ்டாலினே முக்கிய புருஷராகப் பிரகாசித்ததாக அமெரிக்கப் பத்திரிகைகள் கூறுகின்றன. தலைவர்கள் தம் தம் தேசத்துத் தூது விடுதிகளில் தங்குவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் வந்து சேர்ந்தவுடனே, ருஷிய விடுதியில் வந்து விடவேண்டுமென்று அழைக்கப்பட்டு அவரும் அதை ஏற்றுக்கொண்டு அங்கே போய்விட்டார். பிரிட்டிஷ் விடுதி சிறிது தூரத்தில் தானிருந்ததால் சர்ச்சில் அங்கேயே இருந்தார். ருஷிய விடுதியில் மந்திராலோசனைகள் நடந்தன. இங்கும் பெரிய விருந்துகள் நடைபெற்றன. நவம்பர் மாதம் 30-ஆம் தேதி சர்ச்சில் பிறந்த தினம். அன்று நடு நிசி வரையில் ஏகபோகமான விருந்தாம். சர்ச்சில் ஸ்டாலின்கிராட் வீரத்தைப்பாராட்டி, பிரிட்டிஷ் மன்னர்பிரான் அளித்த வாளை ஸ்டாலினுக்குச் சமர்ப்பித்தார். அதை வாங்கி முத்தமிட்டு ஸ்டாலின் ஏற்றுக்கொண்டார்.

நான்குநாள் இம்மூன்று மாபெரும் தலைவர்களும் ஆலோசித்து முடிவில் வெளியிட்ட அறிக்கை விசித்திரமானது. தங்களுடைய நட்புக்களும், பரஸ்பர நம்பிக்கையும் அதிகரித்ததாகவும், யுத்தத்தை ஜெயம்பெற நடத்தும் முறைகளில் மனப்பூர்வமான ஒற்றுமை ஏற்பட்டுவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. ஜெர்மனியைப்பற்றி ஒரு வார்த்தை இல்லை. போலண்டின் எல்லைகளைப்பற்றிப் பல சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன. அவைகளைப்பற்றியும் ஒன்றுமில்லை. ஜெர்மனியின் சஹாக்களான பின்லாந்து, எஸ்தோனியா, லாட்வியா, ருமேனியா, பல்கேரியா, ஹங்கேரி இவைகளைப் பற்றியும் கூறப்படவில்லை. இவ்விஷயங்களைப்பற்றிப் பேசினார்களா? அல்லது ஸ்டாலின் இரண்டாவது முனையைத்தவிர வேறு விஷயங்களைப்பற்றிப் பேச மறுத்துவிட்டாரா? ஒருவேளை பேசி மூவருக்கும் தீராத வித்தியாசங்கள் தோன்றிவிட்டனவா? யுத்த முடிவில் சேனைகளின் கொள்கைகளுக்கேற்றவாறு முடிவுசெய்து கொள்ளலாமென்று தீர்மானித்தார்களா? இவைகளைப்பற்றி உலகமெங்கும் ஜனங்கள் சர்ச்சை செய்துகொண்டிருக்கிறார்கள். சமீபத்தில் ருஷியத் துருப்புக்கள் போலந்தில் நுழையவே அந்நாட்டின் பிரச்னை திடீரென்று பெருகிவிட்டது. பிரிட்டிஷ் அமெரிக்க மத்தியஸ்தத்தை ருஷியா ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாகத் தோன்றவில்லை. ருஷியாவிடம் சரணாகதியடைந்துவிடும்படி போலந்துக்குச் சர்ச்சிலும், ரூஸ்வெல்ட்டும் சொல்லப்போவதாகவும் தெரியவில்லை.

3

டெகரானிலிருந்து கெய்ரோ திரும்பிவந்ததும் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட்டு ஐந்து அமெரிக்க விமானங்களை அனுப்பித் துருக்கிப் பிரஸிடெண்ட் ஈனோனுவை வரவழைத்தார். டிசம்பர் முதல் வாரத்தில் மூன்று நாள் சம்பாஷணைகள் நடந்தன. இந்த யுத்தத்தில் மிகவும் சாமர்த்தியமாக இருந்து வந்திருக்கும் நாடுகள் அயர்லாந்து, எகிப்து, சுவீடன், துருக்கி. இவைகளில் துருக்கியின் நிலைமை தான் மிகவும் நெருக்கடியானது. இதுவரையில் யுத்தத்தில் மாட்டிக்கொள்ளமல் சமாளித்த துருக்கித் தலைவர்களின் சாமர்த்தியத்தை மெச்சாமலிருக்கமுடியாது. 1939ஆம் வருஷத்தில் துருக்கி இங்கிலாந்தோடு பரஸ்பர உதவி உடன்படிக்கை செய்துகொண்டது. அதே வருஷத்தில் ருஷியாவோடு பரஸ்பர அனாக்கிரமிப்பு உடன்படிக்கை செய்தது. 1941ஆம் வருஷத்தில் ஜெர்மனியுடன் நேச, அனாக்கிரமிப்பு உடன்படிக்கையில் கையெழுத்திட்டது. யுத்த காலத்தில் உடன்படிக்கைகளின் மதிப்பு மிகவும் குறைவு. தவிர, கொடுமையாகப் போர் புரிந்துவரும் இரு கக்ஷிகளோடும் உடன்படிக்கைகள் செய்து அவைகளைப் பூர்த்திசெய்வது கம்பிமேல் நர்த்தனம் செய்வதாகும். ஆனால் இந்த விசித்திர நடனத்தில் இதுகாறும் துருக்கி சமாளித்துவிட்டது. கெய்ரோ சம்பாஷணையின் பலனாக அது நேச தேசத்தாரின் பக்கத்தில் குதித்துவிடுமென்று சில பத்திரிகைகள் எதிர்பார்த்தன. மாஸ்கோவில் அக்டோபர் மாதம் நடந்த பூர்வாங்க ஆலோசனையில் துருக்கியை யுத்தத்தில் சேரும்படி வற்புறுத்தவேண்டுமென்று ஸ்டாலின் பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி ஈடனை கேட்டுக்கொண்டாரென்றும், அவ்வாறே ஈடன் முயற்சிசெய்து பலிக்கவில்லையென்றும் வதந்தி உலாவியது. மறுபடியும் அதே முயற்சி ரூஸ்வெல்ட், சர்ச்சிலால் செய்யப்பட்டிருக்கலாம். ஆனால் தற்சமயம் துருக்கி சேரப்போவதாகத் தோன்றவில்லை. நேசக் கக்ஷியார் வெற்றி பெறுவது நிச்சயமானாலும் முதலில் செத்துப் பிறகு பிழைப்பது சிறிய நாடுகளுக்கு உற்சாகம் கொடுக்கக்கூடிய விஷயமல்ல.

4

துருக்கித் தலைவரோடு பேசி முடிந்ததும், ரூஸ்வெல்ட்டும், சர்ச்சிலும் நெடுநேரம் அந்தரங்கமாகப் பேசியிருக்கவேண்டும். யுத்தம் முடிந்து பல வருஷங்களுக்குப் பிறகு அவர்களுடைய ரகசிய தினசரிக் குறிப்புக்கள் பிரசுரமாகும்பொழுதுதான் அப்பேச்சுகளின் உண்மை வெளிவரும். ஆனால் நமது கற்பனையால் ஓரளவு ஊகிக்கலாம். அடியிற் கண்ட சம்வாதத்தை வைத்துக்கொண்டு இதைப் படிப்பவர் ஒவ்வொருவரும் தம் மனதிற்கேற்றவாறு கற்பனை செய்துகொள்ளலாம்.

ரூஸ்: இந்த ஒருமாதமாகப் பல அபூர்வ பிரதேசங்களைப் பார்த்தேன். அபூர்வ மனிதர்களையும் கண்டேன். ஆனால் என் மனம் குழப்பமாக இருக்கிறது. ஸ்டாலினைப்பற்றி உங்கள் அபிப்பிராயமென்ன?

சர்ச்: உங்களை அதே கேள்வி கேட்கவிருந்தேன். நான் முன்னமேயே ஒருதரம் ஸ்டாலினைச் சந்தித்தேன். அப்பொழுது ஒரு பக்கம் ஆச்சரியமும் வேறொரு பக்கம் பயமும் கொண்டேன். அதே உணர்ச்சிகள் இத்தடவையும் பன்மடங்கு அதிகரித்தன.

ரூஸ்: மொத்தத்தில் எனக்கு நல்ல அபிப்பிராயம்தான். வெகு சாமர்த்தியசாலி. நம்மை அதிகமாகப் பேசவைத்து, தாம் சில வார்த்தைகளில் பிடிபடாமல் மழுப்பிக் கொண்டார்.

சர்ச்: நானும் போலந்தைப்பற்றி ஏதாவது ஒருவித ஒப்பந்தம் செய்துவிடவேண்டுமென்று கஜகர்ணம் போட்டேன். பலிக்கவில்லை.

ரூஸ்: அந்தப் பேச்சு எடுக்கும்பொழுதெல்லாம் எனக்கு மிகுந்த பயம். இந்தியா, மலேயே முதலிய தேசங்களைப்பற்றி உங்கள் உத்தேசத்தை ஸ்டாலின் கேட்டுவிடுவாரோவென்று நடுங்கினேன். அந்த விஷயத்தை எடுத்திருந்தால் உங்களிருவருக்கும் வாக்குவாதம் தடித்திருக்கும். பிலிப்ஸுக்கும் உங்களுக்கும் நடந்த சண்டை எனக்கு நினைவு வந்தது.

சர்ச்: எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. ஸ்டாலினும் என்னைப்போலவே யதார்த்த வாதி. ஆயுத பலமில்லாத உபயோகமற்ற தேசங்களைப்பற்றி வீண் வாதம் செய்யமாட்டாரென்பது நிச்சயம். ஆனால் ஐரோப்பா நம்மெல்லோருக்கும் பொது. அதில் ஒருவர் எதேச்சையாக நடக்க முடியாது.

ரூஸ்: அதற்கு நாம் என்ன செய்யமுடியும்? ஹிட்லரை முறியடிப்பதில் நாம் தளர்ச்சி அடையமுடியாது. ஹிட்லர் தோற்றபின் ருஷியாவோடு மனஸ்தாபப்பட்டுக்கொள்ள முடியாது.

சர்ச்: இவ்விரண்டும் உண்மையே, ஆனு லும் போலந்து விஷயத்தில் ருஷியா எதேச்சையாக நடந்தால் ஐரோப்பாக் கண்டம் முழுதும் புரட்சி ஏற்பட்டுப் பொதுவுடைமை பரவிவிடாதா?

ரூஸ்: அப்படியானல் பெரிய அனர்த்தம் தான். ஆனல் அவ்வளவு தூரம் யோசித்து ஏன் வீணில் துக்கப்படவேண்டும்? தற்போதைய கடமையைச்செய்து மீதியைக் கடவுளிடம் விட்டுவிடுவோம்.

சர்ச்: அமெரிக்காவிலிருப்பதால் இந்த அபாயம் உங்களுக்குச்சரியாக விளங்கவில்லை போலும்.

ரூஸ்: சண்டையை நீங்கள்தானே ஆரம்பித்தீர்கள். ஐரோப்பாக் கண்டத்தின் சிக்கல்கள் எவ்விதமாவது தீர்ந்தால் போதுமென்றுதான் பல அமெரிக்க ஞானிகள் நினைக்கின்றனர். ருஷியா தீர்த்துவைப்பதானல் நமக்கும் பாரம் குறைவுதானே. ஹிட்லரை எதிர்க்கும் பாரத்தை ஏற்றுக்கொண்ட ஸ்டாலின் ஐரோப்பியக் குழப்பத்தைத் தீர்த்துவைப்பதில் ஓரளவு எனக்கும் சம்மதந்தான்.

சர்ச்: இதை உங்கள் நாட்டில்போய் சொல்லிப்பாருங்கள். மறுபடியும் தேர்தலுக்கு நிற்கிற பேச்சை விட்டுவிடவேண்டி வரும்.

ரூஸ்: இருக்கலாம். ருஷியாவை எதிர்க்கும் பேச்சை நீங்கள்எடுத்தால், உங்கள் ஸ்தானத்திற்கும் அபாயம்தான்.

சர்ச்: நேரடியாக எதிர்க்கும் மூடன் நானல்ல. ஆனல் பல நூற்றாண்டுகளாக ஸாம்ராஜ்யத்தைவகித்த பிரிட்டிஷ் மக்களின் அரசியல் அறிவு இரத்தத்தில் பதிந்துகிடக்கின்றது. பொதுவுடைமை உலகில் இங்கிலாந்துக்கு மூன்றும்தர நிலைமைகூடக் கிடைக்காது. எப்படியாவது மேற்கு ஐரோப்பாவையாவது எங்கள் பக்கம் சேர்த்துக்கொள்ளுவோம்.

ரூஸ்: அதற்கு உடனே இரண்டாம் முனே ஆரம்பித்து நமது துருப்புக்கள் பிரான்ஸ், பெல்ஜியம் முதலிய நாடுகளைப் பிடித்துக் கொள்ளவேண்டும். ஜப்பானைப்பற்றித்தான் எனக்குக் கவலையாக இருக்கிறது. ருஷியாவிடமிருந்து எவ்வித உதவியும் எதிர்பார்க்க முடியாது. நாமிருவரும்தான் சண்டை போடவேண்டும்.

சர்ச்: வேறு வழியில்லை. ஆனல் ஹிட்லர் அடியோடு முறிந்துவிட்டால், அந்த அதிர்ச்சியிலேயே ஜப்பான் வழிக்கு வந்துவிடலாம்.

ரூஸ்: ஜப்பானேடு எவ்விதத்திலும் சந்தி செய்துகொள்ள முடியாது. முற்றிலும் சரணுகதியடையும் வரையில் போர் புரிந்துதான் ஆகவேண்டும். துருக்கியின் பேச்சும் வழவழப்பாகத்தானிருக்கிறது.

சர்ச்: ஈனேனு மெத்தகெட்டிக்காரர். ருஷியாவிடம் துருக்கிக்கு வெகு நாளாகப் பயம். சிரியா முதலிய நாடுகளுக்கு நாம் பூர்ண சுதந்திரம் கொடுப்பதாகக் கூறிவிட்டோம். சண்டையில் சேருவதற்குப் பிரதிப்பிரயோசனம் என்ன கொடுக்கமுடியும்?

ரூஸ்: நான் ஏராளமான பணம் கொடுப்பேன்.

சர்ச்: உலகத்தையெல்லாம் பணத்தால் விலைக்குவாங்க முடியுமென்பது அமெரிக்கர்களின் பிரமை. நீங்கள் சீனவைத் தட்டிக் கொடுத்து நமக்குச் சமமாக நடத்துவது எனக்கு அவ்வளவு உசிதமாகத் தோன்றவில்லை.

ரூஸ்: ஜப்பான் தோற்றபிறகு ஆசியாவில் ஒரு பெரிய பலத்த நாடு வேண்டாமா?

சர்ச்: எதற்காக? நாமிருவரும் இல்லையா? நீங்கள் சீனவின் சமாதானத்தைக் காப்பாற்றுங்கள். நாங்கள் இந்தியாவைக் காப்போம்.

ரூஸ்: என்னுடைய ஜனங்கள் அதற்கு ஒப்புக்கொள்ள மாட்டார்கள். மேலும், அந்தத் தொந்தரவு எதற்கு? எப்படியும் சீன நம்மிடம் பணத்திற்கும், இயந்திரத்திற்கும் வரப்போகிறது. வியாபார பலம் ஒன்றே போதும்.

சர்ச்: அரசியல் பலமில்லாமல், வியாபாரம் வெகுநாள் நிலைக்குமென்று நினைப்பது அறியாமை. இந்தியரும் நம்மைப்போலும் ருஷியரைப்போலும், இயந்திரத் தொழிலில் விருத்தியடைந்தால், நம் வியாபாரம் ஒழிந்துவிடும்.

ரூஸ்: அப்படி விருத்தி அடைவதைத்தடுத்தால் ஆசியாவும் ருஷியாவோடு சேர்ந்துவிடும். பொது உடைமை நம் நாடுகளையே படையெடுக்க ஆரம்பித்துவிடும்.

சர்ச்: உலக சரித்திரம் அவ்வளவு துரிதமாக மாறுது. நம் காலத்தில் ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக்கொண்ட தேசங்களின்

ஆதிக்கத்தைப் பாதுகாப்பதே நமது கடமை. நமக்குப்பின் வருவோர்கள் அவ்வப்போது ஏற்படும் நிலைமையைச் சமாளித்துக்கொள்ளு வார்கள்.

ரூஸ்: நமது பிரசார யுத்தம் வெற்றி யடைந்ததென்று நினைக்கிறீர்களா?

சர்ச்: அதற்கென்ன சந்தேகம்.? ஒருமாத காலம் உலகெங்கும், நமது எதிரிகள்கூட நம் சஞ்சாரங்களையும் சம்பாஷணைகளையுமே கவனித்த வண்ணமாக இருந்திருக்கிறார்கள். ஹிட்லர் டோஜோ இருந்தவிடம் தெரியவில்லை. சில குறும்புப் பத்திரிகைகள் தாறுமாறாக எழுதினால் மோசம் போகாது. பொது ஜனங்கள் நமது போர் வெற்றிகளைப் போலவே இந்தப் பிரசார வெற்றியையும் கொண்டாடுவார்கள்.

ரூஸ்: மறுபடியும் எப்பொழுது சந்திப்போம்?

சர்ச்: திரும்பவும் உடம்பு சௌகரியக் குறைவாக இருக்கிறது. மனதில் வேகமிருந்தால்மட்டும் போதுமா? நீண்டநாள் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும்போலிருக்கிறது.

ரூஸ்: அது அவசியம். நானும் சில வாரங்களாவது சிரமபரிகாரம் செய்யவேண்டும். இரண்டாம் முனை தொடங்கிய பிறகு மறுபடி சந்திப்போம். அதற்குள் பர்மாவை மீட்க முயற்சிகள் செய்யவேண்டும்.

சர்ச்: அதன் பொறுப்பும் பெரிதும் உங்கள் பேரில்தானிருக்கிறது. விமானங்கள் துப்பாக்கிகள், யுத்தக் கப்பல்கள் எல்லாம் சீக்கிரம் அனுப்பவேண்டும். இந்தியாவினால் எவ்வளவு தொந்தரவு என்று சொல்லி முடியாது. காங்கிரஸையும், காந்தியையும் அடக்கிப்போட்டுவிட்டுக் கொஞ்சம் கவலையற்றிருந்தால் வங்காளப் பஞ்சம் வந்து சேர்ந்துவிட்டது.

ரூஸ்: உடம்பில் வியாதியிருந்தால் எப்படியாவது வெளிவருமல்லவா? இந்தியப் பிரச்னையை ஒருவாறு தீர்த்துவிடுவது நலம்.

சர்ச்: இதைப்பற்றி நாம் முன்னதாகவே பேசி முடித்து விட்டோமல்லவா? சுகமாய்ப் போய்வாருங்கள். வெற்றியிலும் சமாதானத்திலும் நம்மிரு நாடுகளும் ஒற்றுமை குறையாமலிருக்கவேண்டும்.


## உயரிய மூன்று பொக்கிஷங்கள்!

# நியோ - கிரைப்

குழந்தைகளுக்கு ஏற்படும் எல்லாவித வியாதிகளுக்கும் கைகண்ட ஔஷதம். ஒவ்வொரு வீட்டிலும் ஒரு பாட்டில் — அவசியம் இருக்கவேண்டும். —

# நியோ ப்ளாஜிஸ்டின்

நிமோனியா, கபம், கட்டி, முதலிய சகல வியாதிகளுக்கும் அரிய நிவாரணி. உன்னத மூலிகைகளைக்கொண்டு தயாரிக்கப்பட்டது. பிரபல வைத்தியர்கள் சிபார்சு செய்வது.

# பாபா ஆஸ்த்மா க்யூர்

இருமல், க்ஷயம், சுவாச காசம், முதலிய ரோகங்களுக்கு — குணமளிக்கும் திவ்ய ஔஷதம். —

**ஏஜண்டுகள் தேவை ... ... உடனே விண்ணப்பித்துக்கொள்ளவும்.**

நியோ ரெமடீஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி

**ராமச்சந்திரபுரம் — புதுக்கோட்டை சமஸ்தானம்.**

# மந்திரிசபை நினைவுகள்

*தி. சே. சௌ. ராஜன்*

II

சர்க்கார் கார்யாலயக் காகிதக் கட்டுகளைப் பார்த்திராத எனக்கு அவைகள் எனது அறையில் வந்து இறங்கும் காட்சியைப் பார்ப்பதே ஓர் வினோதமாக இருந்தது. ஒவ்வொரு கட்டுக் காகிதங்களும் ஒழுங்காக மடியாமல் கெட்டியான அட்டைகளில் வைக்கப்பட்டு, தேதிவாரியாகச் சீட்டுக்கள் ஒட்டி, ஒரே ஒரு விஷயத்தைப்பற்றிப் பலவிதக் குறிப்புக்களுடன் சுலபமாகப் படித்து அறிந்து கொள்ளக்கூடிய நிலைமையிலிருந்தன.

மந்திரிகளின் பொறுப்பைப்பற்றி ராஜாஜி எனக்குக் கொடுத்த எச்சரிக்கை என் மனதை உறுத்திக்கொண்டேயிருந்தது. தவறிக் கையெழுத்திட்டுவிட்டால் அதனால் என்ன கெடுதல் நேருமோ என்கிற அச்சம். மந்திரிகளின் கையெழுத்து முடிவானதாக இருந்தால் அந்தக்கட்டும் முடிவடைந்து ரிகார்டு அலமாரிக்குக் குடியேறிவிடும். அதனின்று பிறக்கும் உத்தரவுகள் மட்டிலும் தேவையானவர்களுக்கும், பொதுமக்களுக்கும் அறிவிக்கப்படும். கட்டுக்களில் விவரிக்கப்பட்டிருக்கும் விஷயங்களின் ஜோடனை வெகு அழகாக இருக்கும். சர்க்கார் கார்யதரிசிகளின் ஆபீசில் வேலை செய்பவர்களின் பயிற்சியையும், அவர்கள் செய்யும் வேலையின் ஒழுங்கையும் கவனிப்பவர் அந்தந்த இலாகாவின் நிரந்தர கார்யதரிசிகள். இவர்களில் பெரும்பாலோர் உத்தியோகமுறையில் நன்கு ஊன்றியவர்கள். ஐ. சி. எஸ். என்ற அதிகார வர்க்கத்தில், படிப்பிலும், வேலைத்திறனிலும் மேம்பட்டவர்கள். ஒவ்வொரு விஷயத்திலும் எப்படிக் குறிப்புக்கள் எழுதவேண்டுமெனவும் சர்க்காரின் கொள்கை, போக்கு, இவைகளுக்குத் தகுந்ததாக, இடைஞ்சலாக இருக்கும் குறிப்புக்களை நீக்கி, சாதகமாக இருப்பவைகளை மேற்கோளுடன் கூட்டி, அலங்காரம் செய்து அந்தந்த இலாகாவின் மந்திரியின் உத்தரவிற்கு வைக்கப்பட்டிருக்கும். மந்திரிகள் கையெழுத்துப் போடும் இடமும் குறிப்பிடப்பட்டிருக்கும். இந்தத் தயாரிப்பைக்கண்டு முதலில் வியந்தேன். பிறகு கட்டுக்களை ஊன்றிப்படிக்கும் ஆவல் உண்டாயிற்று. அரசியல் பிரச்னையில்லாத தினசரி நடைமுறையில் போடவேண்டிய உத்தரவுகள் சிறிது நாட்களுக்குள் பழக்கமாகிவிட்டன. இந்த வேலையை மந்திரிகள் செய்யவேண்டிய அவசியமே இல்லை என்பது எனது அபிப்பிராயம். அரசியல் பிரச்னை சம்பந்தமானதும், சட்ட சபைகளுக்குப் பதில் சொல்லவேண்டியதுமான கட்டுக்கள்தான் ஊன்றிப்பார்க்க வேண்டியவையாயின. இந்தக் கட்டுக்களின் ஜோடனையும் பழைய சட்டங்களுக்கு ஒத்ததாக இருந்தமையால் புதிய சட்டப்பிரகாரம் வேலை நடத்தும் முறையில் ஒவ்வொரு விஷயத்தையும் ஆதியோடந்தமாகக் கவனித்துக் குறைகளைக் கண்டுபிடித்துத் திருத்தியமைப்பது அவசியமாய் இருந்தது.

மந்திரி வேலையை இரண்டுவிதமாகப் பார்க்கக்கூடுமென்ற முடிவிற்கு வந்தேன். சிரமப்படாமல் குறிப்பிட்ட இடத்தில் கையெழுத்திட்டுக் கட்டுக்களை அரைமணி அல்லது ஒரு மணி நேரத்திலாகிலும் தீர்த்துவிடுவது ஒருமுறை. ஒவ்வொரு கட்டையும் முழுவதும் படித்து மனதில் எழும் சந்தேகங்களைக் காரியதரிசியுடன் கலந்துபேசி, விவரம் தெரிந்துகொண்டு அதற்குத் தகுந்த உத்தரவைப்போடுதல் மற்றொரு விதம். பின் சொல்லிய முறை காலம்பிடிக்கும். சில சமயங்களில் ஒரு கட்டைப்படித்து விஷயம் தெரிந்துகொள்வதற்கே இரண்டு மூன்று நாட்களாகிவிடும். கால தாமதத்தைப்பற்றிக் கவனிக்கமுடியாது. நியாயமான உத்தரவு போடுவதுதான் ஒழுங்கென நினைத்து இரவும் பகலுமாக முதல் மூன்று மாதங்கள் வேலை செய்யவேண்டியிருந்தது. ஆனால் இந்தப் பயிற்சியினால் பிற்பட்டு, கட்டுக்களைச் சீக்கிரத்தில் முடிவுசெய்ய முடிந்தது. என் பொறுப்பில் வேலைசெய்த பிரிவுகள் மூன்று. ஒன்று வைத்திய இலாகா; இரண்டாவது சுகாதார இலாகா; மூன்றாவது தர்ம ஸ்தாபனங்கள். முதல் இரண்டு சம்பந்தப்பட்டவரையில் எனது கார்யதரிசியைவிட எனக்குத் தொழில் ஞானமும், அனுபவமும் அதிகமாய் இருந்தன. அதனால் கார்யதரிசி செய்யும் சிபார்சுகளைத் திருத்தி ஒழுங்குபடுத்துவதும் அவசியமாயிற்று.

இரண்டு வாரத்திற்கொருமுறை மாகாண ஜனன மரண ஜாப்தா ஒன்று என் கையெழுத்திற்கு வரும். அந்தந்த ஜில்லாக்களிலிருந்து வரும் கணக்குகளைத் தொகுத்து, மாகாணம் பூராவும் ஜில்லாவாரியாகத் தொத்துநோய்கள் கணக்கு, அதனால்மரிக்கும் நபர்களின்தொகை, இவைகளை விளம்பரப் படுத்துவதற்காகத் தயாரிப்பது. நியாயமாக இது விளம்பர இலாகாவிற்குத்தான் போகவேண்டும். மரண ஜாப்தா சுகாதார மந்திரிக்குச் சேரவேண்டியதாயிருந்தாலும் பொது மக்களுக்குத் தெரி

விக்கப்படும் முறையில் விளம்பர அதிகாரியான மந்திரியிடம் போகவேண்டும். முதல் இரண்டு மாதங்களுக்கு இந்தக் கணக்கைப் பார்த்தேன். படிக்கப் படிக்க மனம் வெதும்பியது. தலையெழுத்துப்போல அவரவர்களுக்கு ஏற்பட்டபடி மக்கள் பிறக்கவோ அல்லது இறக்கவோ நேரிடுகிறதென்கிற எண்ணம் எனக்குக் கிடையாது. தொத்து நோய்களை மனிதனால் தடுக்க முடியும். அநேக நாடுகளில் தடுக்கிறார்கள். ஐரோப்பா முதலிய நாடுகளில் பெரியம்மை, குஷ்டரோகம் இது போன்ற நோய்கள் அறவே ஒழிந்துவிட்டன. நம் நாட்டிலும் அவ்வாறு செய்யமுடியும். செய்வது அரசாங்கத்தாரின் கடமை என்பது எனது கொள்கை. அந்த ஒரு காரணத்திற்காகத்தான் இந்தக்கணக்கைச்சுகாதார மந்திரி பரிசீலனை செய்வது கடமையாகும். இந்த மனப்பான்மையுடன் மாதம் இருமுறை பார்த்து வந்ததில் என்மனம் துயரமுற்றது. ஒருநாள் சாயங்காலம் தினசரிப் பத்திரிகையில் குண்டூரில் காலரா நோய் பரவியிருப்பதாயும் அதனால் மூன்று வாரமாக அநேகர் இறந்துவிடுவதாயும் படித்தேன். அன்று நான் உத்யோக முறையில் படித்த தொத்து நோய் மரணக் கணக்கில் குண்டூர் கணக்கைக் காணவில்லை. மறுநாள் காலையில் சுகாதார இலாகா தலைமை அதிகாரியை டெலிபோன் மூலம் கூப்பிட்டு "குண்டூர் காலரா சமாசார விவரம் என்ன" என்று கேட்டேன். தமக்கு ஒன்றும் தெரியாதெனவும், பகல் பத்து மணிக்குமேல் ஆபீஸிற்குப்போய் விவரம் தெரிவிப்பதாகவும் சொன்னார். "நேற்றுச் சாயங்காலம் பத்திரிகைகளைப்படித்தீர்களோ? என்று கேட்டதற்கு "இல்லை" யென்று பதில் கிடைத்தது. "மூன்று வாரமாகத் தொத்து நோய் பரவி மக்கள் மடிந்துகொண்டிருக்கும் விவரம் சுகாதார இலாகா தலைவருக்குத் தெரியாது. எனக்கு வரும் மரணக் கணக்கினால் என்ன பயன் என்றும், கையெழுத்திற்கும் நோயின் கொடுமைக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை யென்றும் எனக்குத் தோன்றியது. ஜனன மரண ஜாப்தா கையெழுத்திடுவது பொருளற்ற ஓர் சடங்கு என்ற முடிவிற்கு வந்தேன்.

சுகாதார இலாகா தலைவர் மறுநாள் பகல் பன்னிரண்டு மணிக்கு என்னை டெலிபோனில் கூப்பிட்டார். தமக்குக் கீழுள்ள தொத்து நோய்களைப்பற்றிக் கவனிக்கும் அதிகாரியை விசாரித்ததில் அவருக்கும் தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை யென்றும் உடனே விசாரிக்க ஏற்பாடுசெய்து எனக்குச் செய்தி அனுப்புவதாகவும் கூறினார். இதைக் கேட்டதும் என் மனதில் எழுந்த கோபத்திற்கு அளவில்லை. எனினும் என்ன செய்வது? சுகாதார இலாகா தலைமை அதிகாரியை உடனே என்னை வந்து நேரில் பார்க்கும்படி சொன்னவுடன் அவரும் வந்து சேர்ந்தார். அவரிடத்து எனது வருத்தத்தைத் தெரிவித்து இனி இந்தமாதிரியான மடமையைப் பொறுக்கமுடியாதெனச் சொல்லி நான் குண்டூருக்கு நேரில் சென்று விஷயம் அறிந்துகொள்ளப் போவதாகச் சொன்னேன். என்னுடைய சொற்கள் அந்த அதிகாரிக்கு ஆச்சரியமாகத் தோன்றின. மந்திரியே தொத்து நோய் பரவியிருக்குமிடத்திற்குத் திடீரெனப் புறப்படுவதா, இது என்ன புதுமை, என்று தோன்றும் முகத்துடன், தாம் அன்றிரவே குண்டூர் போவதாயும், நான் மறுநாளிரவு புறப்பட்டு வரலாமென்றும் தாம் முன் சென்று எனக்கு வேண்டிய புள்ளி விவரங்களைத் தயாரித்து வைப்பதாயும் சொல்லிவிட்டு அன்றிரவே குண்டூர் சென்றுவிட்டார். மறுநாளிரவு நானும் குண்டூர் போகுமுன் கார்யதரிசி ஆபீஸில் கிடைக்கக்கூடிய விபரங்களையும் குண்டூர் கலெக்டருடைய யாதாஸ்து முதலியவைகளையும் பார்வையிட்டுக் கையிலெடுத்துக் கொண்டு குண்டூர் போய்ச்சேர்ந்தேன்.

ரயில்வேஸ்டேஷனில் ஜில்லா கலெக்டரும் சுகாதார வர்க்கத்தினரும் காலை ஆறு மணிக்கு என்னை வரவேற்றார்கள். கலெக்டர் துரை நான் பார்க்கவேண்டிய இடங்களையும், இன்ன இன்ன ஏற்பாடுகள் நடந்திருக்கின்றனவென்பதையும் தெரிவித்தார். ஆனால் அந்தத்திட்டத்தைப் பின்பற்ற இஷ்டமில்லாதவனாகக் கலெக்டரைத் தனியே அழைத்து, நானும் அவருமாக ஒரு காரில் ஏறிக்கொண்டு புறப்பட்டோம். மற்றச்சுகாதார அதிகாரிகள் எங்களைப்பின்பற்றி வந்தார்கள். கலெக்டரிடத்தில் மட்டும், "குறிப்பிடப்பட்டுள்ள ஜாப்தா பிரகாரம் நான் போக விரும்ப வில்லை. நான் சொல்லுமிடங்களுக்குத் தாங்கள் காரை ஓட்டிச்செல்லுங்கள். மற்றவர்களும் நம்மைப்பின்பற்றி வரட்டும். முதன் முதலாக இந்தப்பட்டணத்தின் கக்கூஸ்களில் மிகப் பெரியதானதும், ஜனநெருக்கடியான இடத்திலிருப்பதாயுமுள்ள இடத்திற்குப் போகவேண்டும்" எனச் சொன்னேன். நான் கேட்டுக்கொண்டபடியே கலெக்டரும் சுகாதார இன்ஸ்பெக்டர் ஒருவருடைய உதவியின் பேரில் கக்கூஸிற்கு முன் தமது வண்டியை நிறுத்தினார். முதல் நாளிரவு மழை பெய்து பூமி ஈரம் காயாமலிருந்தது. உத்யோக முறையில் போடப்பட்டுள்ள திட்டத்தில் இந்த இடம் நான் பார்க்கக் குறிப்பிடவில்லை. அதன் காரணத்தினாலோ, அல்லது மழையின் காரணத்தாலோ அல்லது சுகாதார அதிகாரிகள் பார்வைக் குறைவினாலோ அந்தக் கக்கூஸ் இருந்த நிலை குண்டூர் டவுன் மட்டும் அல்லாது ஜில்லா பூராவும் காலரா நோய் பரவுதற்குப் போதியதாகவிருந்தது. கக்கூஸிலிருந்து மலம் கரைந்து ரோடு முற்றிலும் நிறைந்து உள் புக வழியில்லாமல் துர்நாற்றம் பரவி வீசிக்கொண்டிருந்தது. மூன்று வார காலமாகக் காலரா பரவி நூற்றுக்கணக்கான மக்கள் மாண்டு போய்க் கொண்டிருந்த

அந்நாளில், தொத்து நோய் பரவுதற்குக் காரணமான கக்கூஸ்கள் இந்த நிலையில் இருந்ததைக் கண்ணுற்றேன். மாகாண அதிகாரிக்கும் இந்நிலையைச் சுட்டிக் காட்டினேன்.

மக்களுக்கு வழங்கப் படும் குடி தண்ணீர் சாத்திர முறையில் சுத்தப் படுத்தப் பட்டு வருகிறதா வென்று கேட்டதில், அப்படியே செய்யப்படுவதாகத் தெரிய வந்தது. "சரி, அப்படியானால் அந்தக் குடிதண்ணீர் குளத்திற்குப் போகலா" மென்றேன் கலெக்டர் வண்டியையோட்டிக் குளத்தங் கரையில் நிறுத்தினார். அங்கிருந்த சுகாதார அதிகாரியை அந்தக் குளம் எவ்விதத்தில சுத்தப்படுத்தப்படுகிறதெனக் காண்பிக்கும்படி கேட்டேன். அரைமணி நேரம் அவர் செய்தவேலையை நாங்கள் எல்லோரும் கவனித்தோம். கொஞ்சம் மருந்துத் தண்ணீரினால் குளத்தைக் கெடுத்தாரேதவிர அக்குளத்திலிருந்து வெளியாகும் ,குடிதண்ணீரை அவர் சுத்தம் செய்யவில்லை. அவருக்குச் செய்யத் தெரிந்ததும் அவ்வளவுதான். அவருக்கு மேற்பார்வையாகவுள்ள நானூறு ரூபாய் சம்பளம் வாங்கும் முனிசிபல் சுகாதார அதிகாரிக்குத் தம் கீழுள்ள சிப்பந்திகளுக்குக் கற்றுக் கொடுக்கத் திறமையுண்டோவென்பதை அங்குப் பரீக்ஷிக்க எனக்கு இஷ்டமில்லை.

பிறகு ஹரிஜனங்கள் வசிக்கும் சேரிக்குப் போய்ச் சேர்ந்தோம். நான் அங்குப் போனதும் எதிர்பாராதபடிதான். சேரியில் இறங்கியவுடன் குடிதண்ணீர்க் கிணறுகள் எவ்வளவிருக்கின்றன வெனக் கேட்டேன். இரண்டு இருப்பதாக முனிசிபல் அதிகாரி சொன்னார். அதைத் தினந்தோறும் மருந்துபோட்டுச் சுத்தம் செய்வதாகவும் உறுதிகூறினார். கிணற்றண்டை போய் அங்குத் தண்ணீர் இழுத்துக் கொண்டிருக்கும் வயதான கிழவியிடம்இந்தக் கிணற்றிற்கு மருந்துபோட்டு எப்பொழுது சுத்தம் செய்தார்கள் என்று கேட்டேன். தெலுங்கில் அவள் மாதம் ஒருமுறை அல்லது இரண்டு முறை செய்கிறார்கள். கடைசியாகச்செய்து இப்பொழுது பத்துநாட்களுக்கு மேலாகிறதென்றாள். அந்தக் கிழவியிடமிருந்து காலரா நோய் சேரியில் பரவியிருக்கிறதா, எவ்வளவு பெயர்கள் இறந்திருப்பார்களெனக் கேட்டேன். அதன்விவரம் தனக்குத் தெரியாதெனவும், சமீபத்திலிருக்கும் குடிசையில் நாலுபெயர்களுக்கு மேலாக நோய் வாய்ப்பட்டு அவதிப்பட்டுக்கொண்டிருப்பதாகவும் சொன்னாள். முனிசிபல் சுகாதார அதிகாரி அந்த வட்டத்தில் ஒரே ஒரு கேஸ் ரிபோர்ட் ஆகியிருக்கிறதாகச் சேரியில் புகும்பொழுது சொன்னார். இதன் உண்மையைத் தெரிந்துகொள்ள, நானும், கலெக்டரும், மாகாணச் சுகாதார அதிகாரியும், முழங்கால் மண்டியிட்டுக் கையால் நகர்ந்து அந்தக் குடிசைக்குள் சென்றோம். அந்தக் குடிசையில் கண்ட காட்சி எனக்கு இன்னும் மறக்கவில்லை. ஐந்து பெயர்கள் அடங்கிய குடும்பம் அந்தக் குடிசையில் கயிற்றுக் கட்டிலிலும், தரையிலுமாக நோய்வாய்ப்பட்டு நினைவில்லாமல் கிடந்தார்கள். அதில் சிறுவர்கள் மூவரில் இருவர் உயிர் போய்விட்ட பிணங்கள். மற்ற மூவரும் பிணமாகிக்கொண்டிருந்தார்கள். "சுகாதார அதிகாரிகள் வந்தார்களா, மருந்து ஏதாகிலும், யாராகிலும் கொடுத்தார்களா" என்ற கேள்விக்குப் பதில்சொல்லுவோர் கிடையாது. முனிசிபல் சுகாதார அதிகாரிக்கு இங்கு நோய் பரவும் விவரமே தெரியவில்லை. இவ்வளவு சோதனை போதுமெனப் பரிவாரங்களுடன் முனிசிபல் முசாபுரி பங்களாவிற்கு ஒன்பது மணிக்குப் போய்ச்சேர்ந்தேன்.

உடனே அந்த ஊரிலுள்ள எல்லா டாக்டர்களுடனும் நான் கலந்துபேச விரும்பி, அவர்களை அழைத்தேன். அரை மணி நேரத்தில் அவர்களும் வந்தார்கள். ஊரில் பரவியிருக்கும் நோயின் கொடுமையை நான் கண்டவாறு அவர்களுக்கு எடுத்துரைத்து, நீங்கள் எல்லோரும் உங்கள் உங்கள் வார்டுகளிலுள்ள கிணறுகளைச் சுத்தம்செய்வதற்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்ளவேண்டும். நோய் வராமல் தடுக்க எல்லோருக்கும் ஊசித்தடை மருந்து குத்தவேண்டுமெனவும் சொன்னேன். இதுவரையில் தங்களை எந்த அதிகாரியும் உதவி கேட்கவில்லை என்றும், மக்களுக்கு


# KERMES INDICA

## கர்மஸ் இன்டிகா

—:o:—

க்ஷயம் இழுப்பு (Asthma) இருமல், கக்குவான், குத்திருமல், ப்ராங்கைடீஸ், நியூமோனியா முதலிய நோய்களுக்கும் இன்னும் சுவாசக்குழாய்கள், சுவாசப்பை சம்பந்தமான சகல வியாதிகளுக்கும் சிறந்த மருந்தென்று வைத்திய நிபுணர்களால் ஆமோதிக்கப்பட்டது.

கபத்தை வெளியாக்கும் தன்மையுடையது. கோழையைச் சுலபமாய் இருமி வெளிப்படுத்தி இருமலைக் குணமாக்கி மார்பு விலாபக்கத்திலுள்ள வலியைப்போக்கி இழுப்பைக் குணமாக்குகிறது.

மருந்துகள் எல்லா ஊர்களிலும் எல்லா இங்கிலிஷ் மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்:—

"THE KAUSALYA PHARMACEUTICALS Ltd.,"

19, Sankurama Chetty St., G. T. Madras.

ஆபத்தில் உதவத் தாங்கள் எல்லோரும் காத்திருப்பதாகவும் சொல்லி, அன்று பிற்பகலிலேயே தாங்கள் கூடி, வேலையைப் பங்கிட்டுக்கொண்டு சுகாதார அதிகாரிகளுடன் உழைப்பதாக வாக்குறுதி அளித்தார்கள். மாகாண சுகாதார இலாகா தலைவரை அந்த ஊரிலேயே சிறிது நாள் தங்கி, வியாதியைப் பரவவிடாமல் செய்யவேண்டிய வேலைகளைப் பூர்த்திசெய்துவிட்டு வரவேண்டுமென உத்தரவிட்டு, அன்று பிற்பகல் காலரா ஆஸ்பத்திரியையும் அங்கு நடக்கும் முறைகளையும் பார்வையிட்டுப பிறகு நானும் ஓர் தடவை ஊசி குத்திக்கொண்டு கலெக்டரிடம் விடைபெற்றுப் புறப்பட்டு மறுநாள் காலை சென்னை வந்து சேர்ந்தேன். சுமார் ஒருவாரம் வரை எனது கவலை நீங்கவில்லை. நோய் குறைவதான நிலைமை ஒருவாரத்திற்குப்பிறகுதெரியவந்தது. தினசரி நிலைமை தந்திமூலம் எனக்குத் தெரிவிக்க ஏற்பாடு செய்திருந்ததால் நோயின் நிலைமையைக் கவனித்து வரமுடிந்தது. இரண்டு வாரத்திற்குள்ளாகக் குண்டூரைப் பிடித்த நோய் நீங்கியது. நான் சென்றபிறகு கையாண்ட முறைகளை முன்னரே செய்திருந்தால் ஆயிரக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றமுடியுமென்பது எனது முடிவு. இவ்வளவு சாவுகளுக்கும் அந்த ஊர் சுகாதார உத்யோகஸ்தர்களும், மாகாண சுகாதார நிலயமும் அதன் அதிகாரிகளும், அந்த இலாகா தலைவனை நானும் காரணமென்பது உண்மை. தமது கடமையைச் செலுத்தத் தவறினவர்களை விசாரணை செய்து அதற்குத் தகுந்தபடி அவர்களைத் தண்டிக்குமாறு ஏற்பாடு செய்தேன். நான் சென்னையிலிருந்து கொண்டே தபால் மூலம் உண்மையை அறிந்திருக்க முடியாது. குண்டூரிலிருந்து சுகாதார அதிகாரியால் அனுப்பப்படும் ரிப்போர்ட்டுக்களை மட்டும் நான் பார்த்திருந்தால், யாருடைய குறையும் தெரிந்திராது. நல்லவேளையாக அந்த ஜில்லா கலெக்டர் நல்ல விவேகியாக இருந்ததால் உண்மை நிலையைக் கவர்மெண்டாருக்குத் தெரிவித்ததோடு சுகாதார அதிகாரியின் திறமையின்மையையும் குறிப்பிட்டு யாதாஸ்து அனுப்பியிருந்தார். இதனின்று நான் செய்ய வேண்டிய வேலையின் திட்டமும் என் மனதிற்குத் தெளிவாயிற்று.

(1) தொத்து நோய்களிலின்று மக்களைக் காப்பாறறுவது அரசாங்கத்தாரின் கடமை. அதறகாக வேண்டிய சட்டமும் செய்ய வேண்டியது. சுகாதாரச் சட்டம் இயற்றியதற்குக் காரணமாக இருந்ததும் இந்தச் சமபவம்தான்.

(2) சுகாதார இலாகாவின் வேலை நோயைப் பரவ விடாமல் தடுப்பதும், நோய் வருமுன்னரே எச்சரிக்கை செய்வதும்.

(3) சர்க்கார்ப் பற்றில்லாத டாக்டர்களையும் உடன் உழைக்க வற்புறுத்தி, அவர்களுக்குத் தேவையான உதவியையும சுகாதார அதிகாரிகள் செய்ய வேண்டியது. (தொடரும்)


மேதாஸ்

# மஸ்தானு மாத்திரைகள்

## சிறந்த டானிக்

மேல்நாட்டு வைத்திய முறை, நமது ஆயுர்வேத முறை
இவைகளை ஒருங்கே சேர்த்து தயாரிக்கப்பட்டுள்ளது

**பலஹீனம், வாத வலிகள், மன ஓய்வு,**
**தலைவலி, அஜீர்ணம், மலச்சிக்கல்,**
**காசநோய், சிற்றின்பத்தில் பலஹீனம்**

இவைகளுக்கெல்லாம் கைகண்ட ஔஷதம்

**இன்றே ஆரம்பியுங்கள்**

**கிடைக்குமிடம்:—**

**K. S. மேதா & கோ.,**

மருந்து வியாபாரிகள்,

**250, சைனு பஜார் (மாடி), சென்னை.**

# TIMES HAVE CHANGED!

## TIME-KEEPERS IN B.C.1400







## *and in* 1944



பிஜௌ மினேச்சர் "A"
18 காரட் தங்கம், கனமான கேஸ் ரூ. 330



பிஜௌ மினேச்சர் "B"
18 காரட் தங்கம், கனமான கேஸ் ரூ. 310



பிஜௌ மினேச்சர் "C"
18 காரட் தங்கம், கனமான கேஸ் ரூ. 375

### காலம் மாறிவிட்டது!

சுமார் 3000 வருடங்களுக்கு முன்னர் இப்பாத்திரம்தான் மணியைக் குறிக்கும் கருவி என்றால் ஆச்சரிய மன்றோ. கி. மு. 1400 காலத்திய எகிப்து தேசத்து தண்ணீர் கடிகாரத்திற்கும் இன்றைய நுட்பமான அழகிய கடிகாரங்களுக்கும் எவ்வளவு வித்தியாஸம்! பழகிப்போய் விட்டதினால் இக்காலத்தில் கடிகாரங்கள் பல நூற்றாண்டுகளாக எப்படி விருத்தியடைந்து வந்திருக்கின்றன என்பதை நாம் மறந்து விட்டோம். கடிகாரம் விக்ஞானப்படி அமைக்கப்பட்ட கருவியாதலால், சிறந்த நம்பத்தகுந்த அமைப்பாயுள்ளதை வாங்குவதுதான் நலம். வெஸ்ட் எண்டு கடிகாரங்களே இதில் தலை சிறந்தவை.

சாமான்கள் சரிவர வராததின் காரணத்தால் விளம்பரப்படுத்தி இருக்கும் எல்லாவிதமான மாடல்களையும் சப்ளை செய்ய இயலாது. ஸ்டாக் உள்ளவரை கூடுமான வரையில் ஆர்டர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

வெஸ்ட் எண்டு வாட்ச் கோ., பம்பாய் — கல்கத்தா

# WEST END WATCH Co.

BOMBAY - CALCUTTA

# ஆண்மையும் பெண்மையும்

வே. நாராயணன்

—x—

18 APR 1944

ஆண் மக்களின் இயல்பு ஆண்மை; பெண் மக்களின் இயல்பு பெண்மை. நம்மவர் ஸ்வாதந்தர்யம் ஆண் மக்களின் இயல்பு என்றும் பாரதந்தர்யம் பெண் மக்களின் இயல்பு என்றும் கருதினார்கள். ஸ்வதந்திரமில்லாதவனுக்கு ஆண்மை இல்லை; ஸ்வதந்திரமுள்ளவள் பெண்ணாய்ப் பிறந்தவளாயினும் அவளுக்கு ஆண்மை உண்டு. எனவே, ஆண்மை பெண்மை இரண்டையும் இரு பாலாரிடமும் காணலாம். இக் கருத்தை இராமாயணக் கதை பல இடங்களிலே நன்றாக விளக்குகின்றது.

கைகேயிதேவி "இராமனைக் காட்டுக்குப் போ" என்கிறாள். இராமன் உடனே காட்டுக்குப் புறப்படுகிறான். "ஸூர்யனை ஸுவர்ச்சலை பின்பற்றுவதைப்போல நான் தர்மத்தைப் பின்பற்றுவேன்" என்று இராமன் சொல்கிறான். இவ்வாறு தர்மத்திற்கு வசப்பட்டிருப்பது பெண்மைக்குணமேயாகும். இது ஆண் மக்களுக்கும் இருக்கவேண்டிய பெண்மைக்குணம். இராமனிடத்தில் தனக்குள்ள பேரன்பினால் இலக்குவன், ஆண் மக்களும் தர்மத்திற்கு வசப்பட்டிருக்கவேண்டும் என்பதை மறந்து கோபத்தில் தன் ஆண்மையை எடுத்துக்காட்டும் வீரமொழிகளைப் பேசுகிறான். இவனுக்கும், ஸ்வதந்திரங்கொண்டு 'நானும் உன்னோடு வருவேன்' என்ற தன் தாய் கோசலைக்குமே இராமன் ஒரே சமாதானங்கூறுகிறான்; "தசரத மன்னன் உள்ளவரை தனக்கும் மற்று எவருக்குமே ஸ்வதந்திரம் என்பது இல்லை" என்பதுதான் இராமன் கூறும் சமாதானம்.

இராமன் சீதையிடம் விடைபெற்றுச்செல்ல வருகிறான். "பதினான்கு வருஷங்கள் நான் தந்தை ஏவலின்படி காட்டில் வசித்துவருவேன்; காடு என்பது மிக்க துன்பகரமானது; நீ இங்கேயே மாமனார் மாமிமார்களுக்குப் பணிவிடை செய்துகொண்டிரு" என்று சீதையிடம் கூறுகிறான். நாயகன் சொல்லியவண்ணம் செய்வது பத்தினிக்குணம்; அதனையே கற்புஎன்பார்கள். கணவன் தன்னைவிட்டுப் பிரிந்துசெல்ல நேரிடின் ஆற்றியிருப்பதல்லவா பெண்மைக் குணம்? இவ்வாறு தலைவி ஆற்றியிருக்கிறாள் என்று சிறப்பித்துப் பாடுவதே கவிமரபும் ஆகும்.

வான்மீகி முனிவர் இம்மரபை உணராதவர் அல்லர். இம்மரபை நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளுகிறார். சீதையின் காதல் கவிமரபுக்குள் அடங்கியதன்று என்பதை நிரூபித்து விட்டால், அளவிடமுடியாத அவளுடைய அன்பையும் அளவிட்டதாகும் அன்றோ? எனவே சீதை இராமனோடு எதிர்த்துப் போராடுகிறாள் என்று அவர் வர்ணிக்கிறார். "என் தகப்பனார் உங்களை மாப்பிள்ளையாகக் கொண்டபோது பெண் என்றா உங்களைக் கருதினார்? காட்டிலே காதலியைக் காப்பாற்றுவதற்குக்கூட தைர்யமில்லாதவர்களா நீங்கள்? உங்கள் ஆண்மை எங்கே போயிற்று?" என்கிறாள்.

"நீங்கள் உங்களுக்குரிய ஆண்மையை மறந்தாலும், நான் என் பெண்மையைக் கைவிடமாட்டேன். உங்களுக்கு முற்றிலும் வசப்பட்டவளாய் இருப்பேன்; பழமோ, காயோ, கறியோ, தண்ணீரோ நீங்கள் எது கொண்டு வந்து தந்தாலும் அதை அமிர்தமாகக் கொள்வேன். என் பிறந்தகத்தையோ வேறு சுகங்களையோ இந்த அரண்மனையையோ ஒன்றையும் நினைக்கமாட்டேன். உங்கள் காலிலே காட்டுச் செடிகொடிகளின் முட்கள் தைக்காதவாறு, அவற்றை மிதித்து மென்மையாக்கிக் கொண்டே நான் உங்கள் முன்னே நடந்து செல்வேன்" என்று ஆண்மையோடு பூசலிடுகிறாள் சீதாப்பிராட்டி.

காதல் விஷயத்திலேமட்டும் பெண்ணுக்கு ஆண்மையிருப்பது அழகு என்பது கவி ஹ்ருதயம். கணவனும் மனைவியும் ஸரிநிகர்ஸமானமாக இருக்கவேண்டிய துறை அது; அப்போதுதான் சிருங்கார ரஸம் பரிபூர்ணமாகும். ஆண்மையும் பெண்மையும் தலைதடுமாறிக் கிடப்பதும் ஓர் அதிசய அழகு வாய்ந்ததாகும். இவ்வுண்மையைச் சீதாராம ஸம்வாதத்தால் நன்கு விளக்குகிறார் ஆதிகவி என்னும் புகழ் படைத்த வான்மீகி முனிவர்.

இராமன் சீதையின் சீற்றத்தைக்கொண்டாடுகிறான். "காதலி விஷயத்திலே கட்டுப்பாடு என்பது உண்டா? காட்டுக்கு உன்னை அழைத்துக்கொள்ளாமற் போகமுடியுமா என்னாலே? உன்னை விட்டுக் காட்டுக்குத்தான் போவேனா? தகப்பனாரை ஸத்யவந்தராக்க வேண்டுமென்ற தர்மமன்றோ என்னைக் காட்டுக்கு உந்தித் தள்ளுகின்றது? உன்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளாமல், 'காட்டுக்கு வா' என்று உன்னைக் கட்டாயப்படுத்துவது தகுமா? உன் அபிப்பிராயத்தைத் வெளிப்படுத்துவதற்காகவே இவ்வாறு சொன்னேன்"

என்று சீதையைத் தன்னுடன் அழைத்துப் போக உடன்படுகின்றான் இராமன். பின்பு வனத்திலே பொன் மானைக்கண்டபோது சீதையின் ஏவலை மேற்கொண்டு இராமன் அம் மானைத்தொடர்ந்து செல்வதினின்றும் காதலர் விஷயத்திலே ஆண்மை பெண்மைகள் தடுமாறுவதே காதலின் ஒப்புயர்வற்ற சிறப்பை விளக்குவதாக அமையும் என்பதைக் கண்டுகொள்ளலாம். தலைவி தலைவனை வணங்குவதுகூட சிருங்கார ரஸத்திற்குப் பங்கம் விளைக்குமாதலால் 'அது கூடாது' என்பது கவி மரபு; காதலி காதலன் ஆகிய இருவருக்குமே பேராண்மையிருந்தால் மட்டுமே, அவர்களிடையே ஊடல் நிகழ்ந்தால் மட்டுமே, காதல் பயனுடையதாகும். இதுவே அகத்துறையின் இலக்கணம்; மற்ற வகைக் காம நுகர்ச்சியெல்லாம் 'புறத்த, பயனுமில'. புறத் துறைகளிலே ஆண்பாலார்க்கு ஆண்மையும் பெண்பாலார்க்குப் பெண்மையுமே அழகு தருவன என்றாலும், அகத்துறையிலே இம் முறைமை அழகுதராது என்பதே ஆதிகவி விளக்கிய உண்மை. இவ்வுண்மையை வற்புறுத்தவே, திருமங்கை மன்னன் தம்மைத் தலைவியாகவும் திருமாலைத் தலைவனாகவும் கொண்டு பாடிய பெரிய திரு மடலிலே,

"—காமத்தின்
மன்னும் வழிமுறையே நிற்றும் நாம்; மானோக்கின்
அன்ன நடையார் அலரேச—ஆடவர்மேல்
மன்னும் மடலூரார் என்பதோர் வாசகமும்
தென்னுரையில் கேட்டறிவதுண்டு; அதனை—
யாம் தெளியோம்;
மன்னும் வடநெறியே வேண்டினோம்"

என்று தமிழ்மரபிற்குப் புறம்பாகவேனும் தாம் மடலூரத் துணிந்ததைக் கூறி,

"மன்னனிராமன்பின் வைதேவி என்றுரைக்கும்
அன்னநடைய அணங்கு நடந்திலளே"

என்று சீதையின் நடத்தையைப் பிரமாணமாகக் காட்டுகிறார்.


# NICO FERRIN

**Iron and Vitamin B Tonic.**

**நிக்கோ-பெரின்**

**அயர்ன் வைடமின் B டானிக்**

:o:

ரத்த சோகை, பெர்னீஷஸ் அனிமீயா (Anaemias-Primary, Secondary) பலஹீனம், ரத்தக்குறைவு, முதலிய வியாதிகளுக்குச் சிறந்த டானிக்.

ஜீரண சக்தியைச் சீர்படுத்துவதிலும், ரத்தத்தை விருத்தி செய்வதிலும் நல்ல உதவி செய்கிறது. ஜ்வரங்களுக்குப் பிறகு ஏற்படும் பலஹீனத்தையும், கர்ப்ப ஸ்திரீகளுக்கு ஏற்படும் சோர்வு, ஓச்சல் பலஹீனத்தையும் போக்குகிறது.

மருந்துகள் எல்லா ஊர்களிலும் எல்லா இங்கிலீஷ் மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்:—

"THE KAUSALYA PHARMACEUTICALS Ltd.,"
19, Sankurama Chetty St., G. T. Madras.



**அடுத்துவரும் 'அல்லயன்ஸ்' வெளியீடுகள்**

1. அழகி
2. புஷ்பஹாரம்
3. எரி நட்சத்திரம்.
4. குழலோசை
5. லோபியின் காதல்
6. ரமாபாய் சரஸ்வதி
7. சந்தனக்காவடி
8. குழந்தை மனம்
9. தேவகி
10. கதைக்கோவை— தொகுதி 4

எங்கள் புத்தக ஜாப்தாவுக்கு உடனே எழுதுக.

**அல்லயன்ஸ் கம்பெனி**

மயிலாப்பூர் :: சென்னை

# மனமாற்றம்

'ஹரிணி'

"காமு! காமு!" என்று கதவைத் தட்டினான் மகாதேவன். "இதோ வந்துவிட்டேன் அண்ணா!" என்று ஓடினாள் காமு.

"உஸ்! அப்பாடா! கொஞ்சம் தீர்த்தம் கொண்டுவா" என்று கூறிய வண்ணம் சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டான். "ஆபீஸில் வேலை ரொம்பவா அண்ணா?" என்று பரிவுடன் கேட்டாள்.

"ஆமாம்! காமு! இரண்டு பெயர் 'லீவ்' போட்டுவிட்டார்கள். வேலை நெக்கு வாங்கி விட்டது. கமலு எங்கே?"

"மன்னி மாடியில் இருக்கிறாள். எழுந்திரு. கைகால் அலம்பிக்கொண்டுவா. நான் போய் இலை போடுகிறேன்" என்று கூறிவிட்டுச் சமயலறைக்குச் சென்றாள்.

கமலு தன்னுடைய உடுப்பறையில் ஜன்னல் கம்பியைப் பிடித்துக்கொண்டு, வெறு வெளியை உற்றுப்பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தாள். சிந்தையினால் அவள் முகம் வாடியிருந்தது. "மன்னி! அண்ணாவந்து விட்டான். சாப்பிட வருகிறாயா?" என்ற காமுவின் குரலைக்கேட்டுத் திடுக்கிட்டுத்திரும்பினாள். மூவரும் சாப்பிட உட்கார்ந்தனர். அண்ணனும், தங்கையும், யுத்தப் பேச்சில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். கமலு பேசவேயில்லை. தலை குனிந்த வண்ணம் சாப்பிட்டுக்கொண்டிருந்தாள். வழக்கத்திற்கு விரோதமாய்க் கமலுவின் முகமிருப்பதைக்கண்டு காமுவும், மகாதேவனும் ஆச்சர்யமடைந்தனர்.

"நான் இங்கு வந்தது மன்னிக்குப் பிடிக்கவில்லையோ என்னமோ" என்று காமு மனதிற்குள்ளேயே குமுறினாள்.

"இதற்கு என்ன காரணம்?" என்று மகாதேவன் யோசித்தான். இருவரும் வெளிப்படையாகக் கேட்கத் துணியவில்லை.

மகாதேவனுக்கு இஞ்சினியர் ஆபீஸில் வேலை. சாதாரண சம்பளம்தான். கமலு பிறந்தகத்துச் செல்வி. கபடமற்ற குணம். இரண்டு குழந்தைகளுக்குத் தாயாராகியும்கூட சிறு குழந்தைபோல் விளையாடுவாள். அவளுடைய குறுகுறுப்பான பார்வையும், கபடமற்ற புன்சிரிப்பும், ஓயாதப் பேச்சும் எல்லோரையும் மயங்கச்செய்தன. அவளுடைய கலகலவென்ற சிரிப்பொலி மகாதேவனுடைய உள்ளத்தைத் துள்ளி விளையாடச்செய்யும். அவர்களுடைய குடும்பத்தில் வேடிக்கையும், விளையாட்டும் நிறைந்திருந்தன. சந்தோஷமான அவர்களுடைய வாழ்க்கைப் படகு அமைதியாகச் சென்றுகொண்டிருந்தது.

காலம் ஓடியது. இப்பொழுது ஏனோ கமலுவின் மனதில் பழைய உத்ஸாகமில்லை. பேச்சுப்பிரவாகம் தடைப்பட்டது. எப்பொழுதும் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தாள். காரணம் தெரியவில்லை.

2

மகாதேவனும், சிவகாமுவும், மீனாக்ஷியம்மாளின் செல்லக்குழந்தைகள். பன்னிரண்டு வருஷங்களுக்குப் பிறகு அருமையாகப் பிறந்த சிவகாமுவை எப்படியெல்லாமோ வளர்க்க வேண்டுமென்று திட்டம் போட்டுக்கொண்டிருந்தாள். ஆனால் கடவுள் கட்டளை வேறுவிதமாக இருந்தது. மீனாக்ஷியம்மாள் திடீரென்று நோய்வாய்ப்பட்டாள். அவள் மனதில் தோன்றிய கற்பனைக்கோட்டைகள் காற்றில் மறைந்தன. தன் அருமைப்பெண்ணை அனாதையாக்கி விட்டுப்போய்விட்டாள். அவள் இறக்கும்பொழுது மகாதேவனுக்குப் பதினைந்து வயது, சிவகாமு மூன்று வயதுக் குழந்தை.

'தாய்க்குப்பின் தகப்பன் தாயாதி' என்பது உண்மையாகிவிட்டது. தாயாரின் நிர்மலமான அன்பை அடையப் பாக்கியமற்ற சிவகாமுவுக்குத் தாயும், தந்தையும், தமயனுமாக இருந்து ஆதரித்தவன் மகாதேவன் ஒருவன்தான். தன்னருமைத் தங்கையிடம் அவனுக்கு அளவற்ற வாஞ்சை. அவளைக் கண்கலங்கவிடாமல் காப்பதுதான் தன் கடமை என நினைத்தான்.

மகாதேவனுக்கு விவாகமான மறு வருஷமே காமுவுக்கும் விவாகமாகிவிட்டது. பணக்கார இடம்தான். ஆனால் அங்கேயும் அவளுக்கு அன்பும் ஆதரவும் கிடைக்கவில்லை. கணவன் முரடன். உல்லாச புருஷன். சுயநலக்காரன். ஏதோ காலம் கடத்தி வந்தான். அண்ணனுடைய ஆதரவுதான் அவளுக்கு அங்கேயும் ஆறுதலளித்து வந்தது.

ஆறு வருஷங்கள் ஓடிவிட்டன. காமுவுக்கு மூன்று குழந்தைகள் பிறந்து இறந்துவிட்டன. துரதிர்ஷ்டம் தொடர்ந்தது. கணவன் கெட்ட வழிகளில் சொத்துக்களை அழித்துவிட்டான். தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டான்.

'டாக்டர்'கள் கைவிட்டுவிட்டனர். காமு திக்பிரமை பிடித்தவள்போல் நின்ருள். அவள் மனக்கடலில் துக்க அலைகள் கொந்தளித்துக் கொண்டிருந்தன.

காமுவின் கணவன் கண்களை மூடி விழியாத தூக்கத்தில் ஆழ்ந்தான். மகாதேவனுடைய கைகளைப் பிடித்துக்கொண்டு "அண்ணு! என்னைக்கைவிடமாட்டாயே? நீதான் எனக்குக் கதி" என்று கதறினுள் காமு. மகாதேவனுக்குத் துக்கம் நெஞ்சைப்பிளந்தது. வார்த்தைகள் வெளிவரவில்லை. கண்ணீர் பெருக அவள் முதுகைத் தடவிக்கொடுத்தான்.

இப்பொழுது காமு தன் அண்ணுவினுடைய வீட்டிற்கு வந்து ஒரு வருஷமாகிவிட்டது. வெறிச்சென்றிருந்த அவளுடைய நெற்றியைப் பார்க்கும்பொழுதெல்லாம் அவன் மனம் துடிக்கும். அவளைச் சந்தோஷமாகவும், சாந்தியாகவும் வைத்துக்கொள்ள விரும்பினுன். அவளுடன் கலகலப்பாகப்பேசி அவள் மனவருத்தத்தைப்போக்க முயன்ருன். வீட்டிலிருக்கும் சமயமெல்லாம் காமுவுடன் பேசுவதிலேயே கழித்துவிடுவான். அவளுக்கு நல்ல புத்தகங்கள் வாங்கிவருவான். எப்படியாவது அவள் வருத்தப்படாமல் இருந்தால் அதுவே தனக்குச் சகல சுகமும் தரும் என்று எண்ணினுன்.

காமுவும் நிறைந்த வீட்டில் தன் வருத்தத்தைக் காட்டக் கூடாதென்று எல்லாரிடமும் கலகலப்பாக இருந்தாள். அவள் முகத்தில் அமைதியான சாந்தி நிலவியது. அன்பும், பொறுமையுமே உருவெடுத்து வந்தது போலிருந்தாள். இப்பொழுது அந்த வீட்டில் எல்லா வேலையும் அவளுடையவைதான். பம்பரம் போல் சுற்றிச்சுற்றி அலுப்பில்லாமல் சிரித்த முகத்துடன் வேலை செய்வாள். அண்ணுவினுடைய எல்லா வேலையையும் அவள் தான் செய்வாள். "மன்னி! உன்னுல் முடியாது. நீ உட்காரு. நான் குழந்தையைக் குளிப்பாட்டி விடுகிறேன்" என்பாள். 'கோபு! சாப்பிட வரயாடா கண்ணே?" "மன்னி! தலை பின்னிவிடட்டுமா?" "அண்ணு காப்பி கொண்டு வரட்டுமா?" என்று உபசரித்த வண்ணமிருப்பாள். 'ஏன்' என்பதற்கு முன் எண்ணெயாக நிற்கும் தன் தங்கையின் குணத்தைக் கண்டு மகாதேவன் மனம் பூரித்தான். குழந்தை கோபு 'அத்தை! அத்தை!' என்று அவளிடம் உயிராக இருந்தான். சாப்பாடு, படிப்பு, விளையாட்டு, தூக்கம் எல்லாம் அத்தையிடம் தான். கைக்குழந்தை காமுவிடமேதான் வளர்ந்ததென்றுகூடச் சொல்லலாம். காமுவுக்கு மனதில் சற்று நிம்மதியும், சாந்தியும் ஏற்பட்டன.

— 3 —

பிற்பகல் இரவு. ஒன்பது மணியிருக்கும். கமலு வாசற் பக்கத்து அறையில் படுத்துக் கொண்டிருந்தாள். மனச் சோர்வினுல் அவள் சரீரம் பலஹீனமடைந்து காணப்பட்டது. குழந்தை கோபு தூங்கி விட்டான். காமு கூடத்தில் சின்னக்குழந்தையைத் தொட்டிலில் விட்டு ஆட்டிக் கொண்டிருந்தாள். மகாதேவன் கமலுவின் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான். அவள் பேச வில்லை.

"என்ன கமலு! ஏன் ஒரு மாதிரியாயிருக்கிருய்? உடம்புக்கென்ன?"

"ஒன்றுமில்லையே."

"உன் முகம் தான் சொல்லுகிறதே. ஏன் மறைக்கிருய்? உனக்கென்ன குறை? சொல்லேன்."

கமலு அவனை உற்றுப்பார்த்தாள். சிறிது நேரம் மௌனம். "சரி! அதெல்லாம் இருக்கட்டும். கொஞ்சம் தீர்த்தம் கொண்டுவா. பார்க்கலாம்" என்று சிரித்தான்.

"ஏன்? காமுதானிருக்கிருளே! நானெதற்கு?"

"இதற்கென்ன அர்த்தம்?" என்ருன். அவன் குரல் கடினமாயிருந்தது.

"அர்த்த மெல்லாம் எனக்கென்ன தெரியும்?" என்று அலக்ஷியமாகப் பதில் சொன்னுள்.

"உனக்கு வர வர புத்தி கெட்டுப்போச்சு."

"ஆமாம்." வார்த்தை அழுத்தமாயிருந்தது.

"என்னமோ என்று நினைத்தேன். குணத்தைக் காட்டிவிட்டாயே. காமு வந்து ஒரு வருஷம் கூட ஆகவில்லை, அதற்குள் உனக்குப் பிடிக்கவில்லையா?"

"பிடிக்க வில்லை என்று யார் சொன்னு?"

வாக்கு வாதம் பலத்தது. கூடத்திலுள்ள காமு திடுக்கிட்டாள்.

ஒரு வினுடி அவள் மனம் கலங்கியது. அடுத்த வினுடியே மனதைத் திடப்படுத்திக் கொண்டு, "அண்ணு! அண்ணு!" என்றழைத்தாள். அவள் குரலில் அன்பும், அனுதாபமும் கலந்திருந்தன.

"இதோ வந்தேன் காமு!" என்று எழுந்து சென்ருன். "என்ன அன்பு! என்ன உரிமை! சீ! கணவனுவது, மனைவியாவது, ஒரு பெண் 'அண்ணு' என்றழைக்கும் பொழுது ஏற்படும் பெருமை வேறு எதில் உண்டு?" என்று நினைத்தது அவன் மனம்.

"அவள் கூப்பிட்டால் ஓட்டம் தான்." என்று முணமுணத்த வண்ணம் திரும்பிப் படுத்துக் கொண்டாள் கமலு.




உங்கள் கூந்தலைக் காப்பாற்ற மூலமந்திரம்

உங்கள் கூந்தலைக் காப்பாற்றுவது உங்கள் கையிலேதான் இருக்கிறது......மிகவும் எளிதான முறை, ஆயினும் உங்கள் கூந்தலை இயற்கையாக வளர உதவியளித்து, அதன் அழகைக் காக்கும் தன்மை வாய்ந்தது. ஒரு பாட்டில்

**காமினியா ஆயில்**

(ரிஜிஸ்டர்டு)

இந்த விந்தையைச் செய்யும். ஒருமுறை உபயோகித்தால் மறக்கமுடியாது. அதன் நிகரற்ற மணம் அதைத் தேடிச்செல்லத் தூண்டும்

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். ஒரு அணா தபால் தலை அனுப்பினால் சாம்பிள் அனுப்பப்படும்.

**ஆட்டோ டில்பகார்**

(ரிஜிஸ்டர்டு)

மணங்களுக்குள் தலைசிறந்த அரசன். இதன் வசீகர மணம் நிகரற்றது. மதுசார சம்பந்தமற்றது.

எங்கும் கிடைக்கும்.

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். 2 அணா தபால தலை அனுப்பினால் சாம்பிள் அனுப்பப்படும்.

சோல் ஏஜண்டுகள் :

**ஆங்கிலோ-இந்தியன் டிரக் & கெமிகல் கம்பெனி, பம்பாய்-2.**


மறு நாள் மாலை ஐந்து மணி. காமு தன்னுடைய துணிகளைப்பெட்டியில் எடுத்துவைத்துக் கொண்டிருந்தாள். கமலம் மாடியறையில் படித்துக் கொண்டிருந்தாள். மகாதேவன் ஆபீஸிலிருந்து வந்ததும் "இதென்ன காமு! எங்கே பயணம்?" என்றான்.

"கோபித்துக் கொள்ளாதே அண்ணா! என் ஓரகத்தி என்னை உடனே புறப்பட்டு வரும்படி எழுதியிருக்கிறாள். நீ ஆபீஸுக்குப் போன பிறகு கடிதம் வந்தது. எதற்கும் தயாராக இருந்தால் நீ வந்தவுடன் கேட்டுக்கொண்டு புறப்படலாமென்றுதான் மூட்டை கட்டி வைத்தேன்."

"தனியாகவா, என்ன அப்படிப்பட்ட அவசரம்? யோசித்துச் செய்யலாமே?"

"இல்லை அண்ணா! அவசரமில்லாவிட்டால் அப்படி எழுத மாட்டாள். போய்விட்டு வருகிறேன். அவாளையும் விட முடியுமா அண்ணா! என்ன இருந்தாலும் புகுந்த இடத்து மனுஷாளைத் துறக்க முடியுமா? சொல்லு. எல்லாரும்தான் வேணும். கோமதியின் பாட்டி இன்று போகிறாளாம். நல்ல துணை. பிறகு நல்ல துணை கிடைக்காது. போகிறேன், என்ன?"

"சரியம்மா! நானென்ன சொல்வது? போய்வா. நானும் ரயிலுக்கு வருகிறேன். இதோ பார் காமு! இந்த வீடு உன்னுடையது. திரும்பி வர நான் கூப்பிட வேணுமென்று யோசிக்காதே. எப்பொழுது வர வேண்டுமென்று உனக்குத் தோன்றுகிறதோ உடனே புறப்பட்டு வந்து விடு. உனக்காக என் வீட்டுக் கதவு எப்போதும் திறந்திருக்கும். தெரியுமா?" என்றான் மிக்க வாஞ்சையுடன்.

"ஆகட்டும் அண்ணா!" என்று அன்பும், துக்கமும் கலந்த பார்வையுடன் கூறினாள். கண்களில் கண்ணீர் துளித்தது.

— 4 —

"கமலு! கமலு!" என்று மகாதேவன் கதவைத் தட்டியதும் "இதோ வந்தேன்" என்று ஓடினாள் கமலு. அவள் குரலில் பழைய உத்ஸாகம் தொனித்தது. மகாதேவன் உடுப்புக்களைக் கழற்றுவதற்குள், கால் அலம்ப ஜலமெடுத்து வைத்து, இலை போட்டு வெகு சுறுசுறுப்பாக வேலை செய்தாள். அவள் மனம் விடுதலையடைந்த பக்ஷியைப்போல் ஆனந்தமாகப் பறந்தது.

மகாதேவன் இந்த மாறுதலைக் கவனித்தான்.

அன்று நல்ல நிலா. சாப்பாடு முடிந்ததும் கமலு வெற்றிலைத் தட்டுடன் கணவனருகில் வந்து உட்கார்ந்தாள்.

"காமு இல்லாமல் வீடே வெறிச்சென்றிருக்கிறது. இல்லையா கமலு?"

கமலத்தின் முகம் கறுத்தது. "ஆமாம்! காமுதான் ஓசத்தி. நானிருப்பது பார்வையாயில்லையாக்கும்?"

"சீ! அசடே! அதென்ன அப்படிச் சொல்லுகிறாய்? நீ இல்லாமல் என்னால் ஒரு நிமிஷம் கூட இருக்கமுடியாதே. தெரியுமா?"

"ஆமாம். எல்லாம் தெரியும். என்னைப் பற்றித்தான் ரொம்ப கவலை. நானிருந்தால் என்ன? இல்லர்விட்டால்தான் என்ன? காமு இருந்தால் போதும். காமு தீர்த்தம், காமு இலைபோடு, காமு என் வேஷ்டி எங்கே, காமு இதைப்படி, எல்லாம் காமு, காமு, காமுதான்" என்றாள் ஆத்திரத்துடன்.

"இதென்ன உளறல்? குழந்தையைப்போலிருக்கிறாயே என்று பார்த்தேன். சிறுவர்களைப்போல் போட்டிச் சண்டைகூடவா? சரிதான், சரிதான்."

"ஆமாம், நான் பேசினால் உளறலாய்த்தானிருக்கும். இருக்கட்டுமே. காமு பேசினால் அழகாயிருக்கும்." வார்த்தை தடித்தது.

"என்ன சொல்லுகிறாய்? கவனித்துப் பேசு. அவள் எனக்கு என்ன உறவு தெரியுமா?"

"தெரியாமலென்ன? நான் என்ன தப்புச் சொல்லிவிட்டேனாம்? அவள் வந்தது முதல் நீங்கள்தான் என்னைத் திரும்பிக்கூடப் பார்ப்பதில்லையே. இப்படி என்னை உங்களிடமிருந்து பிரித்துவிட்டாளே என்றுதான் சொல்லுகிறேன். உங்களுக்குப் பணிவிடை செய்யக்கூட எனக்குச் சுதந்திரமில்லையா? என் குழந்தைகளை என்னிடம் ஒட்டவிடாமலடிக்கிறாளே? அது சரியா? கோபுவுக்கு எதெற்கெடுத்தாலும் அத்தைதான். சின்னப் பாபா என்னை மறந்தேபோய்விட்டது. ஒரு வேலையும் செய்யாமல் இங்கே எனக்கென்ன வேலை? அவள் எது செய்தாலும் சரி. நான் சொன்னால்தான் தப்பு" என்று படபடப்பாகப் பேசினாள்.

மகாதேவன் ஒரு நிமிஷம் மௌனமாக இருந்தான். அவனுக்குச் சிரிப்பு வந்தது. ஒருவர் மேல் அன்பு காட்டினால் 'உனக்கு அவன்தான் செல்லம்' என்று சிறு குழந்தைகள் கோபித்துக்கொள்வதைப்போல் இருக்கிறதே இது என்று நினைத்தான். காமுவின் அதிக உபசாரத்தினாலும், அன்பினாலும் வந்த அனர்த்தம்தான் இது என்று தெரிந்துகொள்ள வெகு நேரமாகவில்லை.

"அடாடா! இதற்காகவா இவ்வளவு கோபம்? எல்லாம் நீதான் செய்யேன். உன்னால் முடியாதே என்றுதான் அவள் செய்தாள்."

"ஆமாம். முடியாது. இவ்வளவு நாளாக இவள்தான் வந்து செய்தாளோ? நீங்களே யோசித்துப் பாருங்கள். காமு வந்தாலும் வந்தாள். எல்லாத்துக்கும்அவள்தான் முந்திரிக் கொட்டை மாதிரி முந்திக்கொள்ளுகிறாளே: என்னுடன் பேசக்கூட உங்களுக்குப் போதில்லை."

மகாதேவன் தன்னுடைய தப்பையும் உணர்ந்தான். காமுவின் மனதைச் சந்தோஷப்படுத்துவதற்காக அவளுடனேயே அதிக நேரம் போக்கியதைக் கமலு தப்பாக எண்ணியது ஒரு விதத்தில் சரியென்று நினைத்தான். அவள் கையைப் பிடித்து தன்னருகில் இழுத்துக்கொண்டு,

"கமலு! கோபித்துக்கொள்ளாதே. இதோ பார்! நான் சொல்வதைக் கவனி. அசடுபோல் பேசாதே. நீ புத்திசாலி. பொறாமைக்கு இடம் கொடுப்பது அழகல்ல. பாவம். காமு அன்பையே அடையாதவள். அன்புதான் மனித வாழ்க்கையின் முக்யமான அம்சம். அதைக் காமு அடையவில்லை. பிறரிடம் அன்பு செலுத்தக்கூட அவளுக்கு உரிமை கிடையாதா? யோசித்துப் பார். ஒவ்வொரு மனிதனுக்கும் ஏதாவதொரு இடத்தில் அன்பைச் செலுத்தவேண்டியது கடவுள் இட்ட கட்டளையல்லவா? அன்பெனும் வஸ்து நம்முடன் பிறந்து இரத்தத்தில் ஊறியது. காமுவும் அன்பின் உருவம். அவள் மனதில் எழும் அன்புமயமான வார்த்தைகளை அவள் யாரிடம் கூறுவாள்? கமலு! நீதான் சொல்லு. அவள் அன்பை, ஆசையைப் பகிர்ந்துகொள்ள அவள் கணவன் இருக்கிறானா? அல்லது குழந்தைகள்தானிருக்கின்றனவா? அவள் அனாதை. என்னைத் தவிர இவ்வுலகத்தில் அவளிடம் ஆதரவாகப் பேசக்கூடியவர்கள் யார் இருக்கிறார்கள்? பாவம்! அன்பிற்கு ஏங்கிய ஆத்மா அவள். சின்ன வயதில்—குதித்து விளையாடும் வயதில், எவ்வளவு கஷ்டப்பட்டாள் தெரியுமா? காமு! என்று அன்பாக யாராவது கூப்பிட்டதுண்டா அவளை? கணவனாவது அவளை நன்றாக வைத்துக்கொண்டானா? என்ன அப்படிப்பார்க்கிறாய் கமலு! உன் பேரிலும், குழந்தைகள் பேரிலும் அவள் உயிரையே வைத்திருக்கிறாள்" என்று நிறுத்தினான். கமலு பதிலே சொல்லவில்லை. கணவனைக் கண்கொட்டாமல் பார்த்தாள். மகாதேவன் மேலும் பேசினான்.

"கமலு! இதைக்கேள். கடைசிக் காலத்தில் கண்ணுங் கண்ணீருமாக என்னைக் கூப்பிட்டு 'மகாதேவா! குழந்தை காமுவை கண் கலங்காமல் பார்த்துக்கொள். அவள் வாழ்க்கையில் மாத்திரம் துக்கத்தை அனுபவிக்கும்படி விட்டுவிடாதே' என்று கூறிய என் தாயாரின் வார்த்தையை நான் காப்பாற்றவேண்டாமா? காமுவுக்கு நான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றவேண்டாமா? பகவான்தான் அவளை ஆயுள் முழுவதும் துக்கத்தை அனுபவிக்கும்படி செய்துவிட்டார். நானும் அவளை நோகச் செய்யலாமா? அவளுக்கு எதைச் செய்தால்—எப்படியிருந்தால் மனதிற்குச் சாந்தி ஏற்

படுமோ அதைச் செய்ய விட்டுவிடுவதுதான் 'தர்மம்'' என்றான்.

கமலுவின் கண்களின் ஓரத்தில் கண்ணீர் துளித்தது. தலை குனிந்தாள்.

''கமலு! சகோதரியின் அன்பிற்கு இணையானது இவ்வுலகத்தில் எதுவுமே இல்லை. அந்த அன்பு பிரதிப் பிரயோஜனத்தை எதிர்பார்க்காதது. தாயாரிடம் இருப்பது 'வாத்சல்யம்.' சகோதரியின் அன்பு அதைவிட மிருதுவானது, இனிமையானது. தாயாராவது குழந்தை தப்புச் செய்தால் தண்டிப்பாள். சகோதரி மன்னிப்பின் உருவம். அவள் இதயம் முழுவதும் மன்னிப்பு ஒன்றுதான் நிறைந்திருக்கும். அன்புதான் நிறைந்திருக்கும். தன் சகோதரன், நல்லவனோ, கெட்டவனோ அவள் அதைப்பற்றிக் கவனிக்கமாட்டாள். இந்த உறவு கடவுளால் ஏற்படுத்தப்பட்டது. ஒருவராலும் உடைக்கமுடியாதது. சகோதரன் தன்னை அவமதித்தாலும் சரி, கொண்டாடினாலும் சரி, கோபித்தாலும் சரி, அன்பு செய்தாலும்சரி, அவளிடம் மன்னிப்பைத்தவிர வேறே ஒன்றுமே கிடையாது. அவனை எதிரில் கண்டவுடன் அவளுடைய மனம் பெருமையினால் பூரித்துவிடும். அவளுக்கு வேண்டியது சகோதரனின் சிநேகம் ஒன்றுதான். அந்தச் சிநேகத்தினால் அவள் உலகத்தில் தலை நிமிர்ந்து நடப்பாள். தெரியுமா? பலனை எதிர்பார்க்காத இந்த அன்புக்குப் பிரதியாக நாமென்ன செய்யப்போகிறோம். நீயே சொல்லு. உனக்குச் சகோதரன் இல்லை. தெரியவில்லை'' என்றான். அவன்குரல் மிதமிஞ்சிய அன்பினால்குழைந்தது.

அவனுடைய எல்லையற்ற சகோதர வாஞ்சையைக் கண்டு கமலு அதிசயமடைந்தாள். அவன் பேச்சைக்கேட்டுப் பிரமித்து விட்டாள். ஒருவரொருவர் சண்டையிட்டுக்கொண்ட குழந்தைகளின் மனம் எப்படி நல்ல வார்த்தையினால் இளகிவிடுமோ அதேமாதிரி அவளுடைய குழந்தை மனம்—இளகிய மனம்-கரைந்துவிட்டது. கணவனுடைய மடியில் கவிழ்ந்துபடுத்து விம்மி விம்மியழுதாள். மகாதேவன் மௌனமாக அவளைத் தடவிக்கொடுத்தான்.

5

இரண்டு மாதங்கள் சென்றன. காமுவைப் புறப்பட்டு வரும்படி நாலைந்து கடிதங்கள் எழுதினான். அதற்கு அவள்,

''அண்ணா!

அன்றைய தினம் எனக்குத் தோன்றியது; 'அண்ணாவினுடைய அன்பினால் மாத்திரம் தங்கைக்குத் திருப்தியும், சந்தோஷமும் ஏற்பட்டு விடாது' என்று. கோபமே இன்னதென்று அறியாத—அன்பு நிறைந்த இனிமையான வார்த்தையே பேசும் உனக்குக் கூட அன்று கோபம் வந்தது எனக்கு அதிசயமாயிருந்தது. காரணம்............

அண்ணா! உன்னுடைய வாழ்க்கைப்படகு எவ்வளவு சுகமாக ஆடாமல் அசையாமல் சென்று கொண்டிருந்தது? மன்னியிடம் நீ எவ்வளவு அன்பாகப் பேசுவாய்? மாசுமறுவற்ற மன்னியின் குழந்தை உள்ளம் எப்படித் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தது? அதிசயமான சாந்தி நிலவியிருந்த உன்னுடைய வாழ்க்கைக் கடலில் புயல் அடிக்கத் தொடங்கியது யாரால்? உங்களுடைய நிம்மதியைக் கலைக்க நான் விரும்பவில்லை.

என் துரதிருஷ்டம், என் கால் வைத்த இடமெல்லாம் சாந்தி அழிந்துவிடும். என் ஜன்மமே சாந்தியற்றது, துக்கமயமானது. அண்ணா! கோபித்துக்கொள்ளாதே. உன்னை விட்டு நான் வெகு தூரத்தில் செல்ல விரும்புகிறேன். எங்கேயாவது நீ சௌக்யமாயிருந்தால் அதுவே எனக்குச் சந்தோஷம். மன்னியின் மனது புண்ணாகும்படி ஒன்றும் சொல்லாதே. குழந்தைகளுக்கு என் அன்பும், ஆசியும்.

மன்னித்துக்கொள். இந்த உலகத்தில் ஒருவருக்கு என்ன வேண்டுமென்பதை மற்றவர் அறிந்து கொள்வது மிகவும் கடினம்?'' என்று பதில் எழுதி விட்டாள்.

கடிதத்தைப் படித்த மகாதேவனுடைய மனம் தத்தளித்தது. என்ன செய்வதென்று தெரியவில்லை. மனதிற்குள்ளாகவே குமுறிக் கொண்டிருந்தான். வேதனையினால் வாடி வதங்கிய தன் கணவன் முகத்தைப் பார்த்துக் கமலுவும் வருத்தப்பட்டாள்.

இயற்கையிலேயே பலஹீனமுள்ள அவளுடைய சரீரம் மனக்குழப்பத்தைத் தாங்கமுடியவில்லை. ஜுரம் வந்துவிட்டது. டாக்டர்கள் 'டைபாய்டு' ஜ்வரமென்றனர். வீட்டில் உதவிக்கு மனிதர்கள் கிடையாது. குழந்தைகள் கவனிப்பாரற்றுக் கஷ்டப்பட்டன. கமலு தன் நினைவின்றிப் படுத்துக்கிடந்தாள். காமுவுக்குத் தந்தியடித்தான் மகாதேவன். தந்தியைக்கண்டதும் காமு உளறியடித்துக்கொண்டு ஓடி வந்து விட்டாள்.

''வந்தாயா? காமு! வா! எங்கே வராமலிருந்து விடுவாயோ என்று பயந்தேன். உன் மனதும் சற்றுச் சாந்தியாகட்டும் என்று உன்னைப் பலவந்தப்படுத்தவில்லை. ஆனால் அதோ பார் காமு! கமலு எப்படிக்கிடக்கிறாள்! அதனால்தான் தந்தியடித்தேன்'' என்றான்.

''சாந்தியென்ன அண்ணா? இங்கேயிருப்பதைவிட வேறேஎங்கே எனக்குச்சாந்தி கிடைக்கப்போகிறது? வராமலென்ன? இந்தச்சரீரம் இனி எதற்கண்ணா? பரோபகாரத்திற்காகத் தானே. பரோபகாரம் செய்வதில்தான்

எனக்குச் சாந்தி, ஆனந்தம் எல்லாம்'' என்ருள். அவள் குரல் அமைதியாயிருந்தது.

''மன்னி! மன்னி!'' என்று அன்புடனழைத்தாள். அவள் கண்ணைத் திறக்கவேயில்லை. இரவும் பகலும் இடைவிடாமல் அவளருகிலிருந்து பணிவிடை செய்தாள். வேண்டாத தெய்வமில்லை.

''அண்ணு! இந்த உலகத்தில் எனக்கு யார் இருக்கிருர்கள்.? உன் சுகம்தான் என் சந்தோஷம். மன்னியைப் பார்த்தால் பயமாயிருக்கிறதே. மோசம் செய்துவிடுவாளோ?'' என்று சொல்லும் பொழுதே அவள் குரல் நடுங்கியது. கண்ணீர் ஆருகப்பெருகியது.

''அதெல்லாம் ஒன்றும் பயமில்லை காமு! பயப்படாதே பகவான் நம்மைக்கைவிடமாட்டார்'' என்று தைர்யம் சொன்னுன். ஆனல் அவன் கண்களும் கலங்கின.

இரண்டு வாரம் சென்றது. ஜுரம் சற்றுக் குறைந்தது, கண்ணை விழித்துப்பார்த்தாள். காமு அவளருகில் உட்கார்ந்து, ''மன்னி! மன்னி! இதோபார், நான் வந்துவிட்டேனே!'' என்று அன்பு ததும்பக் கூப்பிட்டாள்.

''காமு! வந்தாயா! என்மேல் கோபமில்லையே?'' என்று அவள் கையைப் பிடித்துக் கொண்டு கண்ணீர் விட்டாள்.

''எனக்கென்ன கோபம் மன்னி! ஒன்றுமில்லை. உடம்பை அலட்டிக்கொள்ளாதே'' என்று நெற்றியைத்தடவினுள்.

6

கமலு! கமலு! என்று கதவைத் தட்டினுன் மகாதேவன்.

''காமு! கொஞ்சம் போயேன்'' என்ருள் கமலம்.

''கமலு; கொஞ்சம் தீர்த்தம் கொண்டுவா.''

''காமு!'' என்று அவளைப்பார்த்தாள் கமலு. காமு தன் அண்ணுவைப்பார்த்தாள். அவன் முகத்தில் ஒரு விஷமப் புன்னகை.

''அம்மா! அம்மா! இந்தக் கணக்கைச் சொல்லிக்கொடுக்கமாட்டாயா?'' என்று தொந்தரவு செய்தான் கோபு.

''போடா, என்னுல் முடியாது. அத்தையிடம் சொல்லிக்கோ.'' என்று அதட்டினுள்.

'மன்னி! இந்தக் காப்பியைக் கொண்டு போய் அண்ணுவுக்குக்கொடு.

''என்ன காமு! என்னை அலக்கழிப்பதுதான் உனக்குவேலை. நீதான் கொடுக்கக் கூடாதா?''

''இல்லை மன்னி! நீ கொடுத்தால்தான் அண்ணுவுக்கு அந்தக் காபி பிடிக்கும்'' என்று சிரித்தாள்.

''ஆமாம். இதென்ன பரிகாசம்! உனக்கும் வேலையில்லை, உன் அண்ணுவுக்கும் வேலை இல்லை''.

மகாதேவன் காளிதாஸன் எழுதிய 'சாகுந்தலம்' படித்துக்கொண்டிருந்தான். கமலமும், காமுவும் தையல் வேலையில் ஈடுபட்டிருந்தனர். தையல் வேலையில் உட்கார்ந்து விட்டால் அவர்களுக்கு உலகமே மறந்து விடும்.

''கமலு! இந்தச் சுலோகத்தைப் படிக்கிறேன் கேள். எவ்வளவு அழகான ரசபாவம் நிரம்பியிருக்கிறது பார்'' என்ருன். கமலு அதைக் காதில் போட்டுக்கொள்ளவே இல்லை.

''காமு! இந்தப் 'பூ' கலர் சரியாயிருக்கா பார்'' என்ருள்.

''கமலு! இதைக்கேளேன்?''

''காமு! காமு! இந்தத்துணியைச்சற்று இழுத்துப்பிடியேன்.''

''என்ன கமலு! நான் கூப்பிடுவது காதில் விழவில்லையா? ஓயாமல் காமுவிடம் தானு பேச்சு. நல்ல காமு! அவள் வந்தாலும் வந்தாள் என்னிடம் பேசுவதேயில்லை. திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை. காமு! காமு! காமு தான் எல்லாம்.''

கமலு அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவள் கண்களில் வெட்கமும், துக்கமும் கலந்திருந்தன.

காமு தன் அண்ணனைக் கண்டிப்பவள்போல் விழித்துப் பார்த்தாள்.


டோங்ரேயின்
பாலாமிருதம்
பிரசித்தி பெற்ற குழந்தைகளின்
டானிக்

# ஏழையின் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம் திரு. வே. சிவக்கொழுந்து)

●

அண்ட மதிர முடியே கான இடியுங் குமுறுதே
ஆகாயத்தை மின்னல் வெட்டுத் துண்டம் போடுதே
கொண்டல் கூடிக் கருமை சேர்ந்து கவிந்து காணுதே
கோபங் கொண்ட வாடைக் காற்றும் சுழற்றி யடிக்குதே
விண்டு அரிய புதுமை யெல்லாம் விண்ணில் தோற்றுதே
விழ்ந்து மரமும் முறிந்து சாய்ந்து வாட்டங் காட்டுதே
குண்டு போலுங் குவிந்த துளியை வானங் கொட்டுதே
கூச்சல் போட்டுப் பறவைக் கூட்டம் ஒடுக்கந் தேடுதே.

கொக்கின் கூட்டம் கழனி யெங்கும் சுற்றிப் பறக்குதே
கோட்டைப் பொந்தில் கோட்டானுமே ஒடுக்கங் கொள்ளுதே
பக்க மெங்கும் பேரிரைச்சல் பதறக் கேட்குதே
பாழும் வீடும் ஓட்டை கொண்டு படுக்கை நனைக்குதே
சக்தி யன்னை வித்தை யெல்லாம் காட்டு கின்றாளே
சாம்பருக்குள் விட்டுப் பூனை பள்ளி கொள்ளுதே
துக்கம் பொங்கப் பசியும் மிஞ்சச் சோருகின்றேனே
தூக்க மின்றி நாலு நாளாய் வருந்துகின்றேனே.

மெத்த மழையும் பத்து நாளாய்க் கொட்டிப் பெய்யுதே
மேதினியைத் திகைக்கவைத்துச் சறுக்கி விழ்த்துதே
தத்துந் தவளை தத்தோமென்று தாளம் போடுதே
தாவிக் குதித்து வாவிக்குள்ளே வெள்ளம் பாயுதே
பத்தி விழ்ந்து கன்றுக்குட்டி பதறித் துடிக்குதே
பாலுமின்றித் தாயுமாளப் பரதவிக்குதே
சக்தித்தாயே! சக்தித்தாயே! நீயே சரணம்
சார்ந்து வந்து என்னைக்காத்து நீயே யருள்வாய்

பச்சைப் பயிரை மெத்த வெள்ளம் முற்றும் மூடுதே
பார்க்கும்போது அலையடித்து எங்குஞ் சாடுதே
கச்சை கட்டிக் காவல் நின்ற தோட்டக்காரரும்
காலே கடுக்க ஓட்டமோடிக் குடிசை புக்கனர்
நச்சைக் கக்கும் பாம்புதானும் ஏக்கங் கொண்டுமே
நாடிப் புற்றில் ஓடி யொளிந்து அடக்கங் கண்டதே
இச்சைகொண்டு எங்குந் திரியு மெந்தன் மைந்தனும்
ஈங்குவந்து சுகமே சேர நீயே காப்பாய்

உண்டிக்குழைக்க உயிரே போல்வான் தூரஞ் சேன்றானே
ஊக்கத்தோடு காளை யோட்டிக் கடுகிச் சென்றானே
வண்டிகொண்டு போன மைந்தன் வரவுங் காணேனே
வாவிக்குள்ளே வண்டிபாய மாண்டுவிட்டானோ?
கொண்டல் முழங்குங் குறியுங் கண்டு குதித்துச் சென்றானே
கூப்பிடவுந் தேற்றங்கூறி விடுத்துச் சென்றானே
மண்டியிட்டு அடியும் பணிந்தேன் மனது வைப்பாயே
மாநிலத்தை யீன்ற தேவி மகனைக் காப்பாயே

கார் இருளும் பக்கமெங்கும் கடுகி வருகுதே
கண்ணினொளி காட்சி குன்றப் புவனம் மறையுதே
பேரிரைச்சல் சேரவெங்கும் மழையும் பெய்யுதே
பெற்றமனம் சோர்வுகொண்டு மெத்தமாயுதே
ஊரினிலே உறுதுணையு மொருவரில்லையே
உன்னை நம்பி அன்னை நானும் வாழுகின்றேனே
தூரத்திலே மழுங்கலொளி தோன்றக்காணுதே
துள்ளுமொரு காளை வண்டி வெளிச்சமதுதானோ?


Mohenjodaro
Bharhut
Gandhara
Kusāna
அழகிய கூந்தல்-இதன்
இரகசியம் என்ன?
பற்பல விதமான கூந்தல் அலங்கார ஜோடிப்புகள் சகல தேச ஆடவர் பெண்மணிகளின் ஜீவிய வாழ்க்கையிலும் யுக யுகாந்தரமாக முக்கிய ஸ்தானம் வகித்து வந்துள்ளன. நம் பாரத நாட்டில் இது 5000 ஆண்டுகளுக்கு முன்பு தொட்டே வழங்கி வந்துள்ளதை மோகன் ஜொதாரோவில் தோண்டி எடுக்கப் பட்ட பொருள்கள் நிரூபிக்கின்றன.
ஏன், இந்நாளிலும் அழகிய மேனியும் பளபளப்பும் வாய்ந்த கூந்தல் தேக வனப்பையும் வசீகரத்தையும் அதிகப்படுத்தத்தான் செய்கிறது, ஆக்ஷபணையில்லை.
டாம்கோ கூந்தல் தேங்கா யெண்ணெயும் ஷாம்பூவும்.
தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்.
A TATA PRODUCT

# பேசக்கோண்ணு

ரா. வீழிநாதன்

—x—

பாத்திரங்கள்:—

ராமநாத சாஸ்திரி

அவருடைய மனைவி கமலாம்பாள்

R. N. சாஸ்திரி என்றழைக்கப்படும் ரங்கநாத சாஸ்திரி

மற்றும் ராமநாத சாஸ்திரியாரின் நண்பர், மாமனூர், மாமியார்.

காட்சி 1

குஜிலித்தெரு 18-ஆம் நம்பர் வீட்டுக்கூடத்தில் ராமநாத சாஸ்திரியாரும், கமலாம்பாளும் பேசிக்கொண்டிருக்கின்றனர்.

ராம: அடியே, இங்கே வாயேன்!

கம: எதுக்கு?

ராம: வாயேன் ஒரு சேதி!

கம; சொல்லுங்கோளேன் என்ன சேதின்னு?

ராம: ஒண்ணுமில்லை.........

கம; ஒண்ணுமில்லைங்கிறது ஒருசேதியா?

ராம: ஆமாம்......வந்து.........

கம: ஆமானுவது கேமானுவது, உபயோகமில்லாத்துக்கெல்லாம்.

ராம: சொல்றதுக்கு முன்னாடியே என்னவோ 'விடு விடு' ங்கறயே?

கம: சொல்லுங்கோளேன்!

ராம: உன் பேரென்ன?

கம: என்பேரா? உங்களுக்குத்தெரியாதோ?

ராம: தெரியும்டி தெரியும், தெரியாமலென்ன? ஒரு விஷயத்துக்கு.........

கம. தெரிஞ்சாக் கேட்பானேன்?

ராம: தெரியலைன்னுதான் வச்சுக்கோயேன்.

கம: வச்சுக்கவாவது? கட்டிண்ட பொம்மண்டாட்டி பேரு தெரியலைன்னு ஊரு சிரிக்காது?

ராம: கேட்கிற கேள்விக்குப் பதில் சொல்றயா? ஊர்வம்பை அளக்கறயா?

கம: அப்பப்பா!......இப்பொ நான் என்ன ஊர்வம்பையளந்துட்டேன். சரி சரி! உங்களுக்குப் பைத்தியம் பிடிச்சூட்டுதுபோலத்தான் இருக்கு. பித்தம் தலைக்கேறினா இப்படித்தான் பேசுவாளாம். எலுமிச்சம்பழத்தைப் பிழிஞ்சு தலையிலே வைச்சுத் தேய்ச்சா சரியாய்ப்போயிடுமாம்.

ராம: அதுக்கு நான் உன்னை ஆலோசனை கேக்கல்லையே. உன் பேரைச் சொல்லப்போறயா மாட்டாயான்னுதான் கேக்கறேன்.

கம: உங்ககிட்ட வீண் தகராறு பண்ணுவானேன். என் பேரு கமலம்.

ராம: அப்பா! தன் பேரைச்சொல்றத்துக்கு இவ்வளவு நாழியாச்சு, என் பேரைச்சொல்லு நாழிப்படுத்தாமே.

கம: உங்க பெயரையா? அதை எப்படி நான் சொல்றது?

ராம: உன் திருவாயாலேதான்!

கம: பொம்மனாட்டி ஆத்துக்காரர் பேரைச் சொல்லப்படாதுன்னா?

ராம: சொன்னா என்ன? குடியா முழுகிப் போயிடும்.

கம: புருஷா பேரைச் சொல்றது பாவம்னு சொல்லியிருக்கு.

ராம: எந்தச் சாஸ்திரத்திலே சொல்லி இருக்கோ?

கம: சாஸ்திரத்திலேதான் சொல்லணுமோ? முன் நாளிலே பெரியவா, புருஷனின் பெயரைப் பொம்மனாட்டிகள் சொல்லக்கூடாது என்றும், பொம்மனாட்டியைப் புருஷன் பேர் சொல்லியழைப்பதில்லைஎன்றும் வச்சிருக்கா? பெரியவா காரணம் தெரியாமெ ஒண்ணும் இப்படி வைக்கமாட்டா. அப்படி வச்சேயிருக்கட்டும். நமக்கு ஒண்ணும்நஷ்டம்வந்துவிடலே, பழைய சம்பிரதாயம் அப்படியேயிருந்தா உங்களுக்கென்ன?

ராம: எனக்கு அது பிடிக்கல்லை. உன் திருவாய் எனது பெயரைச் சொல்லிக் கூப்பிடணும்னு ஆசையாயிருக்கு, எனக்கு. நீ என் பேரைச் சொல்லித்தான் ஆகணும்.

கம: என்னாலே முடியாது. வீணாய் என்னைக் கஷ்டப்படுத்தாதேயுங்கோ!

ராம: நான் வேணும்னா உன் பெயரை முன்னாடிச் சொல்லிக் கூப்படறேன், கமலம். நீ என் பேரைச் சொல்லித்தான் ஆகணும்.

கம: என்ன பரிகாசம் வேண்டியிருக்கு. நான் போறேன்னா.

ராம: சரி. என் பேரை நீ சொல்லவேண்டாம். 'கிளப்'புக்குப்போறே. யாராவது புதிசா வரவா, என்னைப்பத்திக்கேட்டா, என்ன சொல்லுவே?

கம: நான் என்னவாவது சொல்லிக்கிறேன். உங்களுக்கு அதைப்பத்தி என்ன! நீங்க அதுக்குக் கவலைப்படவேண்டாம்.

ராம: என் பேரை நீ சொல்லப்போறதில்லையே.

கம: இல்லவே இல்லை.

ராம: உன் வாயாலே என் பேரைச்சொல்லும்படி செய்யலேன்னா, நான் ராமநாத சாஸ்திரியில்லை. இவ்வளவு பிடிவாதமா, உனக்கு? பார்ப்போம்.

கம: நான் சொல்லிப்பிட்டேன்னா என் பேரு கமலமில்லை. தெரியுமா?

ராம: பாப்பமே!

கம: பாப்பமே!

## காட்சி 2.

(திருச்சி ஜங்ஷனில், ராமநாத சாஸ்திரியாரும் அவரது மனைவியும்)

ராம: ஏண்டி. பொறந்தாத்துக்குப் போகணும்னு குதிச்சயே. கூட்டத்தைப் பார்த்தாயா! நாம்ப டிக்கட் வாங்கறத்துக்குள்ளே ரயில் ராமநாதபுரத்துக்குப் போயிடும்போலேயிருக்கே!

கம: போய் அடிச்சுப் பிடிச்சு எப்படியாவது வாங்கிண்டுதான் வந்தாகணும். இது முடியாதுன்னு சொன்னேன்னா 'நானும் புருஷன்னு' சொல்லிண்டு வெளியிலே கிளம்பறது எப்படி?

ராம: ரெயில்வேயிலேதான் "அநாவசியப் பிரயாணத்தை ஒழியுங்கள். இந்தப் பிரயாணம் அவசியம்தானா என்று மனத்தை அநேகந் தடவையாகக் கேட்டுக்கொள்ளுங்கள். கூடிய வரையில் பிரயாணத்தை நிறுத்திக்கொள்ளுங்கள்" என்று விளம்பரப்படுத்தியிருக்கானே, அப்படியிருக்கிறபோது, அனாவசியமாக ஏன் கூட்டம் போட்டுத் தொலைக்கறதுகள் சனியன்கள்.

கம: அவாவாளுக்கு ஏதாவது ஜோலியிருக்கும். ஜோலியில்லாமே, எதுக்காகப் பணத்தை வீணாச் செலவழிப்பாள். நாம்பவரலையோ! அதேமாதிரித்தான் ஒவ்வொத்தரும். பொறத்தையாரைப்பத்திச்சொல்ல நாம்ப யாரு?

ராம: நான் சொல்லலை அம்மா, எல்லாம் காலம் தலைகீழாக மாறிப்போச்சு. இரண்டு பேர் ஓடிவரத்தைப் பார்த்து ரெயிலை நிறுத்தி ஏத்திண்டு போறகாலம் ஒண்ணாயிருந்தது. இப்போ ஏறிணாப் பிடிச்சுத்தள்ளுகிறகாலமாயிருக்கு, இது மாதிரியில்லேன்னா "யானைக்கொரு காலம் பூனைக்கொரு காலம்" ங்கிற பழமொழிதான் எப்படியுண்டாகும்?

கம: பழமொழி உண்டானத்தையும் பாஷை உண்டானத்தையும் பத்தி அப்புறம் யோசித்துக்கொள்ளலாம். முன்னாடிப்போய் இரண்டு டிக்கட்டை வாங்கிண்டு வந்து சேருங்கோ.

ரர்ம: அடியே, கமலம், அதைப்பாரு. பொம்மனாட்டிகளுக்கு டிக்கட் கொடுக்கும் ஜன்னல்லே, கூட்டமே இல்லை. நீதான் இரண்டு டிக்கட்டை வாங்கிண்டு வந்தூடேன்.

கம: கூட்டத்தைக்கண்டா உங்களுக்கு உயிரே போயிடும் போலேயிருக்கு. ஏதுடா பொம்மனாட்டியை வாங்கப்போகச் சொல்றமேன்னு தோணலை உங்களுக்கு?

ராம: சரி, நீ மாட்டேன்னா நான் போய் விட்டு வர்றேன் (கிளம்புகிறார்)

கம: கொடுங்கோ காசை, நானே வாங்கிண்டு வந்தூடறேன். (போகிறாள்)

ராம: (தனக்குள்) என் பேரைச் சொல்லாவிட்டாலும் ராமநாதபுரம்னாவது சொல்லுவாளோ இல்லையோ. ரெயில்லே ஏறினதும் அதை வைச்சுண்டாவது பரிகாசம் பண்ணிப் பார்ப்போம்.

(கமலம் டிக்கட்டுடன் திரும்பி வருகிறாள். பிறகு இருவரும் பிளாட்பாரத்தை அடைகின்றனர். ரெயில் வருகின்றது. ஜனங்கள் ஏறிக்கொள்கின்றனர். உரிய காலத்தில் ரெயில் ஊதிக்கொண்டு கிளம்புகிறது.)

ராம: ஏண்டி, அன்னிக்குப் புருஷன்பேரைச் சொல்லமாட்டேன்னியே! இன்னிக்கு என் பேரைச்சொல்லாமெ டிக்கட் எப்படி வாங்கினே!

கம: டிக்கட் வாங்கறதுக்கு உங்க பெயரை எதுக்காகச் சொல்லணும்.

ராம: நீ ராமநாதன்னு சொன்னா என்ன? ராமநாதபுரம்னு சொன்னா என்ன? இரண்டும் ஒண்ணுதானே!

கம: அந்த ஊரு பேரைச் சொன்னாத்தான் டிக்கட் கொடுப்பானா! அந்த ஸ்டேஷனுக்கு முந்தியிருக்கும் ஸ்டேஷன் பேரைச்சொல்லி அடுத்த ஸ்டேஷனுக்கு டிக்கட் கொடுங்கோன்னு சொன்னேன். கொடுத்துட்டான். உங்க பேரைச்சொல்லிப்பாபத்தை ஏன் சம்பாதிச்சுக்கணும்?

ராம: அட பாபமே. இருந்தாலும் நீ கெட்டிக்காரிதாண்டி. இருந்தாலும் உன்னை லேசில் விடுவேனா, என் பேரைச்சொல்லாமே!

கம: அதெல்லாம் உங்க பாச்சா என்னிடம் பலிக்காது. கேட்டதில்லையா நீங்க, பொம்மனாட்டி பிடிவாதம்னு?

ராம: எதுக்காக அதைப்பத்தி இப்போ பேச்சு! பாப்பமே!

(ராமநாதபுரம் ஸ்டேஷனில் இறங்கி இருவரும் வீட்டை யடைகின்றனர்.)

## காட்சி 3

(ராமநாதபுரத்தில் கமலத்தின் பிறந்தகம்—கமலம், ராமநாத சாஸ்திரி, அவரது மாமனார் மாமியார், சம்பாஷிக்கின்றனர்.)

மாமனுர்: ஏன் மாப்பிள்ளே? இன்னும் இரண்டுநாள் இருந்தூட்டுப்போகப்படாதோ. இன்னிக்கே ஊருக்குக் கிளம்பணும்னு சொல்றேளாமே.

ராம: லீவு கிடைக்கிறது ரொம்ப சிரமமாயிருக்கு. இல்லாவிட்டா இருந்தூட்டுப்போறத்தைப்பத்தி என்ன?

மாமி: ரொம்ப நாளாச்சே வந்துட்டுப்போய். இருந்துட்டுப் போகலாமேங்கிறதுதான். வேறெ என்ன!

ராம: அதுக்கென்ன. இன்னொருதரம் சாவகாசமா வந்தாப் போச்சு. ரொம்ப மெனக்கட்டுப்பார்த்தேன். லீவு கிடைக்கவில்லே.

மாமி: அப்போ ஏழெட்டு நாளேக்குக் குழந்தை கமலமாவது இருந்தூட்டு வரட்டுமே.

மாம: ஆமாம். ரொம்பநாள்கழிச்சு வந்திருக்கா. பத்துப் பன்னிரெண்டு நாட்களிலே நானே கொண்டுவந்து விட்டுடறேன். அவள் கொஞ்சநாள் இங்கே இருக்கட்டும்.

ராம: சரி, இருந்துட்டுவரட்டும். உங்க ஆசையைக் கெடுப்பானேன். ஆனு, இந்த நாளிலே ஹோட்டல் சாப்பாடு ரொம்ப மோசமா இருக்கு. கூடியமட்டும் சீக்கிரமா அனுப்புச்சுடுங்கோ.

மாமி: சரி—இந்தாருங்கோன்னு! காப்பிக் கொட்டை ஆத்திலே இல்லே. வாங்கிண்டு வாங்கோளேன் போய். காப்பிபோட நாழியாயிடப்போறது.

மாம: இதோ போயிட்டு வர்றேன். (கிளம்பிச்செல்கிருர்)

மாமி: கமலம். நான் போய் பாலே வாங்கிண்டு வர்ரேன் சித்தே நீ அடுப்பைப்பத்தவை. (போகிருள்.)

கம. கூடவே வந்துடணும்னு ஆத்தைவிட்டுக்கிளம்பறபோதே, உத்தரவு போட்டேள். ஆனு அப்பாகிட்டே ஏழெட்டு நாள் இருந்தூட்டு வரட்டும்னு சொல்லிப்பிட்டேளே.

ராம: என்ன பண்றது. மறுக்க முடியவில்லே. பொறந்தாத்திலே வேரூணிப்போயிடாதே. சீக்கிரமா வந்தூடு.

கம: என்னுலே முடிஞ்ச வரைக்கும் சீக்கிரம் வந்தூட பார்க்கிறேன். உடனே திரும்பிப்போயிடப்போறேம்னு நினேச்சுச்சாமானேயெல்லாம் சரிவர மூடிவைக்காமே வந்தூட்டேன். போனதும் கொஞ்சம் கவனிச்சு மூடிவைச்சூடுங்கோ. எங்கேயாவது வீணுப்போயிடப்போறது.

ராம: அதெல்லாம் என்னுலே முடியாது. ஒரு ஊருக்குப் போனேம்னு வரத்துக்கு இரண்டு நாள் ஆயிட்டுதுன்னு என்ன பண்ணுகிறதுங்கிற யோசனே வேண்டாமோ, எப்பவுமே பெண் புத்தி பின் புத்திதான்.

கம: உங்க புத்திமட்டும் முன்புத்தியாக்கும். இரண்டு நாளிருக்கச்சொன்னு என்ன பண்றதுன்னு யோசிச்சு லீவு வாங்கிண்டு வந்திருக்கேளே அழகா! இங்கே வந்து லீவு கொடுக்க மாட்டேங்கிருன்னு ஆபீஸ்மேலே பழி போடறேளே. உங்க சமத்தை மெச்சிக்கணும். தன் தப்புத்தெரியாது. பொறத்தியாரைப் பத்தி அது நொள்ளே இது சொள்ளேன்னு சொல்லத் தெரியும்.

ராம: சொன்னது பிசகம்மா! சாமானே எல்லாம் மூடிக்கிடி வைச்சூடறேன் போருமோ இல்லேயோ?

கம: ஹோட்டல் சாப்பாடு உங்களுக்கு ஒத்துக்காது. கண்டதைக் கேட்டதை வாங்கித் திண்ணு உடம்பைக் கெடுத்துக்கொள்ளாதேயுங்கோ. போனதும் கடிதாசு போடுங்கோ.

ராம: இன்னும் உபதேசம் பாக்கியேதாவது இருக்கோ.

கம: போங்கோன்னு! எதுக்கெடுத்தாலும் உங்களுக்குப் பரிகாசம்தான்.

ராம: சரி, இன்னிக்கு 4 மணி வண்டிக்குக் கிளம்பிப்போறேன்.

க: சரி போயிட்டு வாருங்கே.

## காட்சி 4

*சில நாட்கள் கழிந்த பின்னர். ராமநாதபுரத்தில் அதே வீட்டில். (கமலமும் அவளது தாயாரும்)*

கம: அம்மா. அவருக்கு ஊடம்பு சரியாயில்லேயாம். உடனே கிளம்பி வந்துவிடுன்னு எழுதியிருக்கார்.

தாயார்: என்ன என்ன, அவருக்கு என்னடீ உடம்பு?

கம: ஒண்ணும் கவலேப்படவேண்டாம். கடுப்புவலியாயிருக்கு. ஹோட்டல் சாப்பாடு ஒத்துக்காததினுலேதான் இப்படியிருக்கு. நீ உடனே வந்துவிடுன்னு எழுதியிருக்கார் அம்மா. ஒத்தாசைக்குக் கிட்ட இருந்தாத் தானே தேவலே.

தாயார்: ஆமா ஆமா. நீ போயிடறதுதான் தேவலே. ஆனு உன்னே யாரு கொண்டுபோய் விடறது. அப்பாவுக்கும் உடம்பு நன்னுயில்லே. நான்கூட வரலாம்னு அப்பாவுக்கு யாராவது ஒத்தாசைக்கு வேணுமே. எனக்கு என்ன பண்றதுன்னு புரியலே. தெய்வம் நம்மைச் சோதிக்கிறது.

கம: ஏன் அம்மா. காலம்பற கிளம்பற வண்டியிலே கிளம்பிப்போனேன்னு என்ன பயம்? அது சாயந்தரத்துக்குள்ளே போயிடுமே.

தாயார்: போய்விடலாம். இருந்தாலும் அப்பாவையும் கேட்டுக்கோ.

கம: (அப்பாவிடம் சென்று) என் அப்பா, அவருக்கு உடம்பு சரியில்லேன்னு கடுதாசு வந்திருக்கு. பகல் வண்டியிலே, நான் தனி யாகப்போனு என்ன?

தக: போகலாம். யாராவது துணையிருந்து போயிட்டாக் கவலேகிடையாது. நீ போனதும் கடுதாசு எழுது.

கம: சரி அப்பா, அப்போ, நாளேக்காலம்பற நான் போயிட்டுவறேன்.

தக: சரி போயிட்டுவா.

காட்சி 5

(திருச்சி போர்ட்டு ஸ்டேஷனில் கமலம் தனிமையாக வந்து இறங்குகிருள், பிறகு ஸ்டேஷனுக்கு வெளியே வந்து ஒரு வண்டிக்காரனேக் கூப்பிடுகிருள்)

கம: (வண்டிக்காரன் வருவதற்குமுன் கடிதத்தைப் பார்த்துவிட்டுத் தனக்குள்) அட பாவமே, மனுஷனுக்குக் கடிதம் எழுதத் தெரிஞ்சாத்தானே. வீடு மாறிவிட்டேன்னு மட்டும் சக்கரவட்டமாக எழுதிவிட்டார். இவ்வளவு பெரிய பட்டணத்திலே நம்பர் தெரியாமே எப்படி ஒரு பொம்மனுட்டி வருவான்னு யோசித்தாரோ. ஆண்டார் தெருவிலே போய் நான் யாரைன்னு கேக்கறது. இதைச் சொல்லிக்காட்டினேம்னு 'உனக்குத்தான் புத்தி எங்கே போச்சு. ஒருமனுஷன் நம்பர் எழுதமறந்துபோயிட்டானே. நம்பரைக் கேட்டுண்டு வரவாண்டாமோ பொம்மனுட்டிகள்'ன்னு என் மேலேதான் சீறுவார். என்ன பண்ணுகிறதுன்னு புரியலேயே. ...சரி வந்தது வந்தாச்சு. ஆண்டார் தெருவிலேபோய் விசாரிச்சுப்போம் (பகிரங்கமாக) ஏய் வண்டி! ஆண்டார் தெருவுக்கு என்ன கேக்கறே?

வண்டி: மூணணுக் கொடுங்க.

கம: அதெல்லாம் முடியாது. இரண்டணுத் தான் தருவேன்.

வண்டி: போனுப்போவுது இரண்டரை யணுக்கொடுங்க.

கம: அதெல்லாம் முடியாது.. நான் சொன்னதுதான்.

வண்டி: எனக்குக் கட்டாதுங்க.

(புதியவர் ஒருவர் வருகிருர்)

புதியவர்: டேய், ஆண்டாள் தெருவுக்கு வரி யாடா 2 அணுத்தான் தருவேன்.

வண்டி: முடியாதுங்க.

புதிய: என்னடா முடியாது. ஆண்டார் தெருவுக்கு இரண்டணுவுக்கு மேலே என்னடா?

வண்டி: சரிங்க உக்காருங்க அப்பொ.


ஜம்மியின் லிவர்க்யூர்மூலம் புனர்ஜன்மம்



ஜம்மியின் லிவர் க்யூர்

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி நோய்களை குணப் படுத்துவதில் தாமதமோ, அசட்டையோ செய்வது ஆபத் தாகும். நோய் கண்ட மாத்திரத்தில் 36 வருட காலமாக கீர்த்தி பெற்ற இச்சஞ்சீவியை உபயோகியுங்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்

ஜம்மி வெங்கட்ரமணய்யா & சன்ஸ்

1/1, பிராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்,

திருச்சிராப்பள்ளி.

கம: ஏண்டாப்பா நான் கேட்டதுக்குமட்டும் வரமாட்டேன்னயே இப்பமட்டும் என்ன உனக்கு.

புதி: நீங்களும் ஆண்டார் தெருவுக்குத்தான் போறயளா?

கம: ஆமாம்.

புதிய: யாராத்துக்கோ?

கம: (மனத்துள்) அடதெய்வமே! தர்ம சங்கடமான்னு இருக்கு. ஆத்துக்காரர் பேரை எப்படிச்சொல்வது? ஆபத்துக்குத் தோஷமில்லேன்னு சொல்லிவிட வேண்டியதுதான். ஆனல் முழுப்பெயரையும் சொல்லாமே பேருக்கு முதல் எழுத்தைமட்டும் சொல்லிப் பார்ப்போம். வேறே என்ன பண்ணுகிறது? வெளிப்படையாக 'R. N. சாஸ்திரியாத்துக்கு.'

புதி; ஓகோ. அப்படியா! அவர் எங்காத்துக்கிட்டத்தான் இருக்கார். எனக்கு ரொம்ப தெரிஞ்சவர். நீங்கவேணும்னு வண்டிலே வாங்கோ. நான் நடந்தே வர்றேன்.

கம: பாதகமில்லே நீங்களும் வண்டிலேயே வாங்கோ. எனக்கு அவாம் தெரியாது. இப்பொதான் முதல்தடவையாக வர்ரேன்.

புதி: அதுக்கென்ன. நான் காண்பிக்கிறேன்.

(வண்டி, கடகடவென்று சப்தித்துக் கொண்டு நகருகிறது.)

புதிய; டேய் வண்டியை நிறுத்தப்பா! இது தான் R. N. சாஸ்திரி ஆம். அதோ இரும்புக் கிராதி போட்டு இருக்குப்பாருங்கோ அது தான் எங்காம். நான் வரட்டுமா?

கம: ரொம்ப வந்தனம் உங்களுக்கு. எப்படியப்பா போறதுன்னு பயந்துகொண்டிருந்தேன். வர்றேன்.

(கமலம் வீட்டினுள் நுழைகிருள்)

(வாசல் ரூமில் R. N. சாஸ்திரி என்ற கிழவர் உட்கார்ந்திருக்கிருர்)

கிழவர்; யாரது?

கம. ஏன் தாத்தா, இங்கேதானே R. N. சாஸ்திரியிருக்கார்?

கிழ: ஆமாம். என்ன விசேஷம்?

கம: அவரைப் பார்க்கணும். ஆத்திலேயிருக்காரோ?

கிழ: நான் தான் R. N. சாஸ்திரி. என்ன விசேஷமோ?

கம; நீங்களா?.........

கிழ: ஆம்.

கம: இல்லே.........

கிழ; இல்லேயா. நான் இல்லேயா?.........

கம; இல்லே. இல்லே. நான் பார்க்கவந்தது...

கிழ: என்ன நொள்ளே நொள்ளே.........

கம: உங்களேயல்ல. வீடு தட்டுக்கிட்டு வந்துட்டேன் விலாஸம் தெரியாமே. மன்னிக்கணும் ('விர்' என்று வெளியே போகிருள்.)

(இரும்புக்கிராதியடைத்திருக்கும் வீட்டை அடைந்து அந்தப் புதிய மனிதரிடம் வினவுகிருள்.)

கம: நான் பார்க்க வந்த R. N. சாஸ்திரி அவர் இல்லேயே!

புதி: நீங்க R. N. சாஸ்திரியைத்தானே சொல்றேள்.

கம: ஆமாம் ஆமாம். அவரைத்தான்.

புதி: அப்படின்னு அவர் தான்.

கம: அவராவது இவராவது. நான் சொல்றவர் கிழவரில்லேயே!

புதி: ஆண்டார் தெருவிலே சின்னஞ்சிறு குழந்தையைக் கேட்டால் கூட சொல்லுமே R. N. சாஸ்திரியாத்தை. இந்தத் திருச்சினுப் பள்ளியிலேயே ரொம்பப் பிரசித்தி பெற்ற R. N. சாஸ்திரி அவர் ஒத்தர் தானே. ரங்கநாத சாஸ்திரின்னு பேரு.

கம: அவர் பேரு ரங்கநாத சாஸ்திரியாரா? சரியாப்போச்சு! நான் ரங்கநாதசாஸ்திரியைக் கேட்க வரல்லே. ராமநாதசாஸ்திரியைன்னு சொன்னேன்.

புதி: எந்த ராமநாதசாஸ்திரி?

கம: முந்தி குஜிலித்தெரு 18 ஆம் நம்பர் வீட்டிலே இருந்தார். இப்பத்தான் ஏழெட்டு நாட்கள் முந்தி இந்தத்தெருவுக்கு வந்திருக்கார்.

புதி: ஓ கோ அவரா? எங்காத்திலேயேதானிருக்கிருர் அந்த ரூமிலே! ஓய் ராமநாதன். இங்கே வாருமையா!

ராம: (சிரித்துக் கொண்டே வெளி வந்து) கமலம் யாரு ஜெயிச்சா, பாத்தியா. பொம்மனாட்டி பிடிவாதம்னயே. புருஷப்பிரயத்தனத்தைப் பார்த்தாயான்னேன்.

கம: போங்கோன்னு!

# உபய களத்திரம்

கமலா பத்மநாபன்

—x—

மெலிந்த உடலுடன் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்த பங்கஜம் சிறிது புரண்டு மற்றொரு புறம் ஒருக்களித்துப் படுத்துக் கொண்டாள். சுவரில் மாட்டியிருந்த கடியாரத்தில் மணி ஆறு அடித்தது.

"ஹூம்! மணி ஆறு அடிச்சுடுத்தா? மருந்து சாப்பிட வேண்டும். என்றைக்கு இந்த மருந்து சாப்பிடும் காலம் ஒழியப் போகிறதோ! இருக்கிற ஸ்திதியைப்பார்த்தால் என் மண்டையோடு தான் இந்த மருந்துக்கும் முடிவு ஏற்படும் போலிருக்கிறது. ஈச்வரா! பணம், காசு, பதவி என்று நாங்கள் ஆசைப்படவில்லையே! ஏதோ இருப்பதை வைத்துக் கொண்டு திருப்தியாகத் தானே வாழ்ந்து வருகிறோம். நல்ல ஆரோக்கியத்தை அளிக்கக் கூடவா உனக்கு மனசு வரவில்லை? ஒரு நாளா இரண்டு நாளா? மூன்று வருஷ காலமாய் இதே பாடாய்ப்போய் விட்டதே! என்னைக் கட்டிக் கொண்டிருக்கும் அந்தப் புருஷருக்குத்தான் என்ன சுகம்" என்று மிகுந்த சலிப்புடன் வாய் விட்டுக் கூறிக்கொண்டே படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள் பங்கஜம்.

கட்டில் அருகில் முக்காலியின் மேல் இருந்த சிறிய மருந்து ஸீஸாவை நடுங்கிய கரத்துடன் கையில் எடுத்துக் கொண்டாள். பத்துச்சொட்டுக்கள் எண்ணி ஒரு அவுன்ஸ் தண்ணீரில் விட்டுக் கொண்டாள். உள்ளக் கலக்கத்தினால் அவள் கண்களில் துளித்த கண்ணீர்ச்சொட்டுக்களும் அதே சமயத்தில் அவளுடைய ஒட்டி உலர்ந்து போன தாடைகளில் உருண்டு வழிந்தன. பகவானைத் தியானம் செய்து கொண்டு மருந்தைக் குடித்தாள். பிறகு இரண்டு தலையணைகளை எடுத்துச்சுவரோடு பொருத்தி அதன் மேல் சாய்ந்து கொண்டாள். எதிரே மாட்டியிருந்த கண்ணாடியில் தனது உருவத்தைக்கண்டு, ஒரு வறண்ட புன்னகை அவள் இதழ்களில் தோன்றி மறைந்தது. அவள் மனது என்னென்னவோ எண்ணங்களெல்லாம் எண்ணித் துன்புற்றது.

வாசற்புறமிருந்து "கிரிங், கிரிங்" என்று ஸைகிள் மணியின் சப்தம் ஒலித்தது. பங்கஜம் சட்டென்று சிந்தனைத் தூக்கத்திலிருந்து விழிப்படைந்தாள். தன் கடைவிழிகளில் தேங்கி நின்ற கண்ணீரைச் சடுதியில் துடைத்துக் கொண்டு தலை மயிரைக் கோதி விட்டுக் கொண்டாள்.

"அம்மா, ஐயா வந்து விட்டாங்க! என்று „அனௌன்ஸ்" செய்து வாசற்புறம் ஓடிக் கதவைத்திறந்தான் வேலைக்காரப் பையன்.

ஸ்ரீவத்ஸன் தன் முகத்து வேர்வையை கைக்குட்டையினால் துடைத்துக்கொண்டே உள்ளே நுழைந்தான். அவன் முகம் சோர்ந்து, மிகுந்த களைப்புற்றவன்போல் தென்பட்டான்.

உத்சாகமற்ற, ஆனால் பரிவு தோய்ந்த குரலில் தன் மனைவியைப்பார்த்து "எப்படி இருக்கிறது. பங்கஜம்? டாக்டர் வந்திருந்தாரா? நான் இன்னும் சீக்கிரமே வந்திருப்பேன். நாளைய தினத்திற்குள் அர்ஜெண்டாய்ச்செய்து முடிக்க வேண்டிய ஒரு முக்கிய வேலையைப் பற்றிப் பிரஸ்தாபித்த வண்ணம் எனது ஆபீஸர் என்னை வெகுநேரம் நிறுத்திக் கொண்டுவிட்டார்." என்று கூறிக்கொண்டே பங்கஜத்தின் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான் ஸ்ரீவத்ஸன்.

பிரேமையுடன் அவளுடைய முகத்தருகே குனிந்தபொழுது கலங்கிப்போன அவளது நேத்திரங்களைக்கண்டு ஸ்ரீவத்ஸன் திடுக்கிட்டு, "கண்மணீ, அழுதாயா? நீ எப்பொழுது இந்த அசட்டுத்தனத்தை விடப்போகிறாய்? மனதை அலட்டிக்கொள்ளாமல் இருந்தால்தான் உன் வியாதி அதிகரிக்காமலிருக்குமென்று டாக்டர் படித்துப்படித்துக்கூறுகிறார். நீயோவென்றால் இப்படி அகாரணமாய் வருந்திக்குருட்டுயோசனைகள் செய்து உன் உடம்பு நிலைமையை இன்னும் பாழாக்கிக்கொள்கிறாய்! என் வார்த்தைகளுக்கு முன்பெல்லாம் நீ எவ்வளவு மதிப்பு வைத்திருந்தாய்? இப்பொழுது மாத்திரம் ஏனிப்படிப் பச்சைக்குழந்தைமாதிரி நடந்து கொள்கிறாய்?" என்று பங்கஜத்தை அன்புடன் கடிந்துகொண்டான்.

பங்கஜம் பதில் கூறாமல் விக்கி விக்கி அழ ஆரம்பித்தாள். எவ்வளவு முயன்றும் அவளால் அப்பொழுது தனது உணர்ச்சிகளை அடக்கமுடியவில்லை. ஸ்ரீவத்ஸன் அவள் கன்னங்களை லேசாக வருடியபடி "கண்ணே"

வேண்டாம். இப்படி அழாதே. மார்பு பட படப்பு ஜாஸ்தியாகிவிடும். உன் மனதில் இருப்பதைச்சொல். உன் இஷ்டம் எதுவானாலும் நிறைவேற்றி வைக்கிறேன். உன் குறை என்ன? தயங்காமல் சொல்'' என்று அவளுக்கு ஆறுதல் சொல்லி அவளைத் தேற்றினான்.

சிறிது நேரத்தில் பங்கஜம் தன்னைச் சுதாரித்துக்கொண்டு தன் கணவன் முகத்தை ஆவலுடன் பார்த்தபடி "உண்மையாகவா? என் இஷ்டம் எதுவானாலும் அதன்படி மறுக்காமல் செய்வீர்களா''

"உன் இஷ்டம் என்ன? முதலில் அதைச் சொல்''.

"நீங்கள் இன்னொரு விவாகம் செய்து கொள்ள வேண்டும். அதுதான் என்னுடைய நெடுநாளைக் குறை!''

பங்கஜத்தின் வார்த்தைகளைக்கேட்ட ஸ்ரீவத்ஸனின் இதயத்தில் சொல்லமுடியாத வேதனை உணர்ச்சி உண்டாயிற்று. அந்த வேதனை எங்கே தனது முகத்தில் பிரதிபலிக்குமோ என்று அஞ்சி அதை மறைக்க அவன் சிரமப்பட்டு வரவழைத்துக்கொண்ட ஒரு மாதிரி அலட்சியபாவத்துடன், பலமாய்ச் சிரித்தான்.

"பங்கஜம், நீ இறந்துபோன பிறகல்லவா அந்த யோசனை! அதைப்பற்றி இப்பொழுது என்ன?''

"இல்லை, நான் உயிருடன் இருக்கும் பொழுதே நீங்கள் ஒரு நல்ல பெண்ணைப் பார்த்து மணம் செய்துகொண்டால்தான் என் மனம் நிம்மதியடையும். நான் அனுபவிக்கும் வியாதியைவிட உங்களுக்குத் துளிக்கூட இல்லற இன்பமும் ஸௌக்கியமும் இல்லாமல் போய்விட்டனவே என்ற கவலைதான், என்னை அதிகமாக வாட்டுகிறது. ஏன், இந்தப்பெரும் கவலையே என்னைக் கொல்லாமல் கொல்கிறது என்று கூடச்சொல்வேன். என் இஷ்டத்தைப் பூர்த்தி செய்வீர்களா?'' என்று தன் நாயகன் கழுத்தைக்கட்டிக்கொண்டு கெஞ்சினாள் பங்கஜம்.

அவள் வார்த்தைகளைக்கேட்டு ஸ்ரீவத்ஸன் இடிந்துபோய் உட்கார்ந்தான். சில விநாடிகள் கழித்து, "பங்கஜம், உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா என்ன? எதற்காகக் கனவிலும் நடக்கமுடியாத ஒரு காரியத்தைச் செய்யும்படி என்னைத் தூண்டுகிறாய்? இல்லை, நான் உன்மேல் வைத்திருக்கும் அன்பின் ஆழத்தைப் பரீக்ஷை செய்து பார்க்கிறாயா? எனக்கு ஒன்றுமேபுரியவில்லை'' என்றான் வியப்புடன்.

"புத்தி சுவாதீனத்துடன்தான் நான் பேசுகிறேன். உங்கள் அன்பின் ஆழத்தை நான் அறிந்து பல வருஷங்கள் ஆகிவிட்டன. இனி மேல்தான் புதிசாய்ப் பரீக்ஷை செய்துபார்க்க வேண்டுமா? நாளெல்லாம் உழைத்துவிட்டு மாலை வீடு திரும்பினால், குதூஹலத்துடன் உங்களுக்கு வரவேற்பு அளித்து உற்சாகமூட்டக் கொடுத்துவைக்காத பாவியாகிவிட்டேன் நான்! நானும் எவ்வளவு நாட்கள்தான் பொறுத்துப்பார்ப்பது? மூன்று வருஷங்களாய் இதே கண்ணராவிப்பிழைப்புத்தான். ஆபீஸில் முதுகு ஒடிய வேலை செய்து சிரமப்படுவதுபோதாதென்று கிருஹ லக்ஷ்மியாகிய நான் செய்ய வேண்டிய வீட்டு வேலைகள் பல உங்கள் தலையில் விழுகின்றன. இதுமட்டுமா? பல இரவுகள் எனக்காகக் கண் விழித்துச் சிசுருஷை செய்வதினால் உங்கள் உடம்பும் நாளுக்குநாள் மெலிந்துகொண்டே வருகிறது. என்னால் இந்த கஷ்டத்தைப் பார்த்துக்கொண்டு இனிமேல் சும்மா இருக்கமுடியாது. நீங்கள் என் விருப்பப்படி நடந்தால்தான் என் மனசு சாந்தி பெறும். என்ன? மௌனமாக எங்கேயோ பார்க்கிறீர்களே? என்மேல் கோபமா?'' என்று வினவியபடி, இவ்வளவு நாழியாக உணர்ச்சிவேகத்தில் படபடப்பாய் பேசியதின் ஆயாசம் தாங்காமல் மேல்மூச்சுவாங்க ஸ்ரீவத்ஸனின் மடியின்மேல் தலை சாய்த்தாள் பங்கஜம்.

ஸ்ரீவத்ஸன் வேதனையுடன் பெருமூச்சொன்று விட்டு, தன் மனைவியின் முதுகைப் பிரேமையுடன் தடவிக்கொடுத்தான். சில நிமிஷ நேரம்


ஆப்டோன் ப்ளாக்குக்களும்
அழகான கலர் ப்ளாக்குக்களும்
செய்யுமிடம்!



எம். ஸி.
அப்பாசாமி செட்டி & கோ.,
14, ஜோன்ஸ் தெரு, மண்ணடி,
மதராஸ்.

தம்பதிகளிடையே ஆழ்ந்ததோர் மௌனம் குடிகொண்டிருந்தது. சிந்தனையில் ஆழ்ந்திருந்த ஸ்ரீவத்ஸனின் மூளையில் மின்வெட்டுப்போல் ஒரு நூதன எண்ணம் மின்னிற்று.

"பங்கஜம், இந்த விஷயத்தில் அவசரப்பட்டு என்னால் ஒன்றும் தீர்மானிக்க முடியாது. எனக்குச் சிறிது காலம் அவகாசம் கொடு. பிறகு என் சம்மதியைத் தெரிவிக்கிறேன்" என்றான்.

பங்கஜம் மகிழ்ச்சியுடன் தன் கணவன் மடியிலிருந்து தலையைத் தூக்கி எழுந்து உட்கார்ந்தாள். "பார்த்தேளா? இப்பொழுதே எனக்குப் பாதி நிம்மதி ஏற்பட்டு விட்டது. என் மனோபீஷ்டம் விரைவில் நிறைவேறி விட்டால் மனதிற்குப் பூரண சாந்தி பிறந்து விடும். அதனால் என் தீராத நோய் கூடக்குறைந்து தேகத்திற்குத் தென்பு (பலம்) உண்டாகுமென்று நம்புகிறேன்" என்று ஆர்வத்துடன் கூறிவிட்டுத் தன் கணவனின் கரங்களைப் பற்றி ஆசையுடன் தன் கண்களில் ஒத்திக் கொண்டாள்.

ஸ்ரீவத்ஸன் பங்கஜத்தை மணம் செய்து கொண்டு ஏழு வருஷங்கள் ஆகியிருந்தன. அவளை அவன் வாழ்க்கைத்துணைவியாக வரித்த பொழுது எல்லோரையும் போல் அவளும் நல்ல ஆரோக்யமும், அழகும் யௌவனமும் வாய்ந்த மங்கையாகத்தான் இருந்தாள். மண வாழ்க்கை நடத்த ஆரம்பித்த மூன்று வருஷங்களுக்குப் பிறகு பங்கஜத்தைத் தாய்மைப் பட்டம் நெருங்கிக் கொண்டிருந்தது. துர் அதிர்ஷ்ட வசத்தினால் ஆறும் மாதத்திலேயே அவளுக்குக் குறைப் பிரசவம் ஆகி மிகவும் கஷ்டப்பட்டாள். அந்தச்சமயத்தில் சரியான வைத்திய உதவியும் பராமரிப்பும் இல்லாத காரணத்தினாலோ அல்லது போதாத வேளையினால் தானோ அவள் தேக நிலைமையில் ஒன்று மாறி ஒன்றாகப் பலவித சிக்கல்களும் கோளாறுகளும் ஏற்பட்டன. நாளடைவில் இதே சாக்காய்ப் பங்கஜத்தின் ஹ்ருதயமே வெகுவாய்த்துர்ப்பலமாகி விட்டது. ஸ்ரீவத்ஸன் சாதாரண சம்பளக்காரன் தான். தன்னிடம் ஏற்கனவே இருந்த சொற்பப் பிதுரார்ஜித சொத்து முழுவதும் செலவழித்துத் தன் அருமை மனைவிக்கு வேண்டிய உயர்தர வைத்தியமும் இதர சௌக்யங்களும் அளித்து வந்தான். வியாதி வெக்கை ஒன்றும் இல்லாமல் இருந்தால் அந்தச் சம்பளத்தைக் கொண்டே இரு ஆத்மாக்களும் எவ்வளவோ சௌகரியத்துடன் வாழ்ந்திருக்கலாம். மருந்துகளும் டாக்டர் "பில்" லும் ஆளை விழுங்கும் பொழுது அவர்கள் ரொம்ப சிரமத்துடன் தான் குடும்பம் நடத்தி வந்தார்கள் என்று சொல்லவும் வேண்டுமோ?

ஹ்ருதய சம்பந்தமான நோய்களைக் கண்டு பிடித்துக் குணம் செய்வதில் மிகவும் பிரக்கியாதி பெற்ற ஒரு "ஹார்ட் ஸ்பெஷலிஸ்ட்"டைக் கொண்டு தன் மனைவியின் தேக நிலைமையைப் பரிசோதிக்கச் செய்தான் ஸ்ரீவத்ஸன். அவர் வந்து பார்த்து விட்டு நோயாளி பூர்ண ஓய்வு எடுத்துக் கொண்டு மனதையும் தேகத்தையும் அலட்டிக்கொள்ளாமல் இருப்பது அத்யாவச்யமென்பதைத் தெளிவாகக்கூறி அதன்படி நடந்து கொண்டால் அவள் உடம்பு இன்னும் க்ஷீணஸ்திதிக்கு வராமலிருக்கலாம் என்று எச்சரித்தார்.

ஸ்ரீவத்ஸனுக்குத் தன் மனைவி இந்த இளம் வயதில் இப்படி நோயாளி ஆகி விட்டாளே என்ற துயரமும் கவலையும் ஏற்பட்டதே ஒழிய நித்திய ரோகி என்று அவள் மேல் சிறிதும் வெறுப்போ அலக்ஷியமோ ஏற்படவில்லை. அதற்கு மாறாக அவன் அவள் மேல் வைத்திருந்த அன்பும் கனிவும் பன்மடங்கு அதிகமாகி, அவளை ஒரு குழந்தையைப்போல் கருதி ஓய்ச்சல் ஒழிவு இன்றி அவளுக்குச் சிசுருஷை செய்துவந்தான். வீட்டிலுள்ள சில்லறைவேலைகளைச் செய்யச் சொற்பச் சம்பளத்தில் ஒரு வேலைக்காரப் பையனை அமர்த்திக் கொண்டு சமையல் முதலிய வேலைகளை எல்லாம் இப்பொழுது ஸ்ரீவத்ஸனே செய்யும்படி ஆயிற்று.

பங்கஜத்தின் தேகஸ்திதி விசித்திர நிலைமைக்கு வந்து விட்டது. அதாவது ஒரு மாதம் சேர்ந்தாற்போல் கட்டிலோடு கட்டிலாய்ப் படுத்திருந்து பூர்ண ஓய்வு எடுத்துக் கொண்டால் அவள் உடம்பு தொந்தரவு ஒன்று மில்லாமல் சாதாரணமாக இருக்கும். அதை நம்பிக் கொண்டு அவள், தன் கணவன் வீட்டில் இல்லாத சமயங்களில், எழுந்து சற்றுக் காலாற நடமாடி ஏதாவது சுலபமான வேலைகளைச் செய்யப்போவாள். ஆனால் அந்தப் பாழும் தேகம் எப்படியோ நெகிழ்ந்து கொண்டுவிடும். மார்புப் படபடப்பு வந்து படுத்து விடுவாள். மறுபடியும் மாதக்கணக்காய்ப் படுக்கையை விட்டு எழுந்திருக்கும் பேச்சே கூடாது. "பூப்பட்டால் சிவக்கும் நீர் பட்டால் கொப்புளிக்கும் அவளது பொன்னான திருமேனி" என்றாலும் மிகையாகாது.

நன்றாக உண்டுஉடுத்தி ஓடியாடித் திரியும் இந்தச் சின்ன வயதில் இப்படிப் படுக்கையே கதி என்று கிடந்தால் யாருக்குத்தான் அலுப்புத் தட்டாது? பங்கஜத்தின் முக்கியமான கவலை தன் கணவனுக்குத் தன்னால் ஒரு விதச் சுகமும் சந்தோஷமும் இல்லாமல் போய் விட்டனவே என்பதுதான். இந்தக் குறையைத் தீர்க்கும்பொருட்டுத்தான் அவள் ஸ்ரீவத்ஸனை இன்னொரு கல்யாணம் செய்துகொள்ளும்படியாக மனப்பூர்வமாய் வேண்டிக்கொண்டாள். அவன் அதற்கு இணங்கமாட்டான் என்று அவள் அறிவாள். ஆனால் அவனை எப்படியாவது தாஜாசெய்து தன் விருப்பத்தின்படி நடக்கச்செய்யலாமென்ற திடமான நம்பிக்கை

அவளுக்கு இருந்தது. மேலும் ஸ்ரீ வத்ஸனுடைய ஜாதகரீதியாய் அவனுக்கு உபய களத்திர பிராப்தம் இருப்பதாக ஒரு ஜோஸியன் கூறியிருந்ததை அவள் மறக்கவில்லை.

"ஒரு புருஷனுக்கு இரண்டு மனைவியர் இருந்தால் வீண் சண்டையும் சச்சரவும்தான் ஏற்படுமேதவிர அதனால் அந்தக் கணவனுக்குத் துளி சுகமும் கிடையாது என்று பொதுவாய் உலக மக்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தை நான் பொய்யாக்கிவிடுகிறேன். இரண்டு கைகளையும் சேர்த்துத் தட்டினால்தானே சப்தம் கேட்கும்? நான் எல்லா விஷயங்களிலும் ஒதுங்கியிருந்து ஸர்வத்தையும் புதிசாய்வருகிறவளுக்கே விட்டுக்கொடுத்து விடுகிறேன். என் உயிர் உள்ளவரைக்கும் எனது பிரிய பர்த்தாவின் முகதரிசனம்மட்டும் கிடைத்துக்கொண்டிருந்தால் அதுவே எனக்குப் பரம திருப்தி. நான் ரொம்பரொம்ப நல்லவளாயும், அவளிடம் உண்மை அன்புடனும் நடந்துகொண்டால், தானே அவருக்கும் என்னிடம் கொஞ்சமாவதுபிரியம் ஏற்படாமலாபோகும்? பார்க்கலாம், என்னுடைய இந்த இலட்சியம் எவ்வளவு தூரம் வெற்றிபெறுகிறதென்று!"

மேற்கூறியபடி யோசனைகள் பல செய்வதிலேயே காலம் கடத்திவந்தாள் பங்கஜம்.

இதற்கு நடுவில் சில மாதங்கள் தேய்ந்தன. ஸ்ரீ வத்ஸனுக்கு எதிர்பாராதவிதமாய் வேலையில் உயர்வு ஏற்பட்டுச் சம்பளமும் ஜாஸ்தியாயிற்று. இதனால் தம்பதிகள் இருவரும் இன்னும் கொஞ்சம் ஸௌகர்யமாகவே வாழ்க்கை நடத்தச் சாத்தியமாயிற்று. சமையல் முதலிய வீட்டு வேலைகளைச் செய்யப் பிரத்தியேகமாக ஒரு ஆளை ஏற்பாடு செய்தான் ஸ்ரீ வத்ஸன். பங்கஜத்தின் உடம்பிலும் இப்பொழுது கொஞ்சம் தென்பு (பலம்) உண்டாகி வீட்டோடு சிறிது நடமாடவும் ஆரம்பித்தாள்.

ஒருநாள் எப்பொழுதும்போல் மாலை ஆபீஸிலிருந்து வீடு திரும்பிய ஸ்ரீ வத்ஸன் சந்தோஷத்துடன் தன் மனைவியைக் கூப்பிட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தான்.

"பங்கஜம், நீ அன்றையதினம் சொன்னாயே, அது எப்பேர்ப்பட்ட முதல்தரமான 'ஐடியா' (Idea) என்று எனக்கு இப்பொழுதுதான் புலப்படுகிறது. என் சிநேகிதர்கள் மூலமாகப் பெண்தேட ஏற்பாடு செய்யலாமென்றிருக்கிறேன்" என்றான்.

தன் கணவன் இன்னொரு விவாகம் செய்துகொள்ளச் சம்மதிப்பதாக வாய் திறந்து என்றைய தினம் கூறப்போகின்றானோ என்று பல மாதங்களாக ஆவலுடன் ஏங்கிக்கொண்டிருந்த பங்கஜத்திற்கு, இன்று ஸ்ரீவத்ஸன் தன் எண்ணத்தை வெளியிட்டதும், சந்தோஷத்திற்குப் பதிலாக, எக்காரணத்தினாலோ, பஹீரென்று கலக்கமும் வேதனையும்தான் எழும்பின. ஆனால் அவள் கெட்டிக்காரி. மனதிற்குள் உண்டான உணர்ச்சியை வெளிக்காட்டாமல் சமாளித்துக்கொண்டாள். தன் சஞ்சல புத்திக்குத் தானே வெட்கி, உள்ளத்தைக் கடிந்துகொண்டு மனதைத் திடப்படுத்திக்கொண்டாள். புன்சிரிப்புடன் தன் கணவனை ஏறிட்டுப் பார்த்து "எனக்கு இப்பொழுதுதான் நிம்மதி உண்டாயிற்று! நீங்கள் எங்கே பிடிவாதமாய் 'மாட்டேன்' என்று சொல்லிவிடுவீர்களோ என்று பயந்துகொண்டிருந்தேன்" என்றாள்.

ஸ்ரீவத்ஸன் பங்கஜத்தின் தியாகபுத்தியையும் திடசித்தத்தையும்கண்டு அயர்ந்துபோனான். அவள் முகத்தில் ஏதாவது மாறுதல் தென்படுகிறதாவென்று ஆராய்ந்தறிய விரும்புபவன்போல் சில விநாடிகள் கண்கொட்டாமல் அவள் வதனத்தைக்கூர்ந்து நோக்கியவண்ணம் அவளெதிரில் நின்றான்.

பங்கஜம் சிரித்துவிட்டாள். "அதென்ன அப்படி வைத்தகண் வாங்காமல் என்னைப் பார்க்கிறீர்கள்?"

ஸ்ரீவத்ஸன் தன் மனைவியை அருகில் இழுத்து அவளது கரங்களைப்பற்றித் தனது ஹிருதயத்தின்மேல்வைத்து அமுக்கிக்கொண்டான். "பங்கஜம், நிஜமாக நீ பிறகு வருந்தமாட்டாயே! புதியவள் வந்தபிறகு நான் உன்னை முன்போல் நேசிப்பதில்லையென்றும், நேரத்தையெல்லாம் அவளுடன் கூடிக் குலாவுவதிலேயே கழிப்பதாகவும் என்னைக் குற்றம் சாட்டமாட்டாயே?"

"மாட்டவேமாட்டேன்! என்னை என்ன அத்தனை சஞ்சல புத்திக்காரி என்று நினைத்துவிட்டீர்களா? நீங்கள் எந்த விதத்திலாவது ஆனந்தமாகவும் உல்லாசமாகவும் இருக்கவேண்டுமென்பதுதானே என்னுடைய அபிலாஷை! நான்தானே முதன் முதலாக உங்களை இந்தவிஷயத்தில் தூண்டியவள்?" என்று சிறிது ரோஸத்துடன் தன் கணவனுக்குப் பதில் அளித்தாள் பங்கஜம்.

மேற்சொன்ன சம்பாஷணை நடந்து சில தினங்களானபின் ஒரு நாள் ஸ்ரீவத்ஸன் தஞ்சாவூரில் இருக்கும் ஒரு பெண்ணைப்போய்ப் பார்த்து வருவதாகச் சொல்லிப் புறப்பட்டுச் சென்று சீக்கிரத்திலேயே திரும்பிவிட்டான்.

அவன் திரும்பி வந்ததும் பங்கஜம் ஆவல் துள்ள "என்ன, பெண் எப்படியிருக்கிறாள்? உங்கள் மனதிற்குப் பிடித்திருக்கிறாளா? நிறம் எப்படி? என்னைவிட வெளுப்பா? தலையில் மயிர் நிறைய இருக்கிறதா? உயரமா, குட்டையா?" என்று இப்படியாக ஒரே மூச்சில் பல கேள்விகள்போட்டு ஸ்ரீவத்ஸனைத் திணற அடித்தாள்.

ஸ்ரீவத்ஸன் பங்கஜத்தின் ஆவலைக்கண்டு கெட்டியாய்ச் சிரித்தான். "பங்கஜம், உன் கேள்விகள் எல்லாவற்றிற்கும விடைகள்கூற வேண்டிய அவச்யமே இல்லையென்று நினைக்கிறேன். பெண் எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை. அசல் கொழுக்கட்டை மாதிரி இருக்கிறது. தஞ்சாவூரிலிருந்து என்னோடு ரயிலில் பிரயாணம் செய்த ஒருவர், மைசூரில் இருக்கும் ஒருபெண்ணை ரொம்ப பலமாகச் சிபார்சுசெய்கிறார். அதையும் போய்ப் பார்த்துவிட்டு வரலாமென்றிருக்கிறேன். ஒருகால் பெண் மனதிற்குப் பிடித்திருந்தால் அங்கேயே விவாகத்தை முடித்துக்கொண்டு கையோடு பெண்ணையும் அழைத்துவந்துவிடலாமென்றிருக்கிறேன். உனக்கு இந்த ஏற்பாடு சம்மதம்தானே?" என்றான்.

பங்கஜம், மறுபேச்சுப் பேசாமல் தன் சம்மதியைத் தெரிவிக்க, ஒருவிதப் பாசாங்கு உத்சாகத்துடன், வேகமாய்த் தலையாட்டினாள்.

மறுவாரம் ஸ்ரீ வத்ஸன் ஏற்கனவே உத்தேசித்திருந்தபடி பெண் பார்க்க மைசூருக்குப் புறப்பட்டுச்சென்றான். அவன் மைசூர் போய்ச் சேர்ந்த மறுதினம் பங்கஜத்திற்கு அவனிடமிருந்து ஒரு தந்தி கிடைத்தது.

"உன் மனோபிஷ்டத்தை இன்று காலை நிறைவேற்றிவிட்டேன். வீணாவுடன் புறப்பட்டு நாளை மாலை அங்கு வந்துசேருகிறேன்."

ஸ்ரீ வத்ஸன்.

தந்தியைப்படித்ததும் பங்கஜத்திற்கு அவளையறியாமல் துக்கம் துக்கமாய் வந்தது. நன்றாக விம்மிவிம்மி அழுது தீர்த்தாள். பிறகு மனதைத் திடப்படுத்திக்கொண்டு "சீ இதென்ன பைத்தியக்காரத்தனம்! நானாகத் தானே அவரைத் தூண்டித்தூண்டி இன்னொரு பெண்ணை விவாகம் செய்துகொள்ளும்படி வற்புறுத்தினேன்! இப்பொழுது ஏன் என் மனது கிடந்து இப்படித் தவியாய்த் தவித்துத் துன்புறுகிறது? தெய்வமே, கடைசியில் என் மனதைத் தளரச்செய்து என்னைக் காட்டிக் கொடுத்துவிடாதே! என் கணவரின் சந்தோஷம்தானே எனது பாக்கியம்? பாவம், அந்த உத்தமசிலன் எனக்காக எவ்வளவு பாடு பட்டிருக்கிறார்? ஏன் இன்னமும்தான் படுகிறார்! அவர்பொருட்டு இந்த அற்பத் தியாகத்தை மனதாரச் செய்யத்தக்க மன உறுதி கூட எனக்கு இல்லாவிட்டால் நானும் ஒரு மனுஷியாவேனா? தர்மபத்தினி என்ற பெயருக்கு அர்கதை உள்ளவளாவேனா? ஈச்வரா, என் புத்தி பேதலிக்கும்படி செய்யாதே! உன்னைக் கெஞ்சி வேண்டிக்கொள்ளுகிறேன்!" என்று கடவுளைப் பிரார்த்தித்தாள்.

சில நிமிஷங்களுக்கெல்லாம் அவள் மனது சிறிது சமாதானமடைந்தது. தந்தியை எடுத்து மற்றுமொருமுறை படித்துப்பார்த்தாள். "வீணா! வீணா! எவ்வளவு இனிமையான பெயர்! பெயரைப்போல் அவளும் இனிமையான குணம் வாய்ந்தவளாகவே இருப்பாளென்று நம்புகிறேன்" என்று தனக்குள் கூறிக்கொண்டாள்.

கடந்த இரண்டுமாத காலமாய்ச் சுமாராய்த் தேறிக் குணமடைந்திருந்த அவளது சரீர நிலைமையை அன்றைய அதிர்ச்சி (தந்தி சமாசாரத்தினால் ஏற்பட்டது) பலமாய்ப் பாதித்துவிட்டது. ஹ்ருதயப் படபடப்பு அதிகமாகி எழுந்திருக்கக்கூடச் சக்தியில்லாமல் படுத்துவிட்டாள்.

மறுநாள் சாயந்திரம் மைசூரிலிருந்து வீணாவுடன் டாக்ஸியில் வந்திறங்கிய ஸ்ரீ வத்ஸன், பங்கஜம் வீட்டு வாசலில் நின்றுகொண்டு தன்னை வரவேற்பாள் என்று எதிர்பார்த்தான். அவளை அங்குக் காணாமல், பதைபதைத்த உள்ளத்துடன் வீணாவை ரேழி மூலையில் நிற்க வைத்துவிட்டுப் பங்கஜம் வழக்கமாய்ப் படுக்கும் அறையை நோக்கி ஓடினான்.

பங்கஜம் லேசாகப் புன்னகை புரிந்துகொண்டே படுக்கையின்மேல் தனது முழங்கைகளை ஊன்றியபடி சிரமத்துடன் எழுந்திருக்கப் பார்த்தாள். ஸ்ரீ வத்ஸன் ஒரே தாவலில் அவளைச் சமீபித்து, "கண்மணீ, வேண்டாம்! எழுந்திருக்காதே! சும்மா படுத்துக்கொள். எப்போது முதல் உடம்பு சரியாக இல்லை? இப்படித்தானா உன் சக்களத்திக்கு வரவேற்பு அளிப்பது?" என்று வருத்தத்துடன் வினவினான்.

பங்கஜம் தன் கணவன் கேட்டதற்குப் பதில் அளிக்கவே இல்லை! யாரையோ ஆவலுடன் தேடுபவைபோல் அவள் கண்கள் அறையின் வாசற்படிக்கு அப்பால் சுழன்று அலைந்தன. "எங்கே வீணா? கூடவே அழைத்துவருவதாகத் தந்தி கொடுத்தீர்களே!" என்று கேட்டாள் பதட்டத்துடன்.

"அவசரப்படாதே, பங்கஜம். வீணா வந்திருக்கிறாள். ரேழியில் நிற்க வைத்துவிட்டு வந்திருக்கிறேன். போய் அழைத்துவருகிறேன்" என்றுரைத்து வெளிப்புறம் வந்தான் ஸ்ரீ வத்ஸன்.

பங்கஜத்தின் இதயத்துடிப்பு இப்பொழுது பன்மடங்கு அதிகரித்தது. அடக்கமுடியாத ஆவலுடனும் இன்னதென்று விவரிக்கமுடியாத ஒருவித கலக்கமடைந்த உள்ளத்துடனும் தனது சக்களத்தியின் வருகையை எதிர்பார்த்த வண்ணம் படுத்திருந்தாள்.

ஸ்ரீ வத்ஸன் மறுபடியும் பங்கஜத்தின் அறைக்குள் வந்தபொழுது பச்சை வர்ண உறையினால் மூடப்பட்டிருந்த ஒரு வீணையைத் தழுவித் தாங்கியபடி உள்ளே பிரவேசித்தான். வீணையின் சொந்தக்காரியான தனது சக்களத்தி பின்னாலேயே வருவாள் என்று எதிர்பார்த்த

பங்கஜத்திற்குப் பெருத்த ஏமாற்றம் உண்டாயிற்று.

ஸ்ரீவத்ஸனுடைய மந்தஹாஸ வதனத்தில் இப்பொழுது குறும்புத்தனம் கூத்தாடியது. ஏதோ பெரியகாரியத்தைச் சாதித்துவிட்டவன் போல் வெற்றிப்பார்வையுடன் பங்கஜத்தைப் பார்த்தான். பங்கஜத்திற்கு ஒன்றுமே விளங்கவில்லை.

"வீணை அவளுடையதா?" எங்கே அவள்?" பங்கஜத்தின் பேச்சில் மறுபடியும் அதே படபடப்பும் ஆவலும் ஒருங்கே த்வனித்தன.

ஸ்ரீவத்ஸன் வீணையைக்கீழே வைத்துவிட்டுத் தன் மனைவியின் அருகில் உட்கார்ந்தான்.

சாவதானமாய், "பங்கஜம் இதோ இருக்கும் இந்த வீணைதான் அவள்! இந்த 'வீணை'தான் உன் சக்களத்தி! உனக்கு இன்னும் புரியவில்லையா?" என்று சொல்லிவிட்டுக் கரைகாணு வாஞ்சையுடன் பங்கஜத்தின் வதனத்தை நிமிர்த்தித் தன் முகத்தை அத்துடன் சேர்த்தான். அவள் இதழ்களும் அவன் இதழ்களும் கூடிக் கலந்தன.

பங்கஜத்திற்கு இன்னும் விஷயம் சரியாக விளங்கவில்லை. சில வினாடிகள் நேரம் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருப்பவள்போல் தென்பட்டாள். பிறகு "அப்படியானால் நீங்கள் நேற்று இன்னொரு கல்யாணம் செய்துகொள்ளவில்லையா? பெண்பார்க்கத் தஞ்சாவூர் போனது, பெண் பிடிக்கவில்லையென்று திரும்பிவிந்தது, பிறகு மைசூர்ப் பெண்ணைப் பார்க்கப்போனது, அங்கிருந்து எனக்குத் தந்தி அடித்தது, இவையெல்லாம் சுத்தப்புரட்டா?" என்று ஆச்சர்யத்துடன் கேட்டாள்.

ஒரு விதத்தில் எல்லாம் பொய், மற்றொரு விதத்தில் நிஜம்! நான் தஞ்சாவூர் போய் வந்ததும், பிறகு மைசூர் போய் இன்று திரும்பி வந்ததும் என்னவோ வாஸ்தவம்தான்! ஆனால் பெண் பார்க்கப்போகவில்லை. தஞ்சாவூரில் தயாரிக்கப்படும் நல்ல வீணை யொன்றை நேரில் பார்த்து வாங்கி வரலாமென்று அங்கே சென்றேன். ஆனால் அந்த ஊர் வீணை எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லையானதால் வாங்காமல் திரும்பி வந்துவிட்டேன். பிறகு என் குருவுடன் மைசூருக்குச்சென்று அவர் பரீக்ஷித்துப் பார்த்து 'அப்ரூவ்' (Approve) செய்த இந்தப் பழகிய வீணையை வாங்கிக்கொண்டு வந்து சேர்ந்தேன்" என்றான் ஸ்ரீவத்ஸன்.

"உங்கள் குருவா? அவர் யார்? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே! இதெல்லாம் என்ன கண்கட்டுவித்தை?"

"கண்கட்டு வித்தையுமில்லை ஒன்றுமில்லை, கண்ணே! என் குருவைப்பற்றி நான் இவ்வளவு நாட்களாக உன்னிடம் சொல்லாமல் இருந்ததற்கு என்னை மன்னித்துவிடு. உனக்குப் பிரமாதமாய் உடம்புக்கு வந்து நீ அடிக்கடி படுத்த படுக்கையாய்க்கிடக்க ஆரம்பித்ததிலிருந்து என் மனதிற்கும் அசாத்திய அலுப்பும் சோர்வும் ஏற்பட்டுவிட்டன. அதை மறந்திருப்பதற்காக நான் கடந்த மூன்று வருஷங்களாக ஒரு பிரபல வீணை வித்வானிடம் ரகஸ்யமாய் வீணை கற்று வருகிறேன். எனக்குத் திறமையுடன் வீணை வாசிக்கவந்த பிறகு, ஒரு நாள், இந்த உண்மையை உன்னிடம் வெளியிட்டு உன்னை அதி ஆச்சர்யத்தில் மூழ்கடிக்க வேண்டுமென்று உத்தேசித்திருந்தேன். பிரதி தினமும் மாலை ஆபீஸ் வேலை முடிந்ததும் நேரே அந்த வித்வான் வீட்டிற்குச் சென்று ஒரு மணி நேரம் அவரிடம் சிக்ஷைபெற்றுப் பிறகு வீட்டிற்குத் திரும்பும் பழக்கத்தை வைத்துக் கொண்டிருந்தேன். விடுமுறை தினங்களில் கூட ஆபீஸில் "ஸ்பெஷல் வொர்க்" இருக்கிறதென்று உன்னிடம் புளுகிவிட்டுபோய்க் கொண்டிருந்தேனே, அதெல்லாம் வீணை பயிலுவதற்காகத்தான். எனக்கு ஏற்கனவே சங்கீதத்தில் அபார ஆசையும் கொஞ்சம் ஞானமும் இருந்தபடியால் எனது குரு எதிர்பார்த்ததைவிட அதிகமாகவே நான் இந்த மூன்று வருஷத்திற்குள் வீணை வாசிப்பதில் தேர்ச்சியடைந்துவிட்டேன். இது நிற்க. சில மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் நீ திடீரென்று இன்னொரு கல்யாணம் செய்துகொள்ளும்படி என்னை வற்புறுத்தியபொழுது எனக்கு இந்த வேடிக்கையான எண்ணம் எப்படியோ உதித்தது. அதாவது உன் இஷ்டப்படியே நான் வேறு கல்யாணம் செய்துகொள்வதாக உன்னிடம் கூறிவிட்டு, ஒருநாள் திடீரென்று ஒரு நல்ல வீணையை வாங்கிக்கொண்டுவந்து உன் எதிரில் காட்சி அளித்து "இவள்தான் உன் சக்களத்தி. எனது இரண்டாம் மனைவி, என்பதாக உன்னிடம் அறிமுகப்படுத்த நினைத்திருந்தேன், அவ்விதமே இன்று செய்துவிட்டேன். பங்கஜம், என் செல்வமே, என் இதய பீடத்தில் உன் ஒருவளுக்குத்தான் ஸ்தானம் உண்டு. அதில் இன்னொருவள் வந்து ஆக்கிரமிக்க என் மனம் ஒருநாளும் சம்மதிக்காது. இது சத்தியம்! என்று ஆவேசத்துடன் புகன்று பங்கஜத்தை இறுகத்தழுவி முத்தமிட்டான் ஸ்ரீவத்ஸன்.

"கடைசியில் என்னை இவ்விதம் ஏமாற்றிவிட்டீர்களே! நான் கொண்டிருந்த உன்னத லக்ஷியம் அனியாயமாய்ச் சிதைந்து போயிற்றே!" என்று உதட்டைப்பிதுக்கினாள் பங்கஜம்.

"பங்கஜம், நான் உன்னை ஏமாற்றவில்லை! நீயாகத்தான் ஏமாந்து போனாய்! உன் அந்தராத்மாவைக் கேட்டுப்பார்! அது உனக்குச் சரியான விடையளிக்கும்!"

பங்கஜம் வெட்கித்தலை குனிந்தாள். கண்களில் நீர் தளும்ப "ஆம் நீங்கள் சொல்வது முற்றிலும் மெய்தான்! என் திடசித்தத்திலும்

தியாக புத்தியிலும் அபார நம்பிக்கை வைத்துக் கடைசியில் ஏமாந்து போனேன். உங்களிடம் என் தோல்வியை ஒப்புக்கொள்வதில் எனக்குக் கொஞ்சமும் அவமானம் இல்லை! உங்கள் தந்தியை நேற்றுப் படித்தவுடன் என் மன உறுதியெல்லாம் சிதறிப் போய் இடி விழுந்தவள்போல் ஆகிவிட்டேன். பலே பேர்வழி நீங்கள்! நல்ல நாடகம் நடித்தீர்கள்! ஆனால் எனக்கு இன்னும்கூடச் சந்தேகம் தான். உங்கள் ஜாதகரீதிப்படி உங்களுக்கு உபயகளத்திர பிராப்தம் இருக்கிறதே! ஜாதகம் பொய் சொல்லுமா? "என்றாள்.

"நம் வாழ்க்கையில் நடப்பவை எல்லாம் ஜாதகரீதிப்படிதான் நடக்கின்றனவா? ஜாதகம் கணிப்பதில் எவ்வளவோ தவறுகள் ஏற்படுகின்றன. அப்படித் தப்பாய்க் கணிக்கப்பட்ட ஜாதகத்தைப் பார்த்துக் கூறப்படும் பலன்களும் தப்பாகத்தானே இருக்கும்? எனக்கு என்றைக்குமே ஜாதகத்திலும், ஜோஸியத்திலும் நம்பிக்கை கிடையாது. நீயும் இந்த "உபய களத்திர" யோசனையைவிட்டு ஒழி. எனக்கு மனஉற்சாகமும் ஆனந்தமும் ஏற்பட வேண்டுமென்றுதானே நீ என்னை மறுவிவாகம் செய்துகொள்ளும்படி தூண்டினாய். அவை இரண்டையும் நான் இப்பொழுது வீணை வாசிக்கும் சமயத்தில் பரிபூர்ணமாய் அனுபவித்து வருகிறேன். நீயும் ஒரு சங்கீதப் பித்துத்தானே! என் வீணா கானத்தைக் கேட்டு நீயும் ரஸித்து இன்புறுவாய் என்று நம்புகிறேன். இதோபார், இப்பொழுது உன் எதிரிலேயே உன் சக்களத்தி வீணாவோடு கொஞ்சிக் குலாவப்போகிறேன். நீ ஏற்கனவே எனக்கு வாக்களித்தபடி பொறாமைப்படாமல் இருக்கவேண்டும் தெரியுமா?" என்று கண் சிமிட்டிக்கொண்டே கூறிவிட்டு அந்த அழகான மைசூர் வீணையை உறையைவிட்டு எடுத்துச் சுருதிகூட்டினான்.

ஸ்ரீ வத்ஸனுடைய விரல்களால் பிரேமையுடன் வருடிக் கொஞ்சப்பட்ட "வீணா"வின் தேகத்திலிருந்து கணீரென்று வெளிக்கிளம்பிய "ஸௌந்தரி நீதிவ்யரூப" என்ற கலியாண ராக கீர்த்தனை, பங்கஜத்தை இனிமையான நாத வெள்ளத்தில் மிதக்கச்செய்தது. அவளுடைய உள்ளத்தில் என்றுமில்லாத சாந்தி நிறைந்தது. அவளது நீண்ட நேத்திரங்களில் ஆனந்த பாஷ்பம் துளித்தது.


பாத்ருடுவின்

# பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

48 வருஷகாலமாகப் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்கியாதிபெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக்கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மைலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு,

# அழைப்பு

ரா. ஸ்ரீ. தேசிகன்

—x—

கல்கத்தாவில் கங்கைக் கரைமீது ஒரு பாங்கியின் கட்டிடம் நிமிர்ந்து நிற்கிறது. அதற்குப் பக்கத்திலுள்ள மாடிவீட்டின் அறையில் வெளியிலே காய்கின்ற நிலவின் கதிர்கள் கள்ளத்தனமாய் நுழைந்து விளையாடுகின்றன. அறையிலுள்ள மேஜைமீது ஒருகடிதம் பிரிந்து கிடக்கிறது. மின்சார விளக்கொளி அக்கடிதத்தின்மீது விழுகிறது.

ஜன்னலைத் திறந்துகொண்டு இருபத்தைந்து வயதுள்ள ஒரு வாலிபன் வெளியிலே நிலவில் விரிந்துகிடக்கிற பிரபஞ்சப் படத்தை நோக்குகின்றான். நிலாத்துயிலும் கங்கையோடு அவன் கண்களும் ஓடுகின்றன.

"எவ்வளவு அழகு! எவ்வளவு அமைதி! பகலில் சந்தடியாய்க் கிடக்கிற கோரமான இடமெல்லாம், எந்தவிதமாகவோ, இரவில்—அதிலும் ஒரு வெண்ணிலவிலே—ஒரு தனிச் சோபையை அடைந்துவிடுகின்றனவே. இந்த நிலவின் அழகை அள்ளிக்குடிக்கும்படியான எண்ணம் வருகிறது. உள்ளத்திலும் சாந்தி ஏற்பட்டிருக்கிறதே. அந்நிலவிலே கெடுதலான எண்ணம் தோன்றிற்றே. பொய்க்கையெழுத்துப் போட்டிருந்தால், ஐயோ, என்ன ஆயிருக்கும், இதோ தெரியவில்லையா? பேப்பரில் வந்திருக்கே ஒருவனுக்குத் தண்டனை இரண்டு வருஷம் கடும் காவலென்று" என்று பேப்பரை அவன் புரட்டிப் பார்க்கிறான்.

"கடுங்காவலிருக்கட்டும் — செய்திருந்தால் இது என்னோடுமட்டும் போகுமா. என் தகப்பனாரைப் பாதிக்கும், என் குடும்பத்தையும் பாதிக்கும், என் சுற்றத்தார்கள் நகைப்பார்கள். எனக்குக் கலியாணத்திற்கு ஏற்பாடு பண்ணியிருக்கமுடியுமா? இதோ என் தகப்பனார் கலியாணத்தைப்பற்றி எழுதியிருக்கிறாரே, அதுவும் எனக்குச் சம்மதமான பெண்ணைக் கலியாணம் செய்துகொள்ளும்படி ஏற்பட்டிருக்கிறதே. இந்த நிலவில் அவளைப் பற்றியும், அவள் அழகு, அவள் பாட்டு, அவள் படிப்பு—இவைகளைப்பற்றியெல்லாம் நினைக்க முடிகிறதே, ஒரு பயங்கரமான நிலையிலிருந்து யார் என்னைக் காப்பாற்றினார்?

பணத்துமீது ஆசைவைத்துப் பொய்க்கையெழுத்துப்போட மனம் துணிந்ததே! ஏதோ தெய்வ கதியாய் என் கண்முன் ஓர் உருவம் தோன்றிற்றே அது யாருடைய உருவம்?" என்று சிந்தித்துப் பார்ப்பதற்குமுன், ஒரு பழைய உபதேசம் காதில் ஒலிப்பதுபோலக் கேட்டது. பொய்சொல்லிப் பரமபதம் கிடைத்தாலும், அப்பரமபதம் வேண்டாம் உண்மைசொல்லி இருள்சேர் நரகத்தில் உழன்றாலும், அது உத்தமம், என்று அடிக்கடி உபதேசம்செய்து என்னை நல்வழிப்படுத்தின என் குருவினுடைய உருவம் அல்லவா வந்து என் கண்முன் உலாவிற்று. கனவென்று நினைக்க முடியாதபடி நேரில்வந்து சொல்லி மறைந்துபோனதுபோல் பட்டது. அவருக்குத்தான் முதலில் அழைப்புக் கடிதம் எழுத வேண்டும்" என்று நினைத்துக் கடிதமெழுதுகிறான் சந்திரசேகரன்.

மேஜையின்மீது பிரிந்துகிடந்த தகப்பனாரின் கடிதத்தைத் திரும்பப் பார்க்கிறான்.

"பெரிய வியாஜ்ஜியம் போட்டிருந்தோமே— அது நம்முடையபக்ஷம் தீர்மானம் ஆகிவிட்டது. எல்லாம் வக்கில் சடகோபாச்சாரியார்மூலந்தான் நமக்கு ஜயித்தது. அவருக்கு உன் கைப்பட கடிதம் எழுது"

இவ்விஷயத்தின்மீது வாலிபனுடைய கண் விழுகிறது. ஆமாம் வக்கிலுக்கும் எழுத வேண்டியதுதான். ஆனால் என்னைக் கபவாத சுரத்திலிருந்து காப்பாற்றின டாக்டர் அமிர்தராவை மறக்கலாமா? அவருக்கு முதலில் எழுதிவிட்டுப் பிறகு வக்கிலுக்கெழுதுகிறேன்.

அமிர்த ராவுக்குக் கடிதமெழுதுகிறான் சந்திரசேகரன். பெரிய சொத்தைச் சம்பாதித்துக்கொடுத்த வக்கிலும் என்னுடைய இன்பத்திற்குக் காரணம். இந்த வரனைக் காட்டிக் கொடுத்த ஜோஸ்யர் ராஜம் அவர்களையும் நினைக்கவேண்டாமா?

கடிதங்கள் எழுதி முடிகின்றன. இரவு பன்னிரண்டு மணி இருக்கும். அழகு, அமைதி, வரப்போகிற காதல் இன்பம், கங்கைக்குறு அலைச்சிகரங்களின் மீது ஆடி அசைந்து வருகின்ற மெல்லியகாற்று- இவைகளுக்கிடையே தாலாட்டப்பட்டு அவ்வாலிபன் தூங்கிவிடுகிறான்.

ஃ ஃ ஃ

ஞாயிற்றுக்கிழமை மத்தியானம் ஒரு மணி இருக்கும். ஆத்தூர் பள்ளிக்கூடத்து உபாத்தியாயர் சுப்பிரமணிய அய்யர் சாப்பிட்டுவிட்டுக்

கண்ணைச்சற்று அயர்கிற சமயம் தபாற்காரன் கதவை லொட், லொட் என்று தட்டுகிறான்.

'யார் அங்கே' என்று சொல்லிக்கொண்டே மீனாக்ஷி வருகிறாள்.

'தபால்'

'தபாலா? இதோ வந்துவிட்டேன்.

கதவைத்திறக்கிறாள் மீனாக்ஷி. தபாற்காரன் இரண்டு கடிதங்களைத் தருகிறான். ஒண்ணு கலியாணக்கடுதாசியாயிருக்கேஇன்னொண்ணு யாரிடமிருந்து வந்திருக்கோ. அக்கா பெண் அம்புலுவுக்குக் கலியாணம் நிச்சயமாகி விட்டதா? என்ற எண்ணங்கள் வருகின்றன.

"ஏன்னா கடிதாசிகள் வந்திருக்கே" என்று இரண்டு கடிதங்களையும் தருகிறாள்.

சுப்பிரமணிய ஐயர் கடிதங்களைப் பிரித்துப் பார்க்கிறார். "கலியாணம் யாருக்கு" என்று மீனாக்ஷி கேட்கிறாள்.

"அதுதான் வாதவநேரி மஹாலிங்க ஐயர் பிள்ளை சந்துருவுக்கு"

"நீங்கள் பாடம் சொல்லித்தந்தேளே"

'ஆமாம்'

அதுதான் விஜயபுரத்துக் கிருஷ்ணசாமி ஐயரின் பெண். நல்ல சம்பந்தம்தான், இங்கேயும் பணமிருக்கிறது, அங்கேயும் பணமிருக்கிறது. நீ கலியாணத்திற்கு வருகிறாயா?

"நான் வரணுமா? மஹாலிங்க ஐயர் ஆம்படையாள் சாரதா அம்மாமி இருந்தால் நானும் வரலாம். அவள் இருந்தால் வேண்டிய உபசாரங்கள் நடக்கும். இப்போ யார் நம்மைக் கவனிக்கப்போறா? அது இருக்கட்டும். இன்னொரு கடிதம் வந்திருக்கே அது யார் எழுதியது"

"பையனே எழுதியிருக்கிறான்"

"கட்டாயம் நீங்கள் போகவேண்டும். என்னிக்குக் கலியாணம்?

'இன்னிக்கு'

"இன்னிக்கு வரும்படி ஏன் கடிதம் போட்டான்"

"கல்கத்தாவிலிருந்து வரணுமே 'டிலே' ஆயிடுத்தோ என்னமோ."

"கல்கத்தாவில் அவன் என்ன பண்ணறான்?"

'பாங்கியில் மானேஜர் வேலை.'

'சம்பளம் என்னமோ'

'300 அல்லது 400 இருக்கும்"

நீங்கள் போங்கள் புடவை, வேஷ்டி வாங்கித்தந்தாலும் தரலாம். எங்கே முகூர்த்தம் நடக்கிறது?

'வைரவநல்லூரில் நடக்கிறது.'

'விஜயபுரத்தில் நடக்கவில்லையா?'

'வைரவநல்லூரில் சாமான்கள் அகப்படும்.'

'எங்கே நடந்தால் என்ன? முகூர்த்தமெல்லாம் ஆயிருக்குமே!'

'ஆனால் என்ன, ஊர் கிட்டத்தானேயிருக்கு. இப்பொழுது புறப்பட்டால் 4 மணி நேரத்தில் போய்விடலாமே'

"பாட்டுக்கச்சேரி எல்லாம் நடக்கிறது என்கிறாளே அதற்குப் போய்விடலாம்."

"போவதற்குச் சரியான துணியில்லையே. வண்ணான் வந்தானோ"

"நல்ல வேளை இன்னைக்குத்தான் வந்தான்."

"மேலுக்கு அங்கவஸ்திரமில்லையே."

"குழந்தை சீனு பூனப் பட்டு உள்ளேயிருக்கே, அதைப்போட்டுக்கொண்டு போகலாமே"

"குழந்தை அழுதால், பொத்திப் பொத்தி வைச்சுருக்கான்"

"நான் பார்த்துக்கொள்ளுகிறேன். நீங்கள் போங்கள்"

விசேஷ தினங்களுக்குப் போட்டுக்கொள்கிற சட்டையைக்கொண்டுவந்து தருகிறாள் மீனாக்ஷி. அங்கவஸ்திரத்தைப் போட்டுக்கொள்கிறார்.

"ஆத்திலே குழந்தைகளைப் பார்த்துக்கொள், நான் உடனே திரும்பிவிடுகிறேன்."

"ஆத்தைப்பற்றிக் கவலைப்படவேண்டாம்."

பஸ் ஏறவேண்டிய இடத்திற்கு அவர் புறப்படுகிறார். மீனாக்ஷி அம்மாள் வாயிற்படியில் நின்றுகொண்டு அகத்துக்காரர் உருவம் மறைகிற வரையில் பார்க்கிறாள்.

ஃ ஃ ஃ

வைரவநாரில் கிருஷ்ணசாமி ஐயர் வீட்டிற்கெதிரில் ஒரு விசாலமான பந்தல் போடப்பட்டிருக்கிறது. வாழை கமுகு முதலியவைகளில் வாசற்புறம் நன்றாய்அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. பந்தலில் அநேக நாற்காலிகள் போடப்பட்டிருக்கின்றன. பல தனவான்கள் அங்கே உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள். ஜரிகைத் தலைப்பாக்கள் தென்படுகின்றன. பையன் தகப்பனார் மஹாலிங்க ஐயர் தனிப்பட்ட ஆசனத்தில் வீற்றிருக்கிறார்.

ஒரு பக்கத்தில் ஸ்திரீகள் பலவித ஆபரணங்களுடன் விளங்குகிறார்கள். அநேக வைரங்கள் மின்னுகின்றன. தங்க வளைகளும், கண்ணாடி வளைகளும் குலுங்குகின்றன. பலவிதப் புடவைகள் சலசலவென அலைக்கின்றன. மலர் மணம் எங்கும் வீசுகின்றது. ஊதுவத்தியின் வாசனை எங்கும் பரவுகின்றது. சந்தனத்தின் பரிமணம் மூக்கைத் துளைக்கின்றது.

சிரிப்புக்கள் கேலிகள் முதலியன எங்கும் நடக்கின்றன. பாடகன் பந்தர் மத்தியில் உட்கார்ந்துகொண்டு சங்கீதத்தின் ரசத்தைப் பிழிந்துகொட்டுகிறான். மிருதங்கம் மனிதன் பேசுகிறதுபோலப் பேசுகிறது. பிடில் தன்னிடத்தில் உறங்கிக்கிடந்த இசைகளையெல்லாம் கொட்டிக்கொண்டேயிருக்கிறது. சிலபேர்கள் தலையை அசைக்கிறார்கள். சிலபேர்கள் தம்மையறியாமல் தாளம்போடுகிறார்கள். ஆனால் பேச்சுக்கள், சிரிப்புக்கள் நின்றபாடில்லை. இவைகளுக்கு மத்தியில்தான் இசை அருவி ஓடுகிறது.

யாராவது ஒரு பெரிய கனவான் வந்தால் பாகவதர் முகத்தில் சிரிப்பு அரும்பும், மிருதங்கக்காரர் கைகூப்புவார், பிடில்காரர் ஒரு புன்முறுவல் செய்வார்.

வெளியிலே பல கார்கள் நிற்கின்றன. ஜனங்கள்வருவதும்போவதுமாயிருக்கிறார்கள். வெற்றிலைப்பாக்கு, தேங்காய் இவைகளை ஒரு பையில் கட்டிக்கட்டி வழங்குகின்றார்கள். பூச்செண்டுகள் எங்கேபார்த்தாலும் இறைந்து கிடக்கின்றன. கிருஷ்ணசாமி ஐயர் தம் பெண்ணைப் பார்க்கிறார்; மாப்பிள்ளையைப் பார்க்கிறார். பார்க்குந்தோறும் அவர் மயிர்க்கால்தோறும் ஆனந்தம் எட்டிப்பார்க்கிறது.

மாப்பிள்ளையும் பெண்ணும் ஒரு பெரிய சாய்ந்த நாற்காலியில்உட்கார்ந்திருக்கிறார்கள். மாப்பிள்ளை சந்துரு ஏதோ பேசுகிறான். அதற்கு மணப்பெண் சரோஜா சிரிக்கிறாள். கடைக்கண் பார்வைகள் நிகழ்கின்றன.

கலியாணமாகி ஐந்து நிமிஷமாகவில்லை. அதற்குள்ளே பேச்சைப் பாத்தியாடி என்று சில பெண்கள் பேசிக்கொள்ளுகிறார்கள். பக்கத்தில் சின்னஞ்சிறு குட்டிகள் கேலி செய்கின்றன.

இந்தக் கோலாஹலத்தின் மத்தியில் உபாத்தியாயர் சுப்பிரமணியஐயர் போய்ச்சேருகிறார். பெரிய மனுஷ்யர்கள் கூட்டத்திற்குள் போவதற்குச் சங்கோசப்படுகிறார். மாப்பிள்ளைப் பையன் தன்னை நோக்குவான் என்று எதிர்பார்க்கிறார். வாசலில் வேலைக்காரன் நிற்கிறான். "யார்" வெளியிலே போ! என்று சொல்லிவிட்டால் மானம் போய்விடுமே" என்ற திகில் அவருக்கு வருகிறது.

டாக்டர் அமிர்த ராவ் வந்ததும் மாப்பிள்ளை சந்துரு எழுந்திருக்கிறான். மார்பில் மாலை அசைய டாக்டரைத் தேடிவருகிறான். மகாலிங்க ஐயர் வருகிறார்.

"இவரைத் தெரியுமா! குழந்தைசந்துருவுக்கு உயிர்ப்பிச்சை தந்தவர் டாக்டர் அமிர்த ராவ்" என்று சம்பந்திக்கு அறிமுகம் செய்விக்கிறார்.

"அப்படியா" என்று அவர் கைகளைக் குலுக்குகிறார் கிருஷ்ணசாமி ஐயர்.

ஜோஸ்யர் சற்று நேரங்கழித்து அங்கே தலையை நீட்டுகின்றார்.

"இவரைத் தெரியுமோ இல்லையோ" என்று மஹாலிங்க ஐயர் கேட்கிறார்.

"இவரைத் தெரியாதா? இவர்தான் நம்ம ராஜமாயிற்றே. 'எங்கேயும் பார்க்காதேயுங்கள். மஹாலிங்கஐயர் பிள்ளைதான்' என்று ஒரு வருஷத்துக்குமுன் சொன்னார்" என்கிறார் கிருஷ்ணசாமி ஐயர்.

ஜோஸ்யர் முகத்தில் ஒரு தனிக்களை தோன்றுகிறது.

சந்துரு ஜாதகத்தைப் பார்த்து "அமோகமாயிருக்கப்போகிறான். அவனுக்கு வியாதி வெக்கை இனி ஒன்றுமே வராது என்றார். அவர் சொன்னபடி செய்தோம், வியாதி தெளிந்தது, அவரை நேரே வைச்சுண்டு சொல்லப்படாது" என்று சிலாகித்துப் பேசுகிறார் மஹாலிங்க ஐயர்.

சுப்பிரமணிய ஐயர் எட்டி எட்டிப் பார்க்கிறார். மஹாலிங்க ஐயர் சிரிக்கிறபொழுதெல்லாம், தன்னைப் பார்த்துத்தான் சிரிக்கிறார் என்று நினைக்கிறார். பையன் சந்துருவின் கண் பார்வை சுப்பிரமணிய ஐயர்மீது விழுகிறது. விழுந்தென்ன?-பார்த்தும் பார்க்காததுபோல இருக்கிறான் அவன்.

"என்ன, என்னை மறந்துவிட்டானா? நான் முன்னாடி விசாரிக்கலாமா? சீ, நம்மைக்கேட்காதிருக்கும்பொழுது நாமா அட்சதையைப்போட்டுக்கொள்வானேன்?" வார்த்தைகள் உதடுகளில் குதிக்கின்றன. ஆனால் சொல்ல மனம் வரவில்லை.

குடும்ப வக்கில் சடகோபாச்சாரியார் வருகிறார். அவருக்குச் சந்துரு, மஹாலிங்க ஐயர் முதலியவர்கள் செய்த உபசாரங்களுக்குக் கணக்கு வழக்கில்லை. தனியே அழைத்துக் கொண்டுபோய்ச் சிற்றுண்டியெல்லாம் தந்தார்கள். மாலைபோட்டார்கள். அவர்கள் உவகையில் ஆழ்ந்தார்கள்.

சுப்பிரமணிய ஐயர் மறுபடியும் எட்டி எட்டிப் பார்க்கிறார். வெளியிலே போவதா? உள்ளே நுழைவதா? என்ற போராட்டத்தில்

அவர் மனம் தத்தளிக்கிறது. பையனிடத்திற்குத் தம் பார்வை விரைகிறது; ஆனால் அதைத் தடுக்க முயலுகிறார்.

"இங்கிருப்பதால் இனிப் பிரயோஜனமில்லை. காலாகாலத்தில் வீடுபோய்ச் சேர்வதே நலம். நம்முடைய மரியாதையை நாம் காப்பாற்றிக் கொண்டாகிவிட்டது. அவன் கவனித்தால் என்ன, கவனிக்காமல் போனால் என்ன? நான் வைத்த செடி பூத்துக்காய்க்கப்போகிறது. வைத்தவனை மறந்தாலென்ன, மறக்கட்டுமே மரம். என் ஞாபகத்தை தன் மனப்பலகையிலிருந்து அவன் அழிக்கமுடியுமா?" என்று நினைத்துக்கொண்டு வீடு திரும்பிவிட்டார்.

மணி ஒன்பது இருக்கும். குழந்தைகள் தூங்கிவிடுகின்றனர். சமையலறையை அலம்பிவிட்டு வெற்றிலைப்பாக்குப் போட்டுக்கொண்டிருக்கிறாள் மீனாக்ஷி. சுப்பிரமணிய ஐயர் கதவைத் தட்டுகிறார்.

"யார்"

"அடியே நான்தான்"

பரபரப்புடன் ஓடி வருகிறாள் மீனாக்ஷி.

"என்ன, ராத்திரியே வந்துட்டகளே ஏதாவது வெகுமானம் பண்ணினார்களா? பெண் கறுப்பா, சிகப்பா?"

"சிகப்புத்தான், மூக்கும் முழியுமா இருக்கு. ஆனால் பெரிய மனுஷயாள் வீட்டுக் கலியாணத்தில் நம்மைக் கவனிப்பார்களா?"

"வெற்றிலைப் பாக்கு, தேங்காய் கூடவா கொடுக்கவில்லை? தேங்காய் வந்தால் கூட்டுக்குப்போடலாம் என்று வாடிக்கைக்காரி பேசாமடந்தையிடம் அவரைக்காய் வாங்கியிருக்கிறேன். சாப்பிட்டகளா"

"சாப்பாடா?"

"நல்ல வேளை சாதம் மீந்திருக்கிறது. இப்பொழுதுதான் ஜலங்குத்தினேன். சுடுகூட ஆறியிருக்காது. சாப்பிட வாருங்கள். என் பெண்புத்தி, அதைப்பத்துத்தரம் செருப்பாலெ அடித்தாலும் பாதகமில்லை. உங்களைச் சிரமப் படுத்தினேனே."

"என் மரியாதையை நான் காப்பாற்றிக் கொண்டுவிட்டேன். பையன் எழுதுகிற பொழுது நல்ல எண்ணத்தோடுதான் எழுதியிருக்கிறான். எழுதினதில் பிசகில்லை. அவ்வளவு பெரிய கூட்டத்தில் என்னைத்தன் உபாத்தியாயர் என்று சொல்லிக்கொண்டால் தன் கௌரவத்துக்குக் குறைவில்லையா? அவன் கௌரவத்தைக் காப்பாற்றிக்கொண்டு விட்டான். என் கௌரவத்தை நான் காப்பாற்றிக்கொண்டு விட்டேன். என்னைச் செருப்பாலே எத்தனைதரம் அடித்துக்கொண்டாலும் போதாது."

மூக்கில் விரலை வைத்துக்கொண்டு "இப்படி நடக்குமா?" என்கிறாள் மீனாக்ஷி.

ஃ ஃ ஃ

கலியாண சந்தடிகள் ஓய்கின்றன. திருவிழா ஓய்ந்த இடம்போலக் காட்சி அளிக்கின்றது அக்கலியாணவீடு. அநேகமாய் விளக்கெல்லாம் அவிந்துவிடுகின்றன. ஆங்காங்கே சில தீபங்கள் மட்டும் தென்படுகின்றன. "பிரபலமான கலியாணம், இதைப்போலக் கலியாணம் உண்டா" என்று ஜனங்கள் சொல்லிக் கொண்டு போய்விடுகிறார்கள். சிலபேர்கள் பந்தலில் தூங்குகின்றனர். பெண்களும் சோர்வினால் விளக்கொளியில் வளைகள் மின்ன, வயிர ஓலைகள்மின்ன, பழையஞாபகங்களில் தாலாட்டப்பட்டுச் சந்திரவதனங்கள் காட்டிப் படுத்திருக்கிறார்கள். கிருஷ்ணசாமி ஐயர் "ஒரு பாரம் விட்டது, நல்ல வரன் கிடைத்ததே" என்று மகிழ்ச்சியில் படுத்துக்கொண்டிருக்கிறார்.

மகாலிங்கஐயர் "நமக்கொன்றும்குறைவில்லை. அவளிருந்து பார்க்கக்கொடுத்துவைக்கவில்லை. ஆனால் வீட்டிற்கு விளக்கேற்றி வைக்க ஒரு சுந்தரமான பெண் வந்துவிட்டாள்" என்று சந்தோஷிக்கிறார்.

சரோஜாவின் உள்ளத்தில் கடல்போல் உவகை பொங்குகின்றது. அவள் இன்ப வெள்ளத்தில் மிதக்கிறாள்.

ஆனால் ஓர் உள்ளம் வேதனை அடைகிறது.

"என்ன முட்டாள்தனம்! போலி மரியாதைக்கு ஆசைப்பட்டேனே! வைத்தியரைக் கௌரவிக்க வேண்டுந்தான், தேகத்தைக் காப்பாற்றினார். வக்கிலைக் கவனிக்கவேண்டுந்தான்; பணத்தைத் தந்தார். ஜோஸ்யரும் என்னுடைய இன்பத்திற்கு மூலந்தான், அவரையும் கவனிக்கவேண்டுந்தான். இவ்வளவு இருந்தும் பிணந்தானே ஆத்மா போனால்? என் ஆத்மாவைக் காப்பாற்றினாரே! அவரை அலக்ஷியம் செய்தேனே" என்ற எண்ணத்தில் தன்னை அறியாமல் சந்துருவுக்குக் கண்ணீர் பெருகித் தலையணையை நனைத்துவிடுகிறது.

# புத்தக விமர்சனம்

## கதைக்கோவை—தொகுதி III

மயிலாப்பூர் அல்லயன்ஸ் கம்பெனியார் பிரசுரித்தது. கிளேஸ் பதிப்பு ரூ. 7—8—0; ஆண்டிக் பதிப்பு ரூ. 9—0—0.

அல்லயன்ஸ் கம்பெனியார் பிரசுரித்துள்ள கதைக்கோவையில் இது மூன்றாவது பாகம். இதில் அறுபது எழுத்தாளர்கள் தங்கள் திறனைக் காட்டியிருக்கிறார்கள். ஸ்ரீ டி. எம். நாராயணசாமி பிள்ளை அவர்கள் ஓர் முகவுரை எழுதியுள்ளார்கள். இப்பதிப்பில் வந்துள்ள கதைகளில் அநேகம் தமிழ்ப் பத்திரிகைகளில் வெளிவந்தவை. சில கதைகள் புதியவை.

மிக்க ரசமான உணர்ச்சி உண்டுபண்ணக் கூடிய கதைகள். புத்தகாலயங்கள் இதனை வாங்கிவைக்கவேண்டியது அவசியம்.

## ஹோமியோபதி மெட்டீரியா மெடிகா

பாகம் I & II

## பன்னிரு தாதுக்கள்

[ஆசிரியர்—டாக்டர் வி. ராமமூர்த்தி-இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட், கும்பகோணம் பிரசுரித்தது.]

தமிழ் நாட்டிற்கு டாக்டர் வி. ராமமூர்த்தி அவர்கள் பெரும் தொண்டாற்றியுள்ளார். நோய்வாய்ப்பட்டு அவதிப்படும் மக்கள் நம் நாட்டில் கணக்கில் அடங்கார். பல முறைப் படி அவர்களுக்கு சிகிச்சை செய்வது ஏழ்மை குடிகொண்டுள்ள இந்நாட்டில் அவசியமாகிறது. இதற்கு ஆங்கில வயித்தியக் கல்லூரிகளில் போய்ப் பயின்றுவர அனேகருக்கு வசதியில்லை. வீட்டிலேயே இருந்துகொண்டு ஹோமியோபதி முறையை கற்றுக்கொள்ள இப்புத்தகங்கள் வசதியளிக்கின்றன. ஏழை மக்களுக்கு வயித்தியம் செய்ய இம்முறை மிகவும் சுலபமானது. நோயை ஆற்றும் சக்தியிலும் இம்முறை மேல்நாட்டு அலோபதிக் முறைக்குச் சளைத்ததன்று. கிராமங்களிலுள்ள அனேகர் இம்முறையைக் கற்றுக்கொள்ள இப் புத்தகங்கள் அத்யாவசியமானவை. டாக்டர் மூர்த்தி அவர்களை இப்பணி ஆற்றியதற்காகத் தமிழர்கள் பாராட்டவேண்டியது அவசியம்.

புத்தகங்கள் எளிய நடையில், பாமரர்கள் எளிதில் தெரிந்துகொள்ளும்படியாக எழுதப்பட்டுள்ளன. ஆகையால் எவரும் இம்முறையைக் கற்க வசதியளிக்கப்படுகிறது. தமிழ் மக்கள் இதனைப் பயன்படுத்திக்கொள்வார்கள் என நம்புகிறோம்.

## The way out—வெளியேற வழி

சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரியார் ஆங்கிலத்தில் எழுதியது. ஆக்ஸ்போர்ட் யூனிவர்ஸிடி பிரஸ்ஸாரால் பிரசுரிக்கப்பட்டது.

விலை அணா 8.

இச் சிறிய புத்தகத்தில் தற்கால அரசியல் நிலையினின்று வெளியேற வழிகாட்டியுள்ளார். தலைவர்கள் சிறைவாஸம் செய்யினும் நாம் இம் முயற்சியை எடுத்துக்கொள்ளவேண்டிய அவசியத்தை எடுத்துரைத்திருக்கிறார். யுத்தத்திற்குப் பின் அமையும் உலகம் நூதன மாறுதல்களுடன் கூடியதாகஇருக்கும். இந்தியாவும் இதற்கு இப்பொழுது முதற்கொண்டே தயார் செய்துகொள்ளவேண்டும். அதற்கு நாம் செய்யவேண்டியது என்ன என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார் ஸ்ரீ ராஜாஜி. வருங்கால அரசியல் திட்டத்தை வகுக்க, கிரிப்ஸ் அறிக்கையில் கூறியுள்ள முறையை நாம் ஒப்புக்கொண்டு ஒரு அரசியல் திட்டத்தை வகுக்க முயலவேண்டுமென்கிறார் ராஜாஜி. இதற்குத் தகுந்த காரணங்களையும் தெளிவுற எடுத்துரைத்து நாம் அரசியல் நெருக்கடியை ஒழிக்க முற்படவேண்டுமென்கிறார். யாவரும் படிக்கவேண்டிய புத்தகமிது.


GRIPE-VIT-D



★ ★

REGD.

கிரைப்-விட்-டி

குழந்தைகளுக்கு ஏற்படும் வயிற்று வலி, மாந்தம், வயிற்றில் புளிப்பு, உப்பிசம், வாந்தி, வயிற்றுப்போக்கு, விக்கல் முதலிய கோளாறுகளை உடனே நிவர்த்தியாக்கும்.

*Apply to:-*
Proprietors, S. R. Remedies,
Trichinopoly.

# உடைந்த வீணை



கே. சுந்தரம்மாள்

—x—

— 5 —

"நரேன் தாங்கள் என்னிடம் ஒரு வரம் கேட்டீர்கள். நான் தங்களை ஓர் வரம் வேண்டுகிறேன் கிடைக்குமா?" என்றாள்.

"என்ன? நீ வரம் கேட்டு இல்லை என்று சொல்ல எனக்குச் சக்தியுண்டா?" என்றான்.

"ஒருவரும் தொடக்கூடாது என்ற உங்கள் வீணையை நான் ஒருதரம்மட்டும் வாசித்துப் பார்க்க அனுமதி வேண்டும். உங்கள் குரு தேவர் வாக்கின்படி, நான் உங்களுக்குத் தகுந்தவள் என்று நிச்சயித்துவிட்டீர்கள். மத்யானம், வித்தையின் கரையை நான் கண்டு பிடித்துவிட்டதாகச் சொன்னீர்கள்" என்று புன்சிரிப்புடன் சொன்னாள்.

அவளின் மோஹனப்பார்வை, புன்னகை, இரண்டும், இவனை நிலைகலங்கச் செய்தன. அவளைப் பரிசிக்கக் கைகள் துடித்தன. மனம் மதுவுண்ட வண்டின் நிலைமையை அடைந்தது. கஷ்டப்பட்டு மனதை அடக்கிக் கொண்டு, "ஆஹா அதில் ஆக்ஷேபணையுண்டா. நானே கொண்டுவந்து கொடுக்கிறேன்" என்று அவளைப் பார்த்தவண்ணம் எழுந்திருந் தான். அவர்கள் வாய்ப்பேச்சைவிட கண் களே அதிகம் விஷயங்கள் பேசின. அவன் வாசற்படியருகில் செல்லும்வரை அவனையே பார்த்துக்கொண்டு நின்றாள். படியருகில் சென்றதும், திரும்பினாள், 'பச்சை வர்ணம் வேண்டாமா?' என்றாள்.

"வர்ணத்திற்கு உடையவளே கிடைத்த பின்பு வர்ணம் எதற்கு?" என்று சொல்லிக் கொண்டே போய்விட்டான்.

சற்று நேரத்திற்கெல்லாம் வீணையுடன் மாலதியின் அறைக்கு வந்தான். அவன் கையி லிருந்த வீணையை வாங்கிக்கொண்டாள்.

"வாசிக்கிறாயா?" என்றான்.

"உம், உட்காருங்கள்" என்றாள்.

"வேண்டாம். இரவு அப்பா முன்னாக மாற்றிவைத்து வாசிப்போம். சப்ஜட்ஜ் ஆள் அனுப்பியிருக்கிறார். போகவேண்டும்" என்றான்.

"என்ன விசேஷம்? நான் அறியத் திருவுள்ள மோ?" என்றாள்.

"ஓ! இனிமேல் இருவருக்கும் புறம்பாக உள்ள ரகசியம் எது? ஓர் அனாதை ஆச்ரமம் பழுதுபார்க்க, ஓர் பாட்டுக்கச்சேரிக்கு என்னை வரும்படி சொன்னார். எனது பிரயாண நினை வினால், இன்றைக்குத் தகவல் சொல்லுவதா கச் சொல்லியிருந்தேன். ஒப்புக்கொள்ளட் டுமா?" என்றான்.

"இந்தமாதிரி விஷயங்களுக்கு மறுப்பு ஏற் படுமா?" என்றாள்.

"சென்று வரட்டுமா?" என்று கேட்டுக் கொண்டே சிவந்து குழிந்த அவள் கன்னத்தை லேசாகத் தட்டினான்.

"பார்த்தீர்களா? இதுதானே கூடாது. கை நீளக்கூடாது என்று கேட்டுக்கொண்டேனே" என்று அன்பாகக் கடிந்துகொண்டாள்.

"இல்லை. இல்லை. மன்னித்துவிடு. இனிமேல் தவறமாட்டேன். மனதைக் கட்டுப்படுத்தி விடுகிறேன்" என்றான்.

அவன் சென்றபிறகு வீணையை எடுத்து மடியில் வைத்துக்கொண்டு உட்கார்ந்தாள். யாருக்கும் ஒரு பொருளானது, கைக்கெட்டாத நிலைமையில் அப்பொருளின்மேல் அபாரமான மோஹம் உண்டாவது இயற்கையின் விநோதமாகிறது. இது விஷயம் ஒவ்வொருவர் அனுபவத்திலும் கண்கூடாகக் காணலாம். மாலதிக்கும் அவ்வீணையில் வாசிக்கவேண்டுமென்பது வெகுநாளைய விருப்பம். வந்த உடனேயே, தனது வீணையை ஒருவரும் வாசிக்கக்கூடாது என்றவிஷயத்தைக்கேட்டுக்கொண்டிருந்தாள். இதுவரை கேட்கவே அச்சமாக இருந்தது. இன்று அது அவள் கைக்குக் கிடைத்ததும் அவளுக்கு உண்டான ஆனந்தத்தால் அளவுக்கு மீறிய உணர்ச்சியேற்பட்டது. வீணையுடன் முகத்தைச் சேர்த்து வைத்துக்கொண்டாள். "எனது அன்பன் வீணையில் வாசிக்கும் பாக்யம் பெற்றேன்" என்று வாய்விட்டுச் சொல்லிக் கொண்டாள்.

இவள் வீணையை வாசித்துக்கொண்டிருக்கும் பொழுது அவள் தாயும் தந்தையும் அவ்விடம் வந்தார்கள்.

"மாலதீ! இது நரேனுடைய வீணையல்லவோ. நீ ஏன் அதை எடுத்தாய்? ஒருவரும் தொடக்கூடாது என்று சொல்லியிருக்கிறானல்லவா? ஏதாவது வருத்தப்படப் போகிறான். கொண்டுபோய் வைத்துவிடு" என்றாள் தாயார்.

"நானாக எடுத்துவரவில்லையம்மா. நான் அவரைப்போல் வாசிக்கும் திறமைபெற்று விட்டேனென்று மத்யானமே சொன்னார். அதனால் இதை வாசிக்கும் பாக்யம் கிடைத்தது. அவரேதான் இவ்விடம் கொண்டுவந்து கொடுத்துவிட்டுச் சென்றார்" என்றாள் குதூகலத்துடன் கொஞ்சுதலாக.

சற்றுநேரம் இருவரும் அவள் வாசிப்பதைக் கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள்.

"அவன் வீணையின் நாதம் அதி அற்புதமாகவேதான் இருக்கிறது. நானும் எவ்வளவோ வீணைகளைப் பரீக்ஷித்திருக்கிறேன். நமது மாலதியின் வீணை எல்லாவற்றிலும் உயர்ந்த ரகம் என்று நானூறு ரூபாய் கொடுத்து வாங்கினோம். அப்பொழுதெல்லாம் அதன் நாதம் யாவரும் வியக்கும்படி இருந்தது. நரேன் வீணை வந்த பின்பு இது ஒருமாதிரியாகவே தோன்றுகிறது. அவன் பிறர் தொடக்கூடாது என்று சொல்வதில் வியப்பில்லை. மாலதிக்கு அவனே கொடுத்திருப்பதால் மாலதி இனிமேல் வித்வாம்ஸினிதான்" என்று சிரித்தார் தந்தை.

"மாலதி! இப்பொழுது வாசித்தது போதும். இரவு வாசிக்கலாம். ஒரு அழகிய கிருஷ்ண படம் கொண்டுவந்திருக்கிறான். உனக்குப் பிடித்தமாக இருந்தால் வாங்குவோம். உனக்கு எழுத உபயோகமாக இருக்குமென்று நினைக்கிறேன். வா! பார்க்கலாம்" என்றாள் தாயார்.

"இதோ வருகிறேன்" என்று வீணையைக் கீழேவைத்தாள். அவர்கள் முன்னதாகச் சென்றார்கள். மாலதி வீணையை எடுத்துப் பக்கத்திலுள்ள ஸ்பிரிங் கட்டிலின்மீதுள்ள மெத்தையின்மீது சாவதானமாக வைத்துவிட்டு, அதன் மேல்மூடுவதற்காகப்பட்டுத்துணியை எடுக்கத் திரும்பினாள். மத்யானம் உட்கார்ந்தபொழுது அமுங்கினின்ற ஸ்பிரிங், அமுங்கினபடியே இருந்திருக்கிறது. இவள் வீணையை வைத்ததும், காலமானது அதைத் தளர்த்திவிட்டுவிட்டது. அது எழுந்த வேகத்தில் வீணை உருண்டு கீழே விழுந்துவிட்டது. சத்தத்தைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். வீணையின் குடம் ஒரு பக்கம் கீறுண்டு பிளந்துவிட்டது. அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டாள். கண்களில் கண்ணீர் நிறைந்தது. ஒன்றுமே தோன்றவில்லை. அந்த இடமே சுற்றுவதுபோன்ற உணர்ச்சி ஒன்றுதான் தெரிந்தது. அறையைத் தாண்டிப் பத்தடி சென்றவர்கள் வீணை விழுந்த சப்தத்தைக்கேட்டுத் திரும்பிவந்தார்கள். வீணையின் நிலைமையையும் மாலதியின் தோற்றத்தையும் கண்டு திடுக்கிட்டார்கள்.

"மாலதி! என்ன காரியம் செய்தாய்? அவன் முகத்தில் எப்படி விழிக்கிறது? எவ்வளவு அஜாக்கிரதை" என்றார் கடுமையாகத் தகப்பனார்.

மாலதி பதிலே பேசவில்லை. அவள் தொண்டை அடைத்துவிட்டது.

"ஏன் அவளைக் கோபித்துக்கொள்ளுகிறீர்கள். வேணுமென்றா செய்தாள். தவறுதல் யாவருக்கும் ஸகஜம். ரிப்பேர் செய்துவிட்டால் போகிறது. அப்படி முடியாவிட்டால், எவ்வளவு ரூபாயானாலும் வேறு வீணை வாங்கிக் கொடுத்துவிட்டால் போகிறது. மாலதீ வருத்தப்படாதே" என்று அன்புடன் அணைத்து அவள் கண்ணீரைத் துடைத்தாள் அன்னை.

தந்தையின் கோபமோ, தாயின் சமாதானமோ, தேற்றும் மொழிகளோ, மாலதிக்கு யாதொரு ஆறுதலையும் கொடுக்கவில்லை. சுருதி கலைந்த வீணையின் தந்தி எவ்விதம் தாறுமாறாகக் கிடந்ததோ, அவ்விதம் அவள்மனதில் பலவித எண்ணங்கள் வந்து கலைந்தன. "நான் நரேந்திரனைக் காதலிப்பது தெய்வ சம்மதமில்லைபோலும்; இல்லையேல் இவ்வீணை உடைவானேன். தெய்வமே, இச்சோதனைக்கு என்ன செய்வேன்" என்றவிதமாக எண்ணமிடலானாள்.

"பணத்தைப்பற்றி அக்கரையில்லை. அவன் மனம் சமாதானமடையவேண்டுமே. இது என்ன விபரீதத்திற்கோ! சரி. போனது போகட்டும். அவன் சாப்பிடும்மட்டும் இதைப் பற்றின பிரஸ்தாபம் வேண்டாம். வா! போகலாம்" என்றார்.

அவள் தனிமையை விரும்பினாள். ஆனால் அவர்கள் அவளைத் தனியேவிட விரும்பவில்லை. "தனிமை அவளுக்கு ஆறுதல் அளிக்கமுடியும்" என்ற உண்மையை அவர்கள் உணரமுடியவில்லை. அவர்களுக்கு மறுத்துச்சொல்லத் தைரியம் இல்லை. மறுபடியும் வீணையைக் கட்டிலின்மீதே வைத்துவிட்டு அவர்கள் பின் சென்றாள்.

படத்தைப் பார்த்தபொழுது அவளுக்கு அது யம சொரூபமாகத் தோன்றியது. அதனால் தானே தனது வாசிப்புப் பாதியில் நின்று வீணை உடைய ஹேதுவாயிற்று என்ற எண்ணத்தினால் படம் அதன் சொந்தக்காரனிடம் சேர்ந்துவிட்டது.

இரவு யாவரும் வழக்கம்போல் சாப்பிட உட்கார்ந்தார்கள். நரேந்திரன் உள்ளம் அன்று ஆனந்தத்தினால் நிரப்பப்பட்டிருந்தது. அவன் குதூகலத்துடன் ஏதேதோ விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தான். ராகவய்யா இவன் குதூகலத்திற்கு முற்றுப்புள்ளி சற்று நேரத்தில் வைக்கப்படுகிறதே என்று எண்ணிவருந்தினாலும், வெளிக்காட்டாமல், ஏதோ அவனுக்குப் பதில் சொல்லிவந்தார். எதிர்ப்பக்கமாக உட்கார்ந்திருந்த மாலதியின் நிலைமை பரிதாபகரமாக இருந்தது. அவளுக்குச் சாப்பாடே செல்லவில்லை. "மத்யான சம்பவத்தினால் அவர் உள்ளம் இன்பமயமாக இருக்கிறது. இதுவரை எவ்வளவு சந்தோஷமாக இருந்தாலும் கண்களில் மட்டும் சோகபாவமே நிறைந்திருக்கும். இன்று அவரது கண்கள்! ஆஹா என்ன இன்பம்! ஈசா! என்னால் யாவருக்கும் துன்பம் தானா? பாவி என் செய்கையினால் அவர் என்ன நிலைமையை அடையப்போகிறாரோ?" என்ற சிந்தனையில் அவன் கேள்விகளுக்கு ஒருவிதமாகப் பதிலளித்துவந்தாள். இவளது தடுமாற்றத்தைக் கவனித்த தந்தை எச்சரிக்கையாக இருக்கும்படி கண்களினால் ஜாடை காட்டிக் கொண்டுவந்தார். கடைசியில் மாலதியின் மாறுதலை நரேன் கவனித்துவிட்டான். "மாலதி ஏன் ஒருவாறாக இருக்கின்றாய்?" என்றான்.

"ஒன்றுமில்லை லேசாகத் தலைவலி" என்றாள்.

பிறகு சாப்பாடு முடிந்ததும் மாலதி தன் அறைக்குச்சென்று வீணையைப்பார்த்த வண்ணம் நின்றுகொண்டிருந்தாள். மாதவன், ராமு, நரேன் மூவரும், அவள் தேக நிலையை விசாரிப்பதற்காக அவளிருக்குமிடம் வந்தார்கள். அவர்களைக் கண்டதும் அவளின் துக்கம் கரைபுரண்டுவிட்டது. தலைப்பினால் முகத்தை மூடிக்கொண்டாள், விம்மல் சத்தத்தைக்கேட்ட மூவரும் ஏககாலத்தில் "என்ன மாலதி! ஏன் அழுகிறாய்?" என்றார்கள்.

"நரேன், மன்னிக்கமுடியாத குற்றம் செய்துவிட்டேன். நீங்கள் அளிக்கும் தண்டனையை ஏற்றுக்கொள்ளுகிறேன்." என்று விம்மலுடன் கூறிக்கொண்டே. அவன் காலின் கீழ் நமஸ்கரித்தாள்.

பதட்டத்துடன் ஒன்றும் புரியாமல் 'மன்னிப்பு என்றால் என்ன அர்த்தம்?' என்றான்.

சட்டென ஓர் உணர்ச்சியினால் தூண்டப்பட்டவளாக எழுந்து வீணை மீது போர்த்தியிருக்கும், பட்டுத்துணியைத் தயக்கத்துடன் அவனைப்பார்த்துக்கொண்டே எடுத்தாள். அவ்வளவே. "ஆ......" என்று அவன் வாயிலிருந்து வந்த சொல்லானது மற்றவர்களுடைய ஹ்ருதயத்தைப் பிளந்து ஊடுருவிச்செல்லும் அம்புபோலிருந்தது. சட்டெனத் தாவிக் கட்டிலின்மீது உட்கார்ந்து வீணையை எடுத்து மடிமீது வைத்துக்கொண்டான். கண்களிலிருந்து ஜலம் அருவிபோல் வீணையின் மீது விழுந்து கொண்டேயிருந்தது. எப்படி வீணையின் தந்திகள் சுருதியிழந்து சீர்குலைந்து தாறுமாறாகக் கிடந்தனவோ, அப்படியே அவன் ஹ்ருதயம் வெடித்துவிடும் போலிருந்தது. அவ்வறையும் அதிலுள்ளவர்களும் ஒரே சுற்றாகச்சுற்றி உருவமில்லாமல் காட்சியளித்தார்கள். அவன் பார்வை வீணையைவிட்டு அப்புறம் செல்லவில்லை.

அநேக நாள் தவங்கிடந்து பெற்ற குழந்தையானது அநியாய மரணமாக, வயிற்றைக்கிழி, குடல் வெளிவந்து இறந்த சவத்தை, மடிமீது வைத்திருக்கும் ஒரு தாயினுடைய உள்ளமும் தோற்றமும் எவ்விதமிருக்குமோ, அவ்விதமிருந்தது நரேனது அந்த நிலைமை. ராகவய்யா முதலியவர்கள் அவ்விடம்வந்தார்கள். யாவரும் சித்திரத்திலெழுதிய பதுமைபோல் நின்றார்களே தவிர, அவர்களுக்குப் பேசவோ, அவனுக்குச் சமாதானம் சொல்லவோ தைரியம் உண்டாகவில்லை. நரேனின் மனதில் குருவின் அந்திய காலத்துத் தோற்றமும் அவரது வார்த்தைகளும் படக்காக்ஷிபோல் தோன்றின. "அப்பா! நான் காமத்தின் வசமாகவில்லையே. உண்மை அன்பில்தானே பிணைக்கப்பட்டேன். இம்மூன்று வருஷகாலம், நான் எவ்வளவு உறுதியுடன் கழித்தேன், எனக்குச் சமதையுள்ளவளிடம்தானே வீணையைக் கொடுத்தேன்" என்றுதனக்குள் சொல்லிக்கொண்டான். அந்த நிலைமையில், "மாலதி! என் ஜீவனை வதைத்துவிட்டாயே. இது அன்பின் பரிசா! இதைவிட என் கழுத்தை நெறித்துக் கொன்றிருந்தாயானால்" என்று சொல்ல நினைத்து அவளை நிமிர்ந்து நோக்கினான். கண்ணீர் நிறைந்த கண்களுடன், அவனையே பரிதாபகரமாகப்

பார்த்துக்கொண்டு நிற்கும் அந் நங்கையின் தோற்றம், மனதை மயக்கி வாயிலிருந்து வார்த்தை வெளிவராமல் செய்து விட்டது. குனிந்து வீணையை நோக்கும்பொழுது அதன் அலங்கோலத்தோற்றம், அவன் ஹ்ருதயத்திற்கு இன்னதெனச்சொல்லமுடியாதவேதனையைக் கொடுத்தது. "இதை இக்கோலத்திற்கு உள்ளாக்கியவளை" என்றுகோபம்பொங்க நிமிரும்பொழுது தனது ஜீவிய தனமான, யுவதியின் பரிதாபகரமான தோற்றம், கோபத்தை மாற்றிச் சஞ்சலத்தையும் சோகத்தையும் உண்டாக்கிற்று. மாறிமாறிப்பார்ப்பதும், சஞ்சலத்திற்குள்ளாவதுமான நிலைமையில் தத்தளிக்கும் பொழுது, சற்றே தைரியத்தை வரவழைத்துக் கொண்டு ராகவய்யா—

"நரேன்! வருத்தப்படாதே! எவ்வளவு ரூபாய் செலவழிந்தாலும் பரவாயில்லை; ரிப்பேர் செய்துவிடலாம். இல்லையேல், வேறு வீணை வாங்கலாம்" என்றார்.

"இது ரிப்பேர் செய்யும் நிலைமையிலில்லையே. நான் வேறு வீணையில் வாசிப்பதா? இதைப் புறக்கணிப்பதா? எனது குருவின் ஆணை அசத்தியமா?" என்று உணர்ச்சியில்லாமல், ஈனஸ்வரத்தால் சொன்னான். பின்பு, நிமிர்ந்து அவளைப்பார்த்து, "மாலதி!" என்றான்; அதில் இருவர் மனமும் என்ன அர்த்தத்தைக்கொண்டதோ அப்படியே கட்டிலில் வீணையின்மீது குப்புற விழுந்துவிட்டான். சட்டென மாதவன் அவனைத் தூக்கியபொழுது மூர்ச்சையடைந்தவனாய்க் காணப்பட்டான்.

6

வீணையை அப்புறப்படுத்திவிட்டு, டாக்டரைக்கூப்பிட்டுப்பார்த்தார்கள். அவர் "மன அதிர்ச்சியினால் ஏற்பட்ட மூர்ச்சை" என்று சொல்லி மருந்துகொடுத்தார். இரவு முழுவதும் கண்விழித்துச் சிகிச்சை செய்தார்கள். அவனுக்குஉணர்வு வரவுமில்லை, கண்ணைவிழிக்கவுமில்லை. "விடிந்தால் உணர்வு ஏற்படும்" என்று டாக்டர் சொல்லியிருந்தார். விடிந்தது. ஆனால் நரேனுக்கு உணர்வே இல்லை. ஜ்வரம் நெருப்பாய்க் காய்ந்தது. நாள் முழுதும் இப்படியேயிருந்தது. கவலையுடன் கைதேர்ந்த டாக்டர் ஒருவரை அழைத்துவந்து காட்டினார்கள். அவர், "அந்த வீணையை ரிப்பேர் செய்து, அவன் பக்கத்தில் வாசித்தால், அதன் நாதத்தால் ஒரு சமயம் அவனுக்கு உணர்வு வரலாம். அதைத்தவிர வேறுவழியில்லை. நிலைமை மோசமாகத்தான் இருக்கிறது" என்றார்.

"என்ன அதிசயம்? ஒரு அற்ப வீணையின் மீது இவ்வளவு ப்ரேமையா?" என்றார் ராகவய்யா.

"ஒருவருக்கு அற்பமாகத்தோன்றும் பொருள் இன்னொருவருக்கு அதிக மதிப்புள்ளதாகத் தோன்றலாம். பற்றுதல் என்பது இன்னபொருளிடத்தில்தான் இருக்கவேண்டும் என்னும் நியதியுண்டா? உமக்கு இந்த வீணை போனாலென்ன? என்று நினைப்பிருக்கலாம். அவனுக்கு அதே ஜீவதனமாகத் தோன்றலாம். நீங்கள் முதலில் அதை ரிப்பேர்செய்ய ஏற்பாடு செய்யுங்கள். நானும் மருந்து கொடுக்கிறேன்" என்று சொல்லிப்போனார்.

வீணை ரிப்பேருக்கென்று அநேகர் வந்து போனார்கள். யாவரும் "இதை ஒன்றுகூட்டுவது முடியாது" என்று சொல்லிப்போனார்கள். இது விஷயத்தில் பணம் செலவழிக்க அஞ்சவில்லை. இரண்டுநாள் சென்றுவிட்டன. நரேன் நிலைமை மாறவில்லை. இப்பொழுது வாய் பிதற்றவும் தொடங்கினான். சாயங்காலம் நரேன் பக்கத்தில் மாதவனும் மாலதியும் உட்கார்ந்திருந்தார்கள். நரேனது ஆபத்தான நிலைமைக்கு மாலதியே காரணமாதலால், அதற்குப் பிராயச்சித்தமாக அவளே அவனைக் கவனிக்கவேண்டுமென்பது ராகவய்யாவின் உத்தரவு. அதனால் சாப்பிடும் நேரம் தவிர பாக்கிப்பொழுது நரேன் பக்கத்தில் கண்ணீருடன் கழித்து வந்தாள். அயோமயமாகப் படுத்திருக்கும் நரேனைப் பார்க்கும்பொழுது அவள் மனதில் பலவித சிந்தனை வெள்ளம் பெருகிற்று. அவர்களின் ரகசியத்தை யாரிடம் சொல்லமுடியும்? "உலகில் உண்மை அன்பு என்பது பொய்யா? இல்லையென்றால், ஏன் எனது நிலைமை இவ்வாறாயிற்று? உலகில் தெய்வமில்லையா? சத்யமில்லையா? பாவியாகிய என்மேல் அன்பு செலுத்தினதன் பலன் இவர் நிலைமை இவ்வாறாயிற்று. ஈசனே நான் மனமறிய ஒருவருக்கும் தீங்கு நினைத்ததில்லையே. உமக்கு இரக்கமில்லையா? நான் இச்ஜன்மத்தில் ஒருவரைத்தானே காதலித்தேன். அதுவும் குற்றமா? தெய்வமே என்போன்றவர்களுக்கு விமோசனமே கிடையாதா? ஈசா, நான் அவரை நேசித்தது குற்றமானால் மன்னித்துவிடும். இனி மறக்கப் பிரயத்தனப்படுகிறேன். அவர் நல்ல நிலைமையில் எழுந்திருக்கும்படி திருவருள் புரியும். இப்பரந்த உலகில் இவ்வீணையை ரிப்பேர்செய்யும் ஆள் இல்லையா? சர்வேசா, எனது காதல் புனிதமானால், இவ்வீணை ஒன்றுகூட ஒரு ஆள் கிடைக்கவேண்டும்" என்று எண்ணமிட்டவாறு உட்கார்ந்திருந்தாள். உடைந்த வீணையையும் உடைந்தஉள்ளத்தையுடைய நரேனையும்பார்க்கும்பொழுது அவள் வேதனை சகிப்புத்தன்மையை இழக்கச்செய்தது.

அவள் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்தது போல் அந்தச் சமயம் ஒரு வயோதிகருடன் ராகவய்யா அவ்விடம் வந்து வீணையைக் காட்டினார். அதைச்சற்றே கவனித்தபின் "ஒன்றுகூடுவது கஷ்டம்தான். அந்த இளைஞனை வேண்டி ப்ரயத்தனப்படுகின்றேன்" என்றார். வயோதிகரும் வீணையுடன் சென்றுவிட்டார்.

ராகவய்யாவும் அவரைப் பின்பற்றிச்சென்று விட்டார். மாதவன் நரேன் பக்கத்தில் படுக்கையில் உட்கார்ந்து, குனிந்து அவன் முகத்தில் துளிக்கும் வேர்வையைத் துடைத்தான். நரேன் கண்ணை விழித்தான். "நரேன் உனக்கு என்ன வேண்டும்" என்று கேட்டான் மாதவன். "மாலதி வேண்டும், வீணைவேண்டும். மாலதி நீ என் ஜீவிய தனம். வீணை என் குலதனம். இருவரையும் நான் விடமுடியுமா? அதன் மீதில் அதிக அன்பு வைத்தேனென்று உடைத்தாய்? என் அன்பு மாலதி மூன்று வருஷமாக, ஸ்புடம்போட்டுப் பரீக்ஷித்த சுத்தமான அபரஞ்சித அன்பு. அப்பா, உமது வாக்கின்படி எனக்குச் சகல அம்சங்களிலும் பொருந்தியவளிடம்தானே வீணையைக் கொடுத்தேன். ஏன் உடைந்தது? ஐயோ! குடலைக் கிழிந்ததுபோலிருக்கிறது! போச்சு, என் ஜீவியம் போய்விட்டது, அடியுடன் அழிந்தேன். அப்பா, மாலதி" என்று இன்னும் ஏதேதோ சம்பந்தம் இல்லாதவாறு பிதற்றினான். மாதவனைத் தெரிந்துகொள்ளவில்லை. ஆயாசத்தினால் கண்களை மூடிக்கொண்டான்.

இவனது பிதற்றலினால் மாதவனுக்கு விஷயம் ஒருவாறு விளங்கிற்று. ஸகோதரியின் பக்கம் திரும்பினான். கண்களில் நீர் சோரக் குனிந்தவாறு உட்கார்ந்திருந்தாள். "மாலதி!" என்றான். நிமிர்ந்து நோக்கினாள். அவளது பரிதாபகரமான பார்வையானது "அண்ணா! என்னை மன்னிக்கமாட்டாயா?" என்று கெஞ்சுவதுபோலிருந்தது.

எழுந்து மாலதியின் பக்கத்திலுள்ள நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, "மாலா! வருத்தப்படாதே, என்னிடம் உன் மனதை வெளியிடு. நான் ஒருவருக்கும் தெரிவிக்கவில்லை. உன்னிடத்தில் நான் வைத்திருக்கும் பாசம் உன் மனமறியும். நான் என்ன முயன்றும் உன் விதிக்குறைவை மாற்ற முடியாமல் போய்விட்டது. உன் சந்தோஷத்திற்கு எவ்வித தியாகமும் செய்யப் பின் வாங்கமாட்டேன். இந்தச்சமயம் எதுவும்செய்யச் சித்தமாகஇருக்கிறேன். நரேனின் இந்த நிலைமைக்கு வீணை உடைந்தது மாத்திரம் காரணமன்று. உங்களுக்குள் ஏதோ ஒருவிதமான...........என்று முடிக்கு முன்னதாக

"அண்ணா! வேண்டாம் என்னை ஒன்றும் கேட்காதே" என்றாள். "மாலதி இது சரியல்ல. இவனது இந்த நிலைமைக்கு எப்படிப் பார்த்தாலும் காரணம் நீ தான். அவன் நம்மை அண்டினான். நல்ல நிலைமையில் வெளிச்செல்ல வேண்டும். இது நமது கடமை. நீ அவனிடம் கொண்டது உண்மையான அன்பென்பது நிச்சயமானால், அவன் நல்ல நிலைமையில் எழுந்திருக்கவேண்டுமானால், நீ என்னிடம் நடந்தவற்றை உண்மையாகச் சொல்லவேண்டும். நான் இப்படிக் கேட்பது உனக்கு அசம்பாவிதமாகத் தோன்றலாம். ஆனால் காலமும் விதியும் அப்படி நேர்ந்திருக்கிறதே" என்று அன்பு கனிந்த குரலுடன் கேட்டான்.

பிறகு விஷயங்களை மறை பொருள்பட ஒருவிதமாகச் சொல்லிமுடித்தாள்.

"மாலதி நான் நினைத்தபடியே முடிந்தது. கவலைப்படாதே. அவன் நல்ல நிலைமையில் வந்ததும், இதற்கு நான் ஒரு ஏற்பாடு செய்துவிடுகிறேன்" என்றான்.

"ஐயோ, வேண்டாம்அண்ணா! அப்பா அம்மா மனம் நோகச்செய்யவேண்டாம். என் காலம் இப்படியே கழியட்டும். அவர் உடம்பு குணமானதும் அவர் இஷ்டப்படிச்செய்ய விட்டுவிடுங்கள். என்னால் நமது குடும்பம் உலகத்தின் முன் தலைகுனிய நான் சம்மதிக்கமாட்டேன்" என்றாள்.

"சரி இருக்கட்டும். எல்லாம்பிறகு பார்த்துக் கொள்ளுவோம். அவன் உணர்வு வருமட்டும் நீயும் நானுமே அவன் பக்கத்தில் இருக்க வேண்டும். இதன் அர்த்தம் உனக்குத் தெரியாமலிருக்க முடியாது" என்றான்.

"உன் இஷ்டப்படியே நடக்கிறேன் அண்ணா" என்றாள்.

"நான் சற்று வெளியில் சென்றுவருகிறேன். நிமிஷக் கணக்கில் வந்துவிடுகிறேன். அதுவரை இவ்விடமே இரு. ஒரு விஷயம். அவன் ஏதாவது தெரிந்தோ, உணர்வில்லாமலோ கேட்பதற்கு அனுகூலமாகவே பதில் சொல்லு. உடைந்த உள்ளம். சிதறவிட்டு விடாதே. மாலதி! விசனத்தினால் என்ன பலன்? கடமை. காலத்தின் போக்கை மாற்றியமைக்கும் சக்தி நம்மிடத்தில் இல்லை. இயற்கை நம்மை வெற்றிகொண்டு விடுகிறது. நாம் இயற்கையை வெற்றிகொள்வதுமட்டும் நினைக்கவும் முடியாது. மாலதி! நான் சொல்லியபடி செய்" என்றுசொல்லிவிட்டுச் சென்றான்.

ஸஹோதரன் சென்ற பின்பு அவனுடைய அன்பான மொழிகளை எண்ணிச் சற்று ஆறுதல் அடைந்தாள். இருந்தாலும் தான் இருக்கும் நிலைமையும், தனது மனமும் எவ்விதம் பொருந்தும். இழந்த வாழ்வை மீட்கமுடியுமா? இது அநுசிதம் என்பதினால்தான் இவ்வீணைச் சம்பவம் நிகழ்ந்தது. நாம் அடியுடன் இவ்வெண்ணத்தை வேரறுக்கவேண்டும். நமது அன்பு புதைக்கப்படவேண்டும். நரேனிடம் மிக்க ஜாக்கிரதையாக நடக்கவேண்டும். அவருக்கும் தன் மீதில் வெறுப்பே ஏற்பட்டிருக்கும். அதனால் இனிமேலாவது அவரது வாழ்வு சுகமடையட்டும். ஆனால் ஸர்வேச்வரா, எனக்கு உறுதியைக்கொடும்" என்று எண்ணமிட்டவளாய் அவனையே பார்த்தவண்ணம் உட்கார்ந்திருந்தாள்.

நரேன் புரண்டு படுத்தான். அந்தச் சமயம் கண்ணை விழித்தான். இவளையே வெறிக்க இமைகொட்டாமல் பார்த்தான். மாலதி

[illegible] அவன் படுக்கையில் கையை ஊன்றி அவன் முகத்தருகில் குனிந்துநின்று, "நரேன்! என்னவேண்டும்?" என்றாள்.

பதில் பேசாமல் அவளையே பார்த்தான். சற்றுநேரம் இருவர் கண்களும் ஒரே நிலையில் நின்றன. அவன் முகத்தில் சற்றே தெளிவு தென்பட்டது. சட்டென உணர்ச்சி ததும்ப "மாலதி!" என்றான்.

"நரேன்!" என்றாள். பிறகு வாயிரண்டும் பேச மறுத்துவிட்டன. மாலதியின் கண்ணீர்மாலையிலிருந்து ஒரு முத்து அவன் நெற்றியில் உருண்டது. அந்த நிலைமையில் சற்றுமுன் எழுந்த எதிர்ப்புத் திட்டங்கள், வீணை யாவும் மறைந்தன. அன்பின் நெகிழ்ச்சிதான் மிகுந்தது. அவன் உதடுகள் ஏதோ சொல்லுவனபோல அசைந்தன. அவ்வளவே, தான் இன்னது செய்கிறாள், என்பதை உணராதவளாய், அவன் நெற்றியில் ஓர் முத்தமீந்தாள்.

அவ்வளவே, மின்சாரம் தாக்குண்டவள் போல் அதிர்ச்சி மனதில் உண்டாயிற்று. நிமிர்ந்தாள். அவன் முகத்தில் அமைதியான புன்னகை நிரம்பிற்று. கண்ணை மூடிக்கொண்டான். சலிப்புடன் நாற்காலியில் அமர்ந்தாள். "சே, என்ன முட்டாள்தனமான செய்கை. அவருடைய அன்பு நெகிழ்ந்த பார்வையில் என் உறுதி ஆடிக்காற்றில் பஞ்சுபோலாயிற்றே. அவர் என்னை வெறுக்கவில்லை. ஈசா, இதென்ன சோதனை" என்று ஒரு நீண்ட மூச்சு விட்டாள். பிறகு "ஆகாசவாணி, பூமிதேவி, நீங்களும் என்னைப்போல் பெண் உள்ளம் படைத்தவர்களே. அதனால் எனது நிலைமையின் சங்கடத்தை உணர்வீர்கள். நீங்கள் சாக்ஷியாக ஒரு உறுதி ஏற்படுத்திக்கொள்ளுகிறேன். உடைந்த வீணை ஒன்று கூடிவிட்டால் எங்கள் உடைந்த உள்ளமும் ஒன்றுகூடலாம் என்பதே" என்றாள்.

அடுத்தநாள் சாயங்காலம் வீணை ரிப்பேர் செய்து வந்துவிட்டது. அன்று அந்த வீடு மங்களகரமாகத் தென்பட்டது. டாக்டர் முதலிய யாவரும் நரேன் அறையில் கூடினார்கள்.

"அம்மா மாலதி, நீ அவன் பக்கத்திலுள்ள ஸ்டூலின்மீது உட்கார்ந்து, வீணையின் குடம் அவன் பார்வையில் விழும்படி வைத்துக்கொண்டு, 'அவன் எப்பொழுதும், பிரியமாக வாசிக்கும் ராகத்தை வாசி!" என்றார் டாக்டர்.

மாலதி வீணையை எடுத்து மடிமீது வைத்ததும் அவள் தேகமும் மனமும் நடுங்கின. விரல்கள் வீணையை மீட்ட மறுத்தன. அவ்வீணையைத் தொடுவதற்குத் தான் அருகதையற்றவள் என்ற எண்ணம் அவள் மனதில் ஊன்றிவிட்டதால் அவள் நிலைமை சங்கடமாகிவிட்டது. மறுக்கவும் முடியாமல் வாசிக்கவும் முடியாமல் தத்தளித்தாள்.

இவளது தடுமாற்றத்தைக்கண்ட மாதவன், "மாலதி தைரியத்தைக் கைவிடாதே. இது ஓர் சோதனை. வெற்றிபெற்றால் உலகிற்கே நன்மை செய்தவளாவாய், முன்னேக்கிச்செல்" என்றான்.

வீணையை மீட்டினாள். ஸா. பா என்ற சுரத்தின் நாதத்தை மீட்டினதும், நரேன் தன் ஹ்ருதயத் தந்தியை மீட்டினதுபோல் கண்ணை விழித்தான். காபி ராகத்தை ஆலாபனம் செய்தாள். அப்பொழுது வீணையையும் மாலதியையும் மாறிமாறிப் பார்த்துக்கொண்டிருந்தான். பிறகு "இந்த ஸௌக்கியமனே" என்ற பாட்டைப் பாடிக்கொண்டே வாசித்தாள். அநுபல்லவி பாடி சரணம் பாடத் துவக்கினதும் அவனும் மெதுவாகப் பாடிக்கொண்டே வந்தான். அது முடிந்தது.

அவள் மனோபாவம் கிளர்ச்சியை உண்டு பண்ணிற்று. அந்த நிலைமையில் உணர்ச்சி ததும்ப முகாரி ராகத்தில்,

"தஸ்மாத் பிரணம்ய ப்ரபிதாய காயம்।
பிரஸாதயே த்வாம் அஹமீச மீட்யம்॥
பிதேவ புத்ரஸ்ய ஸகேவ ஸக்யு:।
ப்ரிய: ப்ரியா யார்ஹஸி தேவ ஸோடும்॥"

என்ற சுலோகத்தை, மனோவேதனையைச் சித்திரிப்பதுபோல் பாடிக்கொண்டே வாசித்தாள். அவள் வேண்டுகோள் அங்கிரிக்கப்பட்டது. மாலதியையும் வீணையையும் மாறி


S. B. MANIAN

CAUVERI AGENT

KUTTALAM.

Aavilable all kinds of news papers both English and Tamil and Novel Books and Pictures.

218544

மாறிப்பார்த்துக்கொண் [illegible]தவன் "இது என் வீணையா? ஒன்று[illegible]ட்டதா?" என்று கேட்ட வண்ண[illegible]டுக்கென வீணையை வாங்கித் தனது மார்[illegible]ன்மீது சாத்திக்கொண்டான்—மீட்டி[illegible]—பாஸ்கரனைக்கண்ட பங்[illegible] அவள் முகம் மலர்ந்தது. "இது எப்படி ஒன்றுகூடிற்று?" என்று கேட்டான்.

"நான்தான் ரிப்பேர் செய்தேன். ஒட்டுவது ஒன்றும் சிரமமாக இல்லை. லேசான ரிப்பேர் தான். பழய நாதம் இருக்கிறதா? பார்" என்றார் வயோதிகர்.

"ஐயா உமக்கு மிக்கவந்தனம். தாங்கள் எனக்குச் சமாதானமாகச் சொல்லுகிறீர்கள். இதை ரிப்பேர்செய்ய நீங்கள் மிகவும் சிரமப்பட்டிருக்கவேண்டும், உடைந்த வீணை என் கண்முன்னே நிற்கிறது. ஒன்றுகூடாது என்றே நினைத்தேன். சந்தோஷம் பழைய நாதம் அப்படியே இருக்கிறது. உங்களுக்கு நான் என்றும் கடமைப்பட்டவனே" என்றான்.

"நரேன், உனது பக்தி, பற்று, குணம் யாவும் வியக்கத்தக்கனவே. என் கவலையைத் தீர்த்தாயே, அதுவே பெரும் பாக்கியம்" என்றார் ராகவய்யா.

"அப்பா, என் வயிற்றில் பாலை வார்த்தாய்" என்றாள் மாலதியின் தாய்.

"நரேன், உன் வீணை சரித்திரப்ரசித்தி பெற்றுவிட்டது" என்றார்கள் ராமுவும், மாதவனும்.

மாலதி பதுமைபோல் அவனைப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தாள்.

"மாலதி! என் தந்தையின் வாக்குப் பொய்யாகவில்லை. என் குலதனம் மறுஜன்மமடைந்தது" என்றான். உணர்ச்சி மிகுதியினால் கண்களை மூடிக்கொண்டான்.

"அவனிடம் அதிகமாய்ப் பேசக்கூடாது" என்று டாக்டர் சொன்னபடியினால் யாவரும் வெளியே சென்றார்கள்.

வயோதிகருக்கு அளவில்லாமல் மரியாதையும் பரிசும் கிடைத்தன. மாலதி அவர் காலில் விழுந்து நமஸ்கரித்தாள். அதிலிருந்து நரேனுக்கு உடம்பு படிப்படியாகக் குணமடைந்து வந்தது. எழுந்து நடமாடும் நிலைக்குச் சில தினங்களிலேயே வந்துவிட்டான். நரேன் பிழைத்து எழுந்ததில் ஒவ்வொருவர் மனதில் ஒவ்வொருவித எண்ணங்கள் தோன்றின.

"நல்லவேளை. பழிச்சொல், பிரும்மஹத்தி தோஷம், இவைகளிலிருந்து தப்பினோம்" என்று நினைத்தார் ராகவய்யா.

"இந்தமட்டும் பிழைத்தெழுந்தானே அதே பாக்யம்" என்று தாயன்பால் நினைத்தாள் மாலதியின் தாய்.

மாதவன், இனிமேல் நரேனின் வாழ்க்கைச் சக்கரத்தை ஓடவிடப் பாதை தேடிக்கொண்டிருந்தான்.

"இதுவரை ஓர்விதக் கவலை. [illegible] முடிவில்லாக் கவலை. நரேன் எவ்விதமான வாழ்க்கையை எதிர்பார்க்கிறாரோ? மாதவன் என்ன ஏற்பாடு செய்வானோ. தந்தையின் மனம் நோகலாகாது. நரேன் என்ன செய்யப் போகிறார்? தன்னிடம் வெறுப்பில்லை. விருப்பம் என்றும் நிச்சயிக்க முடியவில்லை. என்ன செய்வது" என்ற பிரச்னையினால் தவித்தாள் மாலதி.

வீணை உடையும் முன் எல்லோரும் எப்படியிருந்தார்களோ அ[illegible] நடந்துவந்தார்கள். மாலதி[illegible]ரேனும் தனிமையில் சந்திக்கும்படி[illegible] சந்தர்ப்பம் ஏற்படாமல் கவனமாய் நடந்தாள் மாலதி. "அவன் பூரண சுகம் அடையும்வரை, அவன் மனதில் எவ்வித அதிர்ச்சியும் ஏற்படக்கூடாது. தனிமையில் மாலதி ஏதாவதுசொல்லிவிட்டால்?" என்பதற்காக, மாதவன் ஏற்படுத்தின திட்டம் இது. வீணை உடையும் தினம், நரேனது கச்சேரியை அனுபவித்த வடக்கேயுள்ள ஓர் [illegible]ஸ்தான வித்வான், தங்கள் சமஸ்தானத்தில் ஓர் சங்கீதப் பள்ளிக்கூடம் வைக்கப்போவதாகவும், அதை ஏற்று நடத்த நரேனை அனுப்பிவைத்தால் தக்க ஸௌகரியங்களும் சம்பளமும் கொடுப்பதாகவும் எழுதியிருந்தார். இரவு வெளியிலிருந்துவந்தவுடன், மாதவன் இவ்விஷயத்தைச் சொன்னதும், அன்று இருந்த மன நிலைமையில், மாலதியைப் பிரியும், எந்த விஷயமும் அவனுக்கு வெறுப்பாகத் தோன்றினதால், சரியான பதில் சொல்லவில்லை நரேன்.

நரேனின் உடம்பு பூரண சுகத்தை அடைந்துவிட்டது. ஆனால் மனம் ஓர் விஷயத்தையும் தீர்மானம் செய்ய முடியாமல், அலைகடல் துரும்பெனத் தத்தளித்தது. மத்யானம் மூன்று மணி இருக்கும். நரேன் தனது அறையில் கட்டிலில் படுத்துக்கொண்டிருந்தான். மனம் எங்கெல்லாமோ சஞ்சரித்துக்கொண்டிருந்தது. "தானும் மாலதியும் வகுத்த தி[illegible]டங்களின்படி நடக்க முடியுமா? வீணை உ[illegible] பிறகு மாலதியின் மனம் மாறியிருப்பதுபோ[illegible] தோன்றுகிறதே? தனிமையில் ஒரு சம[illegible] கூட காணமுடியவில்லையே. ஆனால் என்னிடம் வெறுப்புற்றவள்போலும் தோன்றவில்லையே. விஷயம் யாருக்காகிலும் தெரிந்து அவளை எச்சரித்திருப்பார்களோ? அதனால் நாம் இவ்விடமிருப்பது அவளுக்குத் துன்பத்தைக் கொடுக்குமோ? குருவின் ஆணைதான் என்ன? வீணை ஏன் உடைந்தது? அவள் அன்புக்குப் பாத்ரமற்றவளா? அப்படியானால், வீணைச் சம்பவத்திற்குப்பின் வெறுப்புத் தோன்றவேண்டுமே. எனக்கு அவளிடம் ப்ரேமையே விருத்தியாகிறது. அவளது கண்கள் எவ்வளவோ விஷயங்கள் பேசுகின்றன. என்ன செய்வது? அன்று மாதவன் சொன்ன சமஸ்தானத்திற்குச்செல்லுவோமா? சென்றால் நிம்மதி கிடைக்குமா? மாலதியை மறக்க முடியுமா?" என்று சிந்தனைக் கடலில், எண்ணங்களான அலைகள்வந்துவந்து கலைந்தன.

(தொடரும்)

Edited & Published by N. R. Ramanujan B. A. & Printed by S. Rangaswami B. A.
at The Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

# ஒரு நற்செய்தி

JL
M24,N41KV
N44.3.6

பல அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி அநேக உயரிய நூல்களை வெளியிடத் தீர்மானித்துள்ளோம்.

சிறந்த எழுத்தாளர்கள் எமக்கு உதவி புரிய இசைந்துள்ளார்கள்.

**கதைக்கொத்துகள், பொருளாதார சம்பந்தமான நூல்கள், அரசியல் புத்தகங்கள் முதலியன வெளியிடப்படும்.**

தமிழன்பர்கள் நம்மை ஆதரித்துதவுமாறு வேண்டுகின்றோம்.

**முதல் வெளியீட்டை எதிர்பாருங்கள்**

**காவேரி காரியாலயம்**
கும்பகோணம்.

Regd. No. M. 4405

CAUVERI

REGISTRAR
15 FEB
MADR

T. S. R.

டி. எஸ். ஆர்.






மூளைக் குளிர்ச்சிக்கும்
கேச வளர்ச்சிக்கும்
நறுமணத்திற்கும்
நிகரற்ற தைலங்கள்

**கோகுல் தைலம்**

**தேங்காயெண்ணை தைலம்**

ரக ரகமான ஊதுபத்திகளும்
வாசனைத்திரவியங்களும் கிடைக்கும்

சென்னை ஸோல் ஏஜண்டு
**புஷ்பவனம் ஸ்டோர்ஸ்**
திருவல்லிக்கேணி—மதராஸ்




**T·S·R·& Co**

**PERFUMERS**
**KUMBAKONAM**

PRINTED AT THE CAUVERI COLOUR PRESS; KUMBAKONAM